நச்சுப் பொய்கை

அல்லது

நாரியர் வேட்கை.

கோவை, அ. அய்யாமுத்து.

நச்சுப்பொய் கைக்கதையின் நாடகந்தான் நஞ்சல்லி
இச்சகத்தில் மூவா மருந்தென்பேம்—இச்சரிதம்
செய்தான்அய் யாமுத்து செந்தமிழில் ஈங்கிதற்கோர்
கைம்மாறுண் டாமோ கழல். *Rev. Francis Kingsbury, B. A.*

COPY RIGHT REGISTERED.

சாரதா அச்சுக்கூடம், திருப்பூர்.

முதற் பதிப்பு] 1934. [விலை அணா ௨

சமர்ப்பணம்.

நாடகத்தில் எனக்கு நற்சுவையூட்டிய

மதுரை தேவி பால விநோத சங்கீத சபாவின்

அமைப்பாளரும், நிர்வாகியும்,

நடிகருமான

நவாப், T. S. இராஜமாணிக்கம்

அவர்கட்கு

அன்புடன் சமர்ப்பிக்கப்பட்டது.

முன்னுரை.

இந்நாடகத்தில் நமது நாட்டின் உண்மை நிலையைச் சித்திரித்துக்காட்ட முயன்றிருக்கிறேன். இதிற் காணப்படும் அச்சுப் பிழைகளை அன்பர்கள் திருத்தி வாசிக்கவும். இலக்கியக் குறைபாடுகளும் இருக்கலாம். அவற்றை அறிவிப்போருக்கு நன்றி செலுத்துவேன். நாடகம் இயற்றும் ஆற்றல் எனக்கில்லை. உணர்ச்சியின் மிகுதியால் இது எழுதப்பட்டதால் அன்பர்கள் குற்றங் குறைகளை மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

குறிப்பு:– இந்நாடகத்தை நடிக்க விரும்புவோர் என்னுடைய எழுத்து மூலமான அநுமதியைப்பெறுதல் அவசியம்.

திருப்பூர்.
16—7—34.

கோவை, அ. அய்யாமுத்து,
C/o, காதி வஸ்திராலயம்.

பாராட்டுரை.

ஆசிரியப்பா.

மாநிலத் தீரே! மாநிலத்தீரே!
பல்வகைப் பிறப்பினும் நல்லதாகிய
மானிடப் பிறப்புறு மாநிலத்தீரே!
தீஞ்சுவை அமுதினைத் தீயநஞ் சாக்கியுண்
பேதையர் போல மேதகு காதல்
வாழ்வினைக் கெடுத்துப் பாழ்விபசாரம்
செய்துதாம் கெட்டுப் பிறரையும் சிதைத்தல்
ஆறறிவுடையவர்க் கழகோ புகலீர்?
இழிவிப சாரம் ஏறுதற் கான
செல்வச் செருக்கும் தீமது அருந்தலும்
சிறுவர் மணமும் சீக்கிரம் ஒழிந்து
சால நம்நாடு தழைக்க வென்றே
இயலுமா முயலல்நம் கடமை யன்றோ?
அத்தகு கடமை யாற்றமுன் வந்தே
தூச்சனர் வீழும் நச்சுப் பொய்கையாம்
விபசா ரத்தின் விளைவினை விளக்கி
நாடகம் ஒன்றினைப் பீடுற எழுதி
வெளியிட் டுதவினன் மேதினி சமத்துவம்
அடைகெனும் விருப்பே வடிவெடுத் தனையவன்
அகத்துறு கருத்தெலாம் மிகத்தெளிவாக
அஞ்சாதுரைக்கும் வஞ்சமில் வீரன்
பாரத நாட்டின் ஏழையர்க் காக்கும்
காதிவஸ்த் ராலயக் காரியநிர் வாகன்
அய்யாமுத் தென தம்மான்
மெய்யே நற்பயன் மிகவிளைத் திடுமே.

கோவை, கு. நடேசன்.

19214

நூன்முகம்.

நலம். மக்கள் யாக்கை எய்தற்கரிய தென்பர். புண்ணிய வசத்தான் அதனைப் பெற்றோர், அதுகொண்டு செய்தற்குரிய அறங்கள் பல செய்து நல் வாழ்வில் வாழுதல் வேண்டும். உலகில் வாழ்க்கை செவ்விதின் நடைபெறற்கு இன்றியமையாத கருவியாக வுள்ளது செல்வமே. அஃதில்லையேல் வாழ்க்கையின்பம் பலவுந் துய்த்த லியலாது. அச் செல்வம் தன் முன்னோரான் அரிதின் முயன்று ஈட்டப்பட்டுத் தனக்குரிமை ஆயதும், தானே முயன்று தேடத் தனக்குரிமை ஆயதும் என இருவகையானே ஒருவர்க்குளதாவது. இங்ஙனம் உளதாகிய செல்வத்தை பிறர்க்கும் பயன்படுத்தித் தானும் நல்வழியானே துய்த்தல் ஒருவர்க்கழகாகும். மற்றதனைக் கூடா ஒழுக்கங்கொண்டு தீய வழியான் நுகர்தல் ஏற்புடையதன்று. அத் தீய நுகர்ச்சியினால் வறுமை மேலிட்டு உடல் பல்லாற்றானும் மெலிந்து ஒருவரது வாணாள் வீணாளாய்க் கழிகின்றது. இஃதெத்துணை இழிவுடையது என்பது நுணுகிப் பார்ப்பார்க்குத் தெளிவாம். தீய ஒழுக்கங்கள் பல, அவற்றுள்ளே பொய்யை மெய்யாகக் காட்டியொழுகும் பரத்தையரோடு மருவி வாழ்தலும், பிறன் மனையாளைப் பேணி வாழ்தலும் அதி பாதகச் செயல்களாம். இத்தகைய அதி பாதகச் செயல்களில் புக்குழல்வோர் மக்கட் பிறப்பின் மெய்ப்பயன் துய்த்தவராகார். எனவே, இப்பெருங் கொடுஞ் செயலினது இழிவை புலப்படுத்தி, அதில் வீழ்ந்தாரையும், வீழ்வாரையும் எடுத்தலும், தடுத்தலும் சிறந்ததோர் பேரறமாம். அங்ஙனம் நல்வழிப்படுத்தற்குரிய அற வழிகள் பல. அப் பலவற்றுள், புனைந்துரைவகையான் நூலினையாக்கி, அதன்மூலம் நல் வழிப்படுத்த முயல்வது ஒரு வழி. அவ்வழியானியன்றது "நச்சுப் பொய்கை" என்னும் இந்நூல். இதனை யேற்றுப் படிப்பவர் பயன் பெறுவர் என்பது திண்ணம். படித்தறிய இயலாதார்க்குப் படித்துக் காட்டிப் பயன் படுத்துவர் கல்வியறிவைப் பெற்ற நல்லோர். இந்நூலை யாக்கியோர் நண்பர் அய்யாமுத்து என்பவர். நமது தாய் நாடு எவ்வழியானும் முன்னேற்றமடைந்து பெருமையடைதல்வேண்டும் என்பது அவரது குறிக்கோள். சீரிய அந் நன்னோக்கத்தையுடைய அய்யாமுத்து அவர்கள் இதுபோலும் மக்கட்கு நல்லறிவு புகட்டும் தீஞ்சுவைக் கதை நூல்கள் பலவெழுதித் தமிழ் நாட்டிற் பரப்புமாறு சிதறாத சிந்தையும், காலமும், இடமும் அவர்க்கு வாலிதின் அமைவதாக! அவரதறச் செய்கைகள் மதிப்புக்குரியவாகுக! நலம்.

கோவை.
14—7—34.

சி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை.
தலைமைத் தமிழாசிரியர், முனிசிபல் உயர்தரப்பாடசாலை.

நாடக பாத்திரங்கள்.

கிருஷ்ணகாந்தன்.	*செங்கோட்டை ஜமீன்தார்.*
பார்த்தசாரதி.	*கிருஷ்ணகாந்தனின் தோழன்.*
ராமமூர்த்தி.	*ஒரு மிராசுதார்.*
சடகோபய்யங்கார்.	*ஒரு பாங்கர்.*
முருகேசன்.	*ஒரு குடியானவன்.*
சொர்ணமுத்துப்பிள்ளை.	*போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்.*
க. மு. கி. முருகப்பசெட்டியார்.	*ஒரு பாங்கர்.*
கோதைநாயகி.	*சடகோபய்யங்காரின் மனைவி.*
பார்வதி.	*முருகேசன் மகள்.*
கருப்பாயி.	*முருகேசன் மனைவி.*
திலகவதி.	*ராமமூர்த்தியின் மனைவி.*
மீனாம்பிகை.	*ஒரு வேசி.*
சரஸ்வதி.	*கிருஷ்ணகாந்தனுக்கு நிச்சயிக்கப் பட்டவள்.*
கமலவேணி.	*கிருஷ்ணகாந்தனின் தாயார்.*
சரஸ்வதியின் தாயார்.	

கோவிற் குருக்கள், சிவ பக்தர்கள், சதிராடும் பெண், சின்ன மேளக்காரர், ஜட்ஜு, ஜூரர்கள், வக்கீல்கள், போலீஸ் இன்ஸ் பெக்டர், போலீஸ் சேவகர், டாக்டர், குறத்தி, சமையற்காரர்கள், குழந்தைகள் முதலானோர்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்
9	18	ஜாக்கிறதை	ஜாக்கிரதை
11	13	சீக்கிறம்	சீக்கிரம்
15	18	அருவறுப்பாய்	அருவருப்பாய்
18	9	கேட்விட்டு	கேட்டுவிட்டு
25	5	தோழை	தோளைத்
25	12	சதுர்க்கச்சேரி	சதிர்க்கச்சேரி
28	6	பார்த்	கிரு:
29	14	மாருகிறது	மாறுகிறது
41	28	தவிரித்து	தவிர்த்து
42	4	சாமார்த்தியமாக	சாமர்த்தியமாக
42	22	நஞ்சேரி	நஞ்சேறி
55	29	———	குரு: ஆம்
57	15	ஊடுறுவி	ஊடுருவி
61	28	பத்துமணி.	20-மணி
62	18	போலீஸில்	அவன் போலீஸில்
67	18	வட்சுமி	லட்சுமி
71	19	உமார்காயம்	உமார்காயம்
74	27	தில: அவள் தாயும்	சர: அவள் தாயும்
75	24	தில:	சர:
83	2	செப்பறிய	செப்பரிய
83	22	நெரிகள் மலியும்	நெறிகள் நலியும்
85	16	சுட்டா	சுடடா
85	24	இருதியில்	இறுதியில்
87	19	இவ்வாரு	இவ்வாறு
88	11	ஆராது	ஆருது
88	13	புறண்டாலும்	புரண்டாலும்
89	16	கூறுவார்	கூறுவர்
90	8	இவன்	இவள்

நச்சுப்பொய்கை.

ஒரு நவீன நாடகம்.

முதற் காட்சி.

இடம்: ரோடு.

சமயம்: சாயுங்காலம்.

[பார்த்தசாரதி என்ற "மைனர் மேக்கர்" தனிமையாகப் பேசிக்கொண்டிருக்கிறான்.]

பார்த்தசாரதி: உலகமெல்லாம் பஞ்சமேற்படினும் எனக்குப் பஞ்சத்தின் வாடையே அடிபடாது. அப்படியிருக்கக் கடந்த பல வாரங்களாகக் காசுக்கு பேஜாராயிருக்கு. மைனர்கள் யாரும் அகப்படவில்லை. சென்னையிலிருந்து கிருஷ்ணகாந்தன் வந்திருப்பதாகக்கேள்வி. அவன் எப்படியாவது என் வலையில் வீழ்ந்தால் சில வருஷங்கள் நிம்மதியாகக் காலம் கழிப்பேன். ஆனால்அவன் தன் தகப்பனைப்போல் ஒரு கர்னாடகப்புடுங்கலாகத் தென்படுகிறான். சென்னை வாசமும், காலேஜ் வாசிப்பும்அவனை நவநாகரீக புருஷனுக்காதது மெத்த அதிசயமாத்தானிருக்கு. ஒருகால் உலகை ஏமாற்ற ஒரு பகட்டாகஇருந்தாலும் இருக்கலாம். அதோ! யார் வருவது? அவன்போலத்தானிருக்கு.

[கிருஷ்ணகாந்தன் வருகை.]

பார்த்: வாருங்கோ சார்! வாருங்கோ! கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாப்போலிருக்கு. ஏதோ ஆங்கிலத்திலே "டெலிபதி" என்று ஒன்று இருப்பதாகக் கூறுகிறார்களே அது மெய்தான் போலிருக்கு! தங்களைக்காணலாமென்று எண்ணிக்கொண்டே வந்தேன். தாங்கள் இதே வழியில் என்னை எதிர்நோக்கி வருவது என்ன ஆச்சர்யம் பாருங்கோ!

கிரு: *பார்த்தசாரதி! உன்னைக்காண எனக்கு மிகவும் சந்தோஷம் பால்ய காலத்தில் நீ செய்த சேஷ்டைகளையெல்லாம் நான் இன்னும் மறக்கவில்லை. ஏது ஒருவாறு முகவாட்டமாய் இருக்கிறாய்? உனதப்பா சௌக்கியமாயிருக்கிறாரா?*

பார்த்: *என்ன இது தெரியாதா உங்கட்கு? தங்களுடைய தகப்பனார் இறந்த எட்டு தினங்களுக்குள் எனதப்பாவும் எமனுலகு சென்றார். தங்கள் தகப்பனாரின் பிரிவை அவரால் தாங்க முடியவில்லை. [அழுகிறான்.]*

கிரு: *போகட்டும் அழாதே, என்ன செய்வது? எல்லோரும் ஒரு நாளைக்குப் போகத்தானே வேண்டும். நீ இப்போது எப்படி காலங்கடத்திக்கொண்டிருக்கிறாய்?*

பார்த்: *பேங்கர் சடகோப அய்யங்கார் இருக்காளே அவா ஆத்திலே கார்யம் பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் சென்ற மாதம் மூன்றும் முறையாக ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டார். அதன் பிறகு, ஏதோ என்மேல் அவருக்கு நம்பிக்கை குறைவு ஏற்பட்டுவிட்டாப்போலிருக்கு, என்னை வேலையினின்றும் நிறுத்திவிட்டார். நான் யாதொரு ஜோலியுமின்றி சும்மா அலைந்துகொண்டிருக்கிறேன். தங்களைப் பார்த்தபின் எனக்குக்குறைவொன்றுமேற்படாது.*

கிரு: *அதற்கென்ன சந்தேகம்? உனக்கு உதவி செய்யாமற் பிறர் யாருக்கு யான் உதவக்கூடும்? அஃதிருக்கட்டும், சடகோபய்யங்காருக்கு வயதுஅறுபதுக்குமேலாகியிருக்குமே அவருக்குப்பெண் கொடுத்தது யார்? அவருடைய மூத்த மனைவிகள் இருவரும் கிணற்றில் வீழ்ந்து இறந்துவிட்டனராமே! அப்படியிருக்க மூன்றும் தாரம் யார் கொடுத்தது?*

பார்த்: *நன்னாச்சொன்னீங்கோ. இக்காலத்தில் வயதையும் பிறிதையும் யார் கவனிக்கிறு? பணம் ஒன்றிருந்தால் போதாதோ? சடகோபய்யங்காருக்கு ஆஸ்தி ஒரு லட்சமிருக்குமென்று சொல்றாளே!*

கிரு: *அதற்கதிகமாகவுமிருக்கலாம், ஆனால் பெண் யார்?*

பார்த்: உங்கள் மாளிகைக்கு எதிரில் குடியிருக்கும் ஜனகத்தின் மகள் கோதை.

கிரு: அடடா! அவளா? நல்ல ரூபவதியாயிற்றே! சின்னஞ்சிறுமி அடிக்கடி அவளை நான் பரிகாசம் செய்வதுண்டு. நன்றாக ஹார்மோனியம் வாசிப்பாள். அவளுக்கா இக்கதி நேர்ந்தது?

பார்த்: என்ன அவள்மேல் தங்கட்கு இவ்வளவு அனுதாபம்?

கிரு: என்னமோ இச்செய்தி கேட்டதிலிருந்து என் புத்தியே சுவாதீனமிழந்துவிட்டாப் போலிருக்கின்றது. என்னைக்கல் யாணம் செய்துகொள்வாயா என்று நான் அவளைப் பரிகாச மாய்க் கேட்கும்போதெல்லாம் அவள் ஆகட்டும் ஆகட்டும் என்று சொல்வதுண்டு இன்னும்........

பார்த்: இன்னுமென்ன? தங்கள் பொருட்டாகத்தான் அவள் உயிர் வாழ்வதாக என்னிடமும் சொல்லியிருக்கிறாள். நீங் கள் இதை நான் சொன்னால் நம்பமாட்டீங்கோ.

கிரு: என்ன நீ சொல்வதொன்றும் எனக்கு விளங்கவில்லையே! அவள்எப்போது உன்னிடம் அவ்வாறு தெரிவித்தாள்?

பார்த்: கல்யாணமான மறுவாரமே சொன்னாள்.

கிரு: உன்னிடம் சொல்லவேண்டிய சந்தர்ப்பமும் அவஸ்யமும் அவளுக்கென்ன ஏற்பட்டது?

பார்த்: நான்தான் அங்கு கார்பார் நடத்திக்கொண்டிருந்ததாக ஏற்கனவே தெரிவித்தேனே! ஒருநாள் அய்யங்கார் இல்லாத சமயம் அவளே தங்களைப்பற்றி விசாரித்தாள்.

கிரு: என்ன விசாரித்தாள்? அவள் என்ன கேட்டாள்? நீ என்ன சொன்னாய்?

பார்த்: கிருஷ்ணகாந்தப் பிரபு எப்போது வருவார் என்று கேட் டாள். நான் ஏன் என்று கேட்டேன். பின்னர் தங்கள் பொருட்டே அவள் வாழ்வதாகச்சொன்னாள். தாங்கள் அவஸ்யம் ஒருமுறையாவது அவளைச் சென்று பார்த்து வர

வேண்டும். ஆனால் நான் சொல்லியனுப்பியதாக சொல்லாதீர்கள். தாங்களாகவே சென்றதாக அவளுக்குத்தெரிவது தான் நல்லது.

கிரு: நல்லது எப்போது போகலாம்?

பார்த்: அதற்கென்ன எப்போ வேணுமானாலும் போகலாம். தாங்கள் இங்கேயே நில்லுங்கள், நான் சென்று அய்யங்கார் இருக்கிறாரா இல்லையாவென்று பார்த்துவிட்டு வருகிறேன்.

கிரு: நல்லது விரைவில் வா.

பார்த்: நான் தாமதம் செய்வேனா என்ன. [செல்கிறான்.]

கிரு: [கனித்து] இது ஒரு நல்ல "சான்ஸ்" நமக்கு ஏற்படப் போகிறது. ஆனால் இந்த கார்யத்தில் பிரவேசிக்க சற்று அதைர்யமாகவே இருக்கிறது. மனதை தளரவிடக்கூடாது. இம்மாதிரி "ரொமேன்ஸ்" இல்லாத வாழ்வென்ன வாழ்வு? இவ்வளவு காலம் மதியீனமாய்ச் சென்னையில் கழித்துவிட்டேன். இனி அப்படி இருப்பது தகாது. நமது அந்தஸ்துக்குக்குறைந்தது ஒரு நூறு உருப்படிகளையாவது "டேஸ்ட்" செய்து பார்க்கவேண்டும்.

[பாத்தசாரதி வருகை.]

கிரு: ஹலோ! எவ்வளவு விரைவில் வந்துவிட்டனை?

பார்த்: என்னவேடிக்கை! தங்கட்கு என் உயிரையே அர்ப்பணம் செய்யக் காத்துக்கொண்டிருக்கேன். இதைப்போல் ஆயிரம் வேண்டுமா? சொல்லுங்கோ ஒரு நொடியில் ஏற்பாடு செய்துவிடரேன்.

கிரு: சரி, சரி உன் விஷயம் எனக்கு நன்றாய்த்தெரியும். நாம் போகலாமா?

பார்த்: பேஷாய் போகலாம். அய்யங்கார் வெளியே போயிருக்கா தெருக்கதவு தாளிடப்பட்டிருக்கு. கொல்லைக் கதவு வழியாய் தாங்கள் செல்லுங்கள். நான் தெருவில் காத்துக்கொண்டிருக்கேன்.

கிரு: சரி, வா போகலாம். [இருவரும் போகின்றனர்.]

இரண்டாம் காட்சி.

இடம்: சடகோபய்யங்கார் வீடு.

சமயம்: சாயுங்காலம்,

[கோதைநாயகி வயது 15, கிருஷ்ண காந்தன் வயது 20. கள்ளக்காதலன். இருவரும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

கிரு: கோதை! இஃதென்ன கொடுமை! இக்கிழப் பிணத்திற்கு உன்னையேன் கட்டிக்கொடுத்தனர்?

கோ: என்ன ஒன்றும் அறியாதவர்போல் பேசுறேள்? என் தாய்தான் ஒரு ஏழைக் கைம்பெண்ணாயிற்றே. நல்ல மாப்பிள்ளை தேடுவதென்றால் நாலாயிரம் வேண்டுமே. அவள் என்ன செய்வாள்? எல்லாம் என் தலை விதி.

கிரு: கண்ணே! கவலையொழி. நானிருக்கும்வரை உனக்கென்ன கவலை. சடகோப அய்யங்கார் பெயரளவில் உனக்குப் புருஷராயிருக்கட்டும். உன் கண்ணுக்கினிய காந்தன் நானிருக்கிறேனல்லவா?

கோ: ஆம்! உம்மையே மணக்க எண்ணினேன். இளம் வயதிருந்தே நாமொருவரையொருவர் நேசித்து வந்தோம். என் செய்வது? பாழுஞ் சாதி யொன்றால் என் எண்ணம் ஈடேறவில்லை. அம்மட்டோ! நாமிருவரும் ஒரே சாதியினராய் இருந்திருப்பினும் தங்கள் தாயார் என்னைக்கொள்வாளோ? நீரோ பெரிய பிரபு. நானோ ஒரு ஏழைக்கைம்பெண்ணின் மகள். உண்மைக்காதலைக்கொல்ல உலகில் எத்துணை வேற்றுமைகள்! [முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பி அழுகிறாள்.]

கிரு: கண்மணி கவலைப்படாதே! இன்று நாமிருவரும் கூடிச்சுகித்தோமல்லவா? வேற்றுமை என்ற கூற்றுவன் எங்கே? நாமவனைக்கொன்றுவிட்டோம். கலங்காதே!

கோ: கலக்கமின்றி எவ்வாறிருக்கமுடியும்? கள்ளத்தனமாய் நாமிவ்வாறு கூடுதலை உலகோர்கண்டிடில் நம் கதிஎன்னுவது?

என் மனதைத்திடப்படுத்த என்னால் முடியலே. நான் உமக்கு அடிமையாயினேன். பெரிய பிரபுவாகிய உமக்கு என் போன்ற எண்ணற்ற அடிமைகள் வாய்த்தற்கூடும். என்னை நீர் வாழ்விலும், தாழ்விலும் ஆதரித்துக்காப்பீர் என்று என்னால் எவ்வாறு நம்பற்கியலும்?

கிரு: பேதைப்பெண்ணே! உனக்கேன் இத்தகைய சந்தேகம் உன்னை நான் என்றும் மறவேன் என்பது நிச்சயம்.

கோ: மறவாதிருந்து பயன் என்ன? நன்மை தீமையாகிய சகலமும் நாம் மறவாதுதான் ஞாபகத்தில்வைத்திருக்கிறோம். என் கற்பை அழித்ததையும் என்னோடு இன்று சுகித்ததையும் நீங்கள் மறவாதிருப்பதால்மட்டும் என வாழ்க்கை இன்பமுறுமா? உலக அபச்சொல்லை மதியாது என்னைத்தாங்கள் தமது உண்மைக்காதலியாக ஏற்று இல்லறம் நடத்துவீர்கள் என்று நான் நம்பக்கூடுமா?

கிரு: கண்ணே! காலம் கைகூடும். கவலைப்படாதே!

[கதவு தட்டும சப்தம். கிருஷ்ணகாந்தன் பரபரப்பாய்க் கொல்லைப்புறக் கதவு வழியாய்க்கம்பி நீட்டுகிறான். கோதை கதவைத்திறந்ததும அவள் கணவன் 60 வயதுள்ள சடகோபய்யங்கார் பிரவேசிக்கிறார்]

சட: பேஷ்! நீயே பதிவிரதை! தெருக்கதவை நானில்லாத சமயம் எப்போதும் தாளிட்டுவை என்று சொன்னவாறே செய்கின்றனை. கணவன் சொற்படி நடப்பவளே கற்புடைய மங்கை. கணவனே கண் கண்ட தெய்வம். இதோ! உனக்கோர் காஞ்சீபுரம் பட்டுப்புடவை வாங்கி வந்திருக்கேன். உன் மனதுக்கு பிடித்ததா என்று பார்.

கோ: [புடவையைப்பெற்றுக்கொண்டு மௌனமாக உள்ளே செல்லுகிறாள்.

[கிருஷ்ணகாந்தன் பிரவேசம்.]

சட: யாரது? கிருஷ்ணகாந்தனா? சென்னையிலிருந்து நீ வந்து நான்கு தினங்களாயிற்றென்று உன் தாயார் இன்று காலையில் தான் தெரிவித்தனள். நீயேன் இப்பக்கம் வரவில்லை?

கிரு: இல்லை. நான் வந்தபொழுதெல்லாம் தெருக்கதவு தாளிடப் பட்டிருந்தது. பேசாமல் பார்த்துத் திரும்பிவிட்டேன். ஊருக்கு வந்து ஒரு நாளேனும் தங்களைப்பாராது நான் சென் றதுண்டா?

சட: இல்லை நீ மிகவும் புத்திமான். தந்தைக்கேற்ற குழந்தை. உன் தந்தை என்னிடத்தில் மிகவும் வாஞ்சை வைத்திருந்தார் அவருக்குப்பின் நீயும் என்மீது சமமான வாஞ்சை வைத் துள்ளதையறிய நான் பேருவகையடைகின்றேன். உன் பரீட்சை முடிந்தாய்விட்டதா?

கிரு: ஆம் B. A. பரீட்சைக்கு எழுதிவிட்டு விடுமுறைக்காக் இங்கு வந்தேன். இவ்வாண்டும் பரீட்சையில் தேருவேன் என்பதில் ஐயமில்லை. அடுத்தவாண்டு B. L. வகுப்புக்குச் செல்ல உத்தேசம். என் தாயின் எண்ணம் என்னவோ, நானறியேன்.

சட: நீ மிகவும் கெட்டிக்காரன். ஒரு பிரபுவின் பிள்ளை தன் படிப்பில் இவ்வளவு சிரத்தை கொண்டிருப்பது அபூர்வம். எனினும் உன்னை விட்டுப்பிரிந்திருக்க உன் தாயாருக்கு மன மில்லை. விரைவில் உனக்கு மணவினை முடித்து உன்னை வீட் டோடு அமர்த்த எண்ணியுள்ளார்கள்.

கிரு: மணவினையா? இவ்வளவு விரைவிலா? எனக்கு விருப்பமில்லை. நான் இன்னும் சில வருஷம் பிரம்மச்சாரியாகவே இருக்கத் தீர்மானித்திருக்கிறேன்.

சட: ஆஹா! நீ எவ்வளவு நல்ல பிள்ளை! சம்சாரசாகரம் பெருந்துக்கமுடையது. நாணிரண்டு மனைவிகளையும் பறி கொடுத்தேன். எனினும் மூன்றும் முறையாக மறு மணம் செய்துகொண்டேன். அந்திய காலத்தில் எனதருகிருந்து சிஷ்ருஷை! செய்வதற்கு ஒருமனைவியில்லாமல் எப்படி முடியும் மக்கள், மரு மக்கள், இருப்பினும் பரவாயில்லை. நானோ ஏகாங்கி. எனது சுற்றத்தார் என்னிடமிருந்து பணம் பறிக்க வருவார்களேயன்றி என்னைப் பராமரிக்க வரமாட்டார்கள். எனது இளைய பத்னி மிகவும் பாக்யசாலி. நான் நாளை இறப்

பினும் அவள் லட்சாதிபதியாய் வாழ்வாள். அவளது அழகையும், குணத்தையுங்கண்டு பரவசப்பட்டே அவளை மணமுடித்துக்கொண்டேன்.

கிரு: இல்லறத்தில் அனுபவப்பட்ட தம்போன்றோர்கள் எவ்வளவு முறையேனும் மணமுடித்துக்கொள்ளலாம். ஆனால் என்போன்ற அநுபவமற்ற பால்யர்கள் எதையும் யோசித்தே செய்யவேண்டியிருக்கிறது. நான் சென்றுவருகிறேன்.

சட: நல்லது. அடிக்கடி இங்கு வந்துவிட்டுப்போ?

கிரு: நல்லது. நமஸ்காரம்.

3-வது காட்சி.

இடம்: ரோடு.

சமயம்: சாயுங்காலம்.

[பார்த்தசாரதியும் கிருஷ்ணகாந்தனும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

பார்த்: என்ன தங்கள் எண்ணம் ஈடேறிற்றல்லவா?

கிரு: ஆம் பேஷாய், நீ ஏற்கனவே அவளுக்கு எல்லாம் சொல்லி வைத்திருந்தாய் என்றே எண்ணுகின்றேன்.

பார்த்: என் ஏதாவது பிரஸ்தாபம் நடந்ததோ?

கிரு: இல்லை, நான் போனவுடன் யாதொரு சடங்குமின்றி என்னை உபசரித்து ஏற்றுக்கொண்டாள். அதிலிருந்தே........

பார்த்: அதிருக்கட்டும். அய்யங்கார் வந்தபின்னர் தெருக்கதவுவழியாக ஏன் மறுபடியும் நுழைந்தீர்கள்?

கிரு: எனது கைக்குட்டையை நாற்காலிமீது வைத்துவிட்டேன். அதிலோ எனது பெயர் எழுதப்பட்டிருக்கிறது. அய்யங்கார் கண்டுகொண்டால் அபாயம். ஆதலால் அவரைக்காணச்சென்றதுபோல் உட்சென்று, அவரையுங்கண்டு பேசிவிட்டு

கைகுட்டையையும் தந்திரமாக எடுத்துக்கொண்டு விடை பெற்றுவந்தேன்,

பார்த்: தாங்கள் அவ்வளவொன்றும் பயப்பட்டிருக்கவேண்டிய தில்லை. அக்கிழட்டுப்பயல் என்ன செய்யமுடியும்? வெளியில் தெரிந்தால் அவனுக்குத்தானே வெட்கக்கேடு!

கிரு: ஆம், அது அப்படித்தான். அவனைப்பற்றி எனக்கு கவலையோ பயமோ கிடையாது. ஆனால் பாவம் அப்பெண் அவனிடம் உதைபடாமலிருக்கவேண்டும்.

பார்த்: உதைபடுவதுதான் நல்லது.

கிரு: ஏன் அப்படிச்சொல்லுகிறாய்?

பார்த்: உதைபட்டால் தாயார் வீட்டுக்கு ஓடிவிடுவாள், பின்னர் தங்கட்கு அவள் புழக்கடைக் கீரைபோலகப்படுவாளல்லவா?

கிரு: அது வாஸ்தவமே. நான் அம்மாதிரி சம்பவத்தை இப்போது விரும்பவில்லை. உலகத்தில் எனக்கு யாரைக்கண்டாலும் பயமில்லை. என் தாயைக்கண்டால்தான் பயம். அவளுக்கு ஏதாவது இவ்விஷயம் தெரிந்தால் அவள் பிராணனே போய்விடும். ஆகையால் நாம் எது செய்தாலும் சர்வ ஜாக்கிறதையோடு செய்யவேண்டும்.

பார்த்: சரி. நாளைக்கு என்ன "புரோகிறாம்"?

கிரு: நாளை நமது தேக்கடித் தோட்டத்துக்குப்போய்வர எண்ணுகிறேன். அங்கு நமது சாலையில் முருகேசன் மகள் இருக்கிறாள். சென்றவாண்டு நான் ரஜாவில் வந்தபோதே அவளைக் கைவைக்க எண்ணினேன். ஆனால் தைர்யம் வரவில்லை. இத்தகைய கார்யங்களில் இறங்கும்வரை பயமாகத்தானிருக்கும். ஒரு முறை அடிபட்டால் எல்லாம் சர்வ சாதாரணமாய் போய்விடுமல்லவா?

பார்த்: அடிமட்டுமல்ல கடியும்படவேண்டும். அடடா நான் பட்ட அடியும், கடியும் கொஞ்சமா நஞ்சமா? சரி நாளை எப்போது புறப்படலாம்?

கிரு: [சற்று யோசித்து] இல்லை நாளை நீ என்னோடு வரவேண்டிய அவஸ்யமில்லை. இங்கேயே வேறு ஏதாவது "சான்ஸ்" பார்த்துவை மறுநாள் நான் உன்னை சந்திக்கிறேன்.

பார்த்: சரி, அப்படியே ஆகட்டும். வேண்டாம் என்றதும் எங்கே "சர்விஸ் டிஸ்மிஸ்" ஆய்விட்டதோ என்று நினைத்தேன் ஆனால் பின்னர் கட்டளை பிறந்ததும் தைர்யம் ஏற்பட்டது. ஏதாவது செலவுக்கு........

கிரு: இதோ [ரகசியமாக ஏதோ தொகை கொடுக்கிறான்.] பத்திரம் நமது காரியங்கள் வெகு ரகசியமாக இருக்கவேண்டும் தெரியுமா? [போகிறான்.]

பார்த்: [தனித்து] பேர்வழி காஞ்சமாடு கம்பில் விழுராப்போல் விழுவானென்று தெரிகிறது. ஏதோ எப்படியோ நமது காலட்சேபம் ஒழுங்காய் நடந்தால் சரி. எனக்கு வேறு என்ன ஆசை? ஒன்றுமில்லை.

4-வது காட்சி.

இடம்: தோட்டத்தில் ஒரு குடிசை.

சமயம்: பகல்.

[முருகேசன் நின்றுகொண்டிருக்கிறான். அவன் மனைவி கருப்பாயி கையில் ஒரு கூடையுடன் நிற்கிறாள். 18வயதுள்ள விவாகமில்லாத அவள் பெண்ணும், வேறு இரண்டு குழந்தைகளும் அருகில் நின்றுகொண்டிருக்கின்றனர். கிருஷ்ணகாந்தன் பிரவேசிக்கிறான்.]

முரு: வாங்கோ எஜமான் வாங்கோ. தாங்கள் எங்கள் குடிசையில் கால்வச்சதும் எங்களைப்பிடிச்ச சனியன் எல்லாம்போச்சு

கிரு: எங்கே எல்லோரும் பிரயாணத்துக்குத் தயாராய் இருக்கிறாப்போல் தெரிகிறது? என்ன விசேஷம்?

கரு: [குடியானவன் மனைவி] இன்று மாரியாய் கோவிலில் பொங்கல். அதற்காகப் போகப்புறப்பட்டோம். தாங்களும் வந்தீங்கோ.

கிரு: அப்படியா? நல்லது. இதோ [பத்து ரூபாய் கொடுத்து] இதைப்பொங்கல் செலவிற்காக வைத்துக்கொள்ளுங்கள். வெளியில் இம்மரத்தடியில் ஒரு கட்டில் போடுங்கள். நான் சற்று சிரம பரிகாரம் செய்துகொள்ளவேண்டும்.

முரு: இல்லீங்கோ எசமான். தாங்கள் எங்கள் வீட்டுக்குள்ளே படுத்திட்டிருங்கோ. நாங்கோ கோவிலுக்குப்போனதும் வந்துடரோம் [தன் மூத்த மகளைப்பார்த்து] பாவாயி! செட்டியார் கடைக்குஓடிப்போய் கொஞ்சம் காப்பிபொடியும் சர்க்கரையும் வாங்கி வந்து காப்பி போட்டுக்கொடு. நாங்கள் சீக்கிறம் பொங்கல் வைத்துவிட்டு வந்துவிடுகிறோம்.

[முருகேசனும், கருப்பாயும் அவள் இருகுழந்தைகளும் செல்கின்றனர். பாவாயி கடைக்குப்போய் சாமான் வாங்கிவந்து காப்பியும் உப்புமாவும் தயாரித்துக் கொண்டுவந்து கட்டிலில் படுத்துறங்கும் கிருஷ்ண காந்தனைத்தட்டி எழுப்பி]

பாவா: ஐயா! எழுந்திருங்கள், இதோ! கை கழுவத்தண்ணீர் காப்பியும், உப்புமாவும் தயாராகிவிட்டது, சாப்பிடுங்கள்.

[கிருஷ்ணகாந்தன் எழுந்து உப்புமாவை
ஒருபிடி வாயில் வைத்தவண்ணம் பாவாயியைப்பார்த்து]

கிரு: பாவாயி! இவ்வளவு நேர்த்தியாக உப்புமா செய்ய நீ எப்படி கற்றுக்கொண்டனை?

பாவா: தங்கள் அப்பா பெரிய எஜமான் இங்கு நிலங்களைப் பார்வையிட வரும்போதெல்லாம் நான்தான் அவருக்கு சமையல் செய்வது வழக்கம். உங்க அம்மாதான் எனக்கு எல்லாம் காட்டிக்கொடுத்தாங்கோ.

கிரு: அப்படியா? பேஷ்! உனக்கேன் இன்னும் கல்யாணம் செய்யவில்லை?

பாவா: கல்யாணமா? கையில் பணமில்லாத காரணந்தான். நல்ல விளைச்சலுமில்லே, விலேயுமில்லே. உங்களுக்கு விளஞ்சாலும், விளையாவிட்டாலும் சித்திரை வந்தாம் குத்தகை கொட்டிக் கொடுக்கனும். எங்கப்பா எப்போ பார்த்தாலும் கடங்கார னுத்தானிருக்கிறர். போன குத்தகைக்குப் பணம் போதா மல் வீட்டிலிருந்த பொட்டுப்பொடியெல்லாம் விற்றுக்கொடுத் தார். இந்த லட்சணத்தில் கல்யாணமேது? கல்லடுப்புத்தான்.

கிரு: [அவள் முகத்தை உற்று நோக்கியவண்ணமாய்] நீ என்னைக் கல்யாணம் செய்துகொள். உனக்கு வேண்டியதெல்லாம் கொடுக்கிறேன். உங்கப்பா எனக்குக்குத்தகையே கொடுக்க வேண்டியதில்லே. என்ன சொல்லுகிறுய்?

பாவா: இதென்ன அநியாயம்? இப்படிப் பேசுரீங்கோ? நீங்க ளாவது! நானுவது! கல்யாணமாவது! இந்த வெறும் பேச்சு ஒன்றும் வேண்டாம். காபி சாப்பிடுங்கோ. ஆறிப்போய்விடும்

கிரு: [இருக்கை விட்டெழுந்து, பாவாயி கரத்தைப்பற்றி இழுத் துத்தழுவி அவள் கன்னத்தில் முத்தம் கொடுத்து] என் பசுங் கிளியே! பாவாயி! உன்னைக்கண்டதும் என்மனம் உன்னிடம் பாய்ந்துவிட்டது. உன்னை விடேன், விடேன், சத்யம்.

பாவா: [திமிறி விடுவித்துக்கொண்டு] இதென்ன இப்படி செய் ரீங்கோ? யாராவது கண்டா என்ன சொல்வாங்கோ? எஜ மான் வீட்டுப்பிள்ளை இப்படிச்செய்வது அடுக்குமா?

கிரு: பாவாயி! சந்தேகப்படாதே. சத்யமாய் உன்னை நான் கட் டிக்கொள்ளுகிறேன். என்னுடைய சொத்துக்கெல்லாம் நீதான் எஜமானியாவாய். என் வார்த்தையைத்தட்டாதே. வா என் அருகில்.

பாவா: அதுக்கு ஊர்லே எங்காவது தேவடியா இருந்தா போங்கோ. நான் மாட்டேன்.

கிரு: இல்லை கண்மணி! உன்னை நான் தாசியாகக்கருதி இச்சிக்க வில்லே. உன்னை என் அன்பின் களஞ்சியமாகவே எண்ணுகி றேன். உன்னைக்கண்டதும் காதல் கொண்டேன். நீ என் இச்சைக்கிணங்காவிடில் நான் உயிர் துறப்பேனென்பது நிச்சயம்.

பாவா: இதென்னடா வம்பாயிருக்குது! பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதைபோலாச்சு. நீங்க வேறே ஜாதி. நான் வேறே ஜாதி. எப்படி நீங்கோ என்னைக்கல்யாணம் செய்ய முடியும்? உங்க அம்மாவே கேட்கவேண்டாமா? எங்க அப்பாவே கேட்கவேண்டாமா? இதென்னகூத்தாயிருக்குது. சத்தம்போட்டு பேசவும் வழியில்லே. நீங்கோ எஜமான் வீட்டுப்பிள்ளே. உங்க நிழல்லே நாங்கிருக்கிறோம்.

கிரு: [பாவாயியை பின்னரும் இறுகத்தழுவி முத்தமிட்டு] என் கண்ணே வா! என்று அறையினுட் சென்று கதவடைத்துக் கொள்கிறான்.

5-வது காட்சி.

இடம்: குடியானவன் வீடு.

[கோவிலுக்குச்சென்ற முருகேசனும், அவன் மனைவியும், குழந்தைகளும் வந்துவெளிக்கதவைத்தட்டுகின்றனர்]

முரு: பாவாயி! பாவாயி!

பாவா: [கதவைத்திறந்துகொண்டு வெளியில் வருகிறாள்.]

முரு: எங்கே? எஜமான்! நாங்கள் வருவதற்குள் போய்விட்டாரா என்ன? இவ்வருஷம் குத்தகைப்பணத்தில் கொஞ்சம் தள்ளிக்கொடுக்கவேண்டுமெனக் கேட்கலாமென்றிருந்தேனே.

பாவா: எஜமான் போகவில்லே உள்ளே படுத்திருக்கிறார்.

முரு: அவர் படுத்திருக்கும்போது நீ கதவைத்தாளிட்டுக்கொண்டு என்ன செய்துகொண்டிருந்தே?

பாவா: அவரத்தான் போயிக்கேளு.

கிரு: [வெளியே வந்து] முருகேசா! அவளை ஒன்றும் கோபியாதே. எல்லாம் விதிப்படிதான் முடியும். எங்களிருவர் மனமும் ஒத்துப்போய்விட்டது.

முரு: என்ன எஜமான்! தாங்கோ சொல்வது எனக்கொன்றும் விளங்கலே.

கிரு: இன்று முதல் பாவாயி எனக்குச்சொந்தம். அவள் நல்ல ராணிபோல் வாழ ஏற்பாடு செய்கிறேன்.

முரு: ஆண்டவன் செயலுக்கு நாமென்ன செய்வது? மாரியாயிக்குப்பொங்கல் வைத்த பலன் இதுவானு அப்படியே நடக்கட்டும். நான் யாரையும் ஒன்னேயும் சொல்லலே.

கிரு: ஆமாம், எல்லாம் விதிப்படியே நடக்கும். அன்றெழுதினவன் அழித்தெழுதப்போவதில்லை. நீ இவ்வருஷ குத்தகைப் பணத்தை என்னிடம் கொடுக்காதே. அப்பணத்தில் ஒரு நல்ல வீடு கட்டிக்கொள். நான் வந்தால் போனால் இருப்பதற்கு ஒரு தனி அறை வைத்துவிடு. நமது மலைக்காட்டில் உனக்கு வேண்டிய மரங்களை வெட்டிக்கொள். நான் பாவாயிக்கு வேண்டிய துணி மணிநகைகளை வாங்கி அனுப்புகிறேன்.

கருப்பாயி: எஜமான்! இத்தனையெல்லாம் எனத்துக்குச்சொல்றீங்கோ? பாவாயி நல்ல சுகம் பெத்துப்போனு! எங்கே எங்காவதுபோயப்புளிகஞ்சிக்கும் ஏங்குறுளோ என்றிருந்தேன்.

கிரு: சரி. நான் வீட்டில் சொல்லிக்கொள்ளாமல் வந்துவிட்டேன். போய் பின்னரும் இரண்டொரு நாளில் வருகிறேன். இங்கு இரண்டொரு மாதம் நான் தங்கியிருந்துவிட்டுப்போவேன். நீங்கள் இனிமேல் யாதொன்றுக்கும் கவலைகொள்ளாதீர்கள். [செல்கிறன்.]

6-வது காட்சி.

இடம்: ராமமூர்த்தியின் வீடு.
சமயம்: பகல்.

[ராமமூர்த்தியின் மனைவி திலகவதியோடு கிருஷ்ணகாந்தன்வார்த்தையாடிக்கொண்டிருக்கிறன்.]

கிரு: மணி பத்தாகிவிட்டது, ராமமூர்த்தி இன்னும் வரவில்லையே.

தில: அவர் வருவதும் வராததும் அவருக்குத்தான் தெரியும். அவ்வேசி அழகாளின் வலையில் சிக்கிய யார்தான் மீளப் போகிறார்கள்? கமலாபுரம் ஜமீன்தாரின் குடியையே கெடுத்து நாசம் செய்துவிட்டாள். இப்போது கடந்த ஆறுமாத கால மாக உமது நண்பர் அவளிடம் அகப்பட்டுக்கொண்டார். வீட்டுக்கு சரியாய் வருவதேயில்லை. குடும்ப காரியங்களைத் தையும் மறந்துவிட்டார். குடிப்பழக்கமும் ஏற்பட்டுவிட்டது. துஷ்டர்கள் சவகாசமும் அதிகம். என்மீது அவருக்குப் பிரியமே இல்லை. வீட்டுக்கு வந்தால் ஒருநேரமாவது பட்ச மாய்ப் பேசுவதில்லை. மூலம் பிடித்தவர்போல் எப்போதும் முகத்தைச்சுளித்துக்கொண்டேயிருக்கிறார். தாம்தான் அவ ருடைய அத்யந்த நண்பராயிற்றே! தாமாவது அவரை நல் வழிப்படுத்தலாகாதா?

கிரு: திலகவதி! உன் நாதன் ராமமூர்த்தி இப்படிக்கெட்டுப் போவார் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. அவர் எவ்வளவோ சாதுவாயிருந்தாரே. அவர் நடத்தையைக் கேட்கஎனக்கு அருவருப்பாய் இருக்கிறது. நான் பலவருஷங் கள் சென்னையில் இருந்தது உனக்குத்தெரியும். அங்கு எவ் வளவோ தாசி வேசிகள் இல்லமிருக்கிறது. எனது சகாக்கள் "பசோட்டா" ஒட்டலுக்கும் "ஆரிசன்" ஒட்டலுக்கும் சென்று நன்றாகக்குடித்துவிட்டு செங்காங்கடையெல்லாம் சுற்றித்திரிவார்கள். நான் அவர்களோடு சேருவதே இல்லை. என்னைக்கண்டு அவர்கள் ஏளனம் செய்வார்கள். என்னை மகா பயங்காளி என்றும் சொல்வார்கள். நான் சினிமா பார்ப் பதற்குக்கூடப்போவதில்லை.

தில: உமது நண்பரும் சன்மார்க்க சீலராக இருந்ததால்தான் எனது தந்தை அவருக்கு என்னைக்கட்டிக்கொடுத்தார். என் னைக்கல்யாணம் செய்வதற்கு முன் யாதொரு கடனும் இல் லாமல் இருந்தார். வருஷம் இருபதினாயிரம் வரும்படி வந்து கொண்டிருக்கும் குடும்பத்தில் இப்போது ஐம்பதினாயிரம் வரை கடன் ஏற்பட்டிருப்பதாக நேற்று கணக்குப்பிள்ளை அத்தையிடம் தெரிவித்துக்கொண்டிருந்தார். அத்தையும்

எவ்வளவோ சொல்லிச்சொல்லி சளைத்துவிட்டார். மாமன் சதா தீர்த்த யாத்திரை செய்வதிலேயே இருக்கிறார். மகனுடைய காரியாதிகளைக்கவனிப்பதேயில்லை. இதற்குக்காரணமும் தெரியவில்லை. இதன் முடிவு என்னருகுமென்றும் எனக்கு விளங்கவில்லை.

கிரு: திலகவதி! உன் கல்யாணத்துக்குப்பிறகு உன் கணவன் ராமமூர்த்தி எனக்கொரு கடிதமெழுதியிருந்தார். நீ அழகாய் இல்லையென்றும், உன்னோடு சந்தோஷமாக வாழ முடியாதென்றும் அதில் தெரிவித்திருந்தார். நான் ஒரு பெண்ணுக்கு அழகு பெரிதல்ல குணமே பெரிதென்று பதில் எழுதியிருந்தேன். இன்று அவர் வேசி லோலனுயிருப்பதன்காரணம் இப்போது நீ அறிந்துகொண்டிருப்பாய். சத்யமாக நான் சொல்லுகிறேன். நீ என்னை நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி. நான் எவ்வளவோ பெண்களைப்பார்த்திருக்கிறேன். உன்போன்ற அழகுள்ள பெண்ணை நான் பார்த்தது கிடையாது. உனது கண்கள் காந்தம்போல் பிரகாசிக்கின்றன. நீ என் கண்முன் ஒரு தேவதைபோல் நிற்கிறாய். உன்னை நான் மனைவியாக அடையும் பாக்யம் பெற்றிருந்தால்...........

தில: இன்று அதைப்பற்றி யோசித்து என்ன பயன்? எல்லாம் விதிப்படியே நடக்கும். என்னை உமக்கே மணம் புரிவதாய் என் தாயார் சொல்லிக்கொண்டிருந்தாள். உங்கள் தாயாரிடத்திலும் பிரஸ்தாபித்தாள். ஆனால் உங்கள் தாயாருக்கு இஷ்டமில்லாது போயிற்று என்ன செய்வது?

கிரு: கண்ணே திலகவதி! உன்னைக்காணக்காண என் மனம் சோர்வடைகின்றது. உன் மனோபீஷ்டத்தை நான் அறிந்திருப்பின் உன்னையே மணக்க ஏற்பாடு செய்திருப்பேன். என் உள்ளத்தைக்கவர்ந்த கள்வன்போல் என் எதிர் நிற்கிறாய் உன்மீது நேசமற்ற ஒரு நீசனை மணந்து நீ அல்லல்படுவதைக்காண நான் எல்லையிலாத்துயரடைகின்றேன். எனினும் என்ன? நீ என்மீதுகொண்ட காதலை இன்னும் கைவிடவில்லை என்றே எண்ணுகின்றேன்.

தில: அஃதெப்படி? ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டபின் பிற புருஷரை இச்சிக்கலாமோ? இனி உம்மை ஒரு சகோதரனுகத்

தான் நான் நேசிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன்.

கிரு: எனதாசையின் அமுதே! அமுதின் சுவையே! உன்னைக் கண்டபின் உன்னை விட்டகல என் மனந்துணியவில்லை. நீயே என் உயிர். நீயே என் உடல். நீயே எனதனைத்தும். காதற் கடல் நீ. கண்ணுக்கினிய கப்பல் நான். கடல் கப்பலைத் தாங்க மறுத்தால் அது கரை சேர்வதெப்படி?

தில: கிருஷ்ணகாந்தரே! தாம் இவ்வாறு பேசுதல் சரியன்று. விவாகம் என்னும் புனிதமான சடங்கால் நான் உமதுநண்பன் ராமமூர்த்திக்கே உரிமைப்பட்டிருக்கிறேன். தம்மை நான் மனதாலும் இச்சித்தல் தகாது. தாங்கள் இதைவிடுத்து வேறு ஏதேனும் பேசுங்கள்.

கிரு: திலகவதி! தீஞ்சுவைத்தெள்ளமுதே! தெளிர்ந்த தடாக நீரைப்போன்று களங்கமற்ற நெஞ்சுடைய மாதரசே! உன் மனோதிடத்தை மெச்சினேன். உன் இனிய மொழிகள் என் மனதைப்பரவசப்படுத்திவிட்டன. இத்தகைய நற்குண நற் செய்கையுடைய மங்கையை நான் மனைவியாக அடையும் பாக்யமற்ற பதரானேன். என் செய்வேன்? என்செய்வேன்?

தில: சோதரரே! தாங்கள் இவ்வாறு மனங்கலங்குதல் சரியன்று. நமது சந்திப்பால் தாங்கள் இவ்வாறு மனங்குழைவீர்கள் என்று நான் அறிந்திருந்தால் தங்களைக்காணச்சம்மதித் திருக்கமாட்டேன். யாரேனும் திடீரென வந்துவிடுவார்கள். தாங்கள் தயவுசெய்து என்னை மறந்து வீடு செல்லுங்கள்.

கிரு: ரதியே! நீ இவ்வாறு என்னைப்புறக்கணிப்பாயின் நான் உயிர் வாழேன். இது சத்யம்.

தில: தாங்கள் இவ்வாறு பிதற்றுதல் எனக்கு ஒருவிதப்பயத்தை கொடுக்கிறது. தாங்கள் சென்றுவாருங்கள்.

கிரு: நான் சென்றெவ்வாறு உய்வேன்? உய்யும் மார்க்கத்தைச் சொல். நான் செல்வதில் ஆட்சேபணையில்லை.

தில: சென்று சுகமாகத்தங்கள் மனதுக்கிசைந்த ஒரு மங்கையை மணம்புரிந்து வாழுங்கள்.

கிரு: மனதுக்கிசைந்த மங்கை! உன்னைத்தவிற வேறு யாருளர்? நீயே என்னுடன் வந்து காட்டு.

தில: நண்பரே! இஃதென்ன மௌடீகம்? தயவு செய்து என் வீட்டைவிட்டு வெளியே செல்லுங்கள்.

கிரு: [முழந்தாளிட்டு] என் ஆசைக்கிளியே! என்னைக்கட்டி இறுகத்தழுவி ஒரு முத்தம் கொடு. நான் போய்விடுகிறேன்.

[இவன் பேசிக்கொண்டிருக்கையில் ராமமூர்த்தி உள்ளேவந்துவிடுகிறான் சற்று நின்று நிதானமாய்க்கேட்டுவிட்டு]

ராம: முத்தமா? இதோ வாங்கிக்கொள் [என்று எட்டி ஒரு உதை கொடுக்கிறான்].

கிரு: [திடுக்கிட்டு எழுந்து மௌனமாய் ஒன்றும் பேசாமல் தலை குனிந்து நிற்கிறான்.]

[திலகவதி வீட்டினுள் சென்றுவிடுகிறாள்.]

ராம: என்னடா? வேசி மகனே! இது வேசியின் இல்லம் என நினைத்து வந்தாயோ? என் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுவிட்டு வெளியே செல். இல்லையேல் உன்னைக்கொன்று விடுவேன். [சற்று நிதானித்து]என்னடா பேசாது நிற்கிறாய் என் மனைவியை முழந்தாளிட்டு வேண்டினாயே? நாயே! விழு இப்பொழுது என்காலில் விழு [ஓங்கி முதுகில் அறைகிறான்.]

[கிருஷ்ணகாந்தன் பொத்தெனக்கீழே வீழ்கிறான்.]

ராம: சரி, எழுந்து நில் [தலைமயிரைப் பிடித்துத்தூக்கி நிறுத்துகிறான்.]

திலகவதி! வா இங்கே.

[திலகவதி வருகை. தேம்பித்தேம்பி அழுகிறாள்]

ராம: என் அழுகிறாய்? இவன் ஏன் இங்கு வந்தான்? இங்கு என்ன நடந்தது? விபரமாய்ச்சொல்.

தில: தங்களைத்தேடி வந்ததாகச்சொன்னார். தாங்கள் சதாசர்வ காலமும் வேசிலோலனாய் இருப்பதாகத்தெரிவித்தேன.

நான் அழகில்லையென்றும், என்மீது தங்கட்குப் பிரியம் இல்லையென்றும் தாங்கள் அவருக்கு கடிதம் எழுதியிருந்ததாகத் தெரிவித்தார்.

ராம: பின்னர்.

தில: பின்னர் என்னையும் ஒரு வேசியாக்க அவர் இச்சித்தார். நான் எவ்வளவோ நியாயங்களைச்சொன்னேன். முழந்தாளிட்டு வேண்டினார். அச்சமயம் தாங்களும் வந்தீர்கள்.

ராம: ஏனடா? தடிப்பயலே! நீ கொண்ட எண்ணம் சரிதானா? உன்னை நான் இலேசில் விடலாகுமா? உன்னைக்கொன்று வீழ்த்தட்டுமா?

தில: நண்பா!

ராம: நண்பனா? (ஓங்கி கன்னத்தில் அறைகிறான்] விழு என் மனைவியின் காலில் [முதுகில் உதைக்கிறான்.]

[கிருஷ்ணகாந்தன் வீழ்கிறான்.]

ராம: எழுந்திரு கழுதை! எழுந்து வெளியே செல்.

கிரு: [மெள்ள எழுந்து] நண்பா! உன் கோபம் தீர்ந்துவிட்டதா? என்னை இன்னும் அடிப்பதாயினும் அடி. ஆனால் நான் சொல்வதைக்கவனமாய்க்கேள். சொல்லட்டுமா?

ராம: என்னடா? நாயே! என்ன சொல்லப்போகிறாய்?

கிரு: நான் உன் மனைவியின் கற்பைச்சோதித்தேனே ஒழிய வேறில்லை என்பதைச்சத்யமாக நம்பு. நீ வேசிலோலனாய் இருந்தும் அவள் கற்பு நிலை தவறாது நடந்துகொண்டதைக் காண நான் மனங்களித்தேன். பெண்களுக்கு அழகல்ல பெரிது. குணமொன்றே பெரிதென நான் உனக்குக்கடிதமெழுதவில்லையா? அவள் குணம் எவ்வளவுயர்ந்ததென நீயே இப்போது அறிந்துகொண்டனை. என்னைத்தவறாக நீயும் திலகவதியும் எண்ணியதுபற்றியும், என்னை அடித்தது பற்றியும், தூஷணையாகப்பேசியதுபற்றியும் நான் வருந்தவில்லை. ஆனால் என்னை "வேசிமகன்" என்று நீ கூறியதொன்றே வருத்துகிறது கெட்ட எண்ணம் நான் கொண்டி

ருந்தால் நான் உன் மனைவியை என் கரங்களால் தீண்ட முயன்றிருப்பேனல்லா? நான் நின்றிருந்த இடத்தைவிட்டு ஒரு அடியாவது அவள் முன் எடுத்துவைத்தேனா என்று அவளையே கேள்.

ராம: [சற்று யோசித்து] கிருஷ்ணகாந்தா! எனது நிலையில் உள்ள எவனும் உன்னைக்கொன்றேயிருப்பான். நீ பெரிய விஷப்பரீட்சை செய்யத்துணிந்துவிட்டாய். இது முறைமையன்று. எனது மனைவியின் மனம் எவ்வளவோ வேதனைக்குள்ளாகியிருக்கும். அவள் பொறுமையோடு உனக்குச்சரியான புத்திமதிகள் கூறிக்கொண்டிருந்ததை நான் மறைவாக நின்று கேட்டுக்கொண்டிருந்தேன். நீ நல்ல எண்ணத்தோடு இக்காரியத்தில் முனைந்திருப்பினும் சரி, அல்லது தீய எண்ணம் கொண்டிருந்தாலும் சரி. தீர யோசிக்குங்கால் எவ்வகையாயிருப்பினும் உனக்கு நன்றிபாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தகாரத்தில் மூழ்கி அழுகையே பெரிதென மதித்து வேசியின் காலடியில் வீழ்ந்து என் பொருளையும், உடல் வலிவையும், வீணாக்கிக்கொண்டிருந்த எனக்கு நீ நல்லறிவு புகட்டியதற்காக கோடி வந்தனம் செய்கின்றேன். நான் உன்னை வைததற்காகவும், அடித்ததற்காகவும வருந்துகிறேன். இதோ இவ்வாசனத்தமருவாய்.

[கிருஷ்ணகாந்தன் உட்காருகிறான்.]

மனைவியை நோக்கி]

கற்புக்கரசியே! உன்னை இதுகாறும் நான் அவமதித்து அழகற்ற அவ்வேசி அழகாளின் அழகையே பெரிதென எண்ணி என் பொருளையும், புகழையும் பறிகொடுத்தேன். நீயும் என்னை மன்னிப்பாயாக. இன்றுமுதல் உன்னையல்லாது வேறு எப்பெண்ணையும் கண்ணெடுத்துப்பாரேன். இது சத்யம். இன்று நீ இவனோடு சோரம் போயிருப்பினும் அது உன் குற்றமன்று. அது என் குற்றமேயாகும். ஏனெனில் நானே உனக்கு வழிகாட்டியாக இருக்கிறேன். புருஷனுக்கொரு நீதி, மனைவிக்கொரு நீதி என்பது எக்காலத்துக்கும் ஏற்றதல்ல. நீ என் வழி செல்லவில்லை என்பது எனக்கு நிச்சயமாகத்தெரியும். கணவன் தீய வழி செல்லும்

போது மனைவி அவனைத்தடுக்கவேண்டுமேயொழிய அவனோடு போட்டி போடுதல் சரியன்று. இச்செந்நெறியை உன் போன்ற அறிவுள்ள மங்கையரே உணர்வர். அறிவிற் சிறந்த நாயகியே! நீ எனக்கு இன்று நல்லறிவு புகட்டினை. இருள் மூடியிருந்த என் வாழ்வில் ஒளி பரப்பினை. நிலை தவறியிருந்த என்னை நிலைபெறச் செய்தனை. என் பெயருக்கும் புகழுக்கும் நல்வாழ்விற்கும், சுகத்திற்கும் அரண் செய்தனை. நீயே வாழ்க்கைத்துணைவி! நீயே உண்மை மனைவி! நான் செய்த தவறுதல்களையெல்லாம் மறந்து என்மீது அன்பு செலுத்துவாயாக.

7-வது காட்சி.

இடம்: கிருஷ்ணகாந்தன் மாளிகையில் ஓர் அறை.
சமயம்: இரவு.

[கிருஷ்ணகாந்தனும், பார்த்தசாரதியும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

பார்த்: பிரபு! தங்கள் மதிமுகம் வாட்டமுற்றிருக்கக்காரணம் என்ன?

கிரு: ஒன்றுமில்லை.

பார்த்: அகத்தினழகு முகத்தில் தெரியுமென்பார்கள். தாங்கள் தாங்கொணு வருத்தமுற்றிருக்கிறீர்கள். தங்கட்கு யாரோ ஏதோ அவமானம் விளைவித்ததாகத்தெரிகிறது. அவர்கள் மீது தாங்கள் வஞ்சம் தீர்க்க ஏதேனும் வழியுண்டா என்று யோசனை செய்துகொண்டிருப்பதாய்த்தோன்றுகிறது.

கிரு: [திடுக்கிட்டு] என்ன? உனக்கு யாவுந்தெரியுமா?

பார்த்: எனக்கு ஒன்றும் தெரியாது. தங்கட்கு என்ன நேர்ந்ததென எனக்கு எனமாத்தெரியும்? நான் தங்களைப்பிரிந்து நான்கு தினங்களாகிறது. தேக்கடித் தோட்டத்திற்குப்

போய்வந்த மறுதினமே என்னைச்சந்திப்பதாகச்சொன்னீர்கள். நான்குமுறை இங்கு வந்திருந்தேன். தங்களைச் சந்திக்கமுடியவில்லை. இரண்டொரு "சான்ஸ்"ல்லாம் ஏற்பட்டது. தாங்களில்லாமல் தவறிப்போய்விட்டது.

கிரு: பார்த்தசாரதி! உண்மையை ஒளிக்காமற் சொல். எனக்கு நேர்ந்த அவமானத்தை நீ நன்ருய் அறிவாய்போல் தெரிகிறது

பார்த்: இது ரொம்ப வேடிக்கையாயிருக்கு. நான் என்ன மாந்ரீகனு? ஜோஸ்யனு? ஏதாவது மெஸ்மரிஸம், இப்னுடிஸம் தெரிந்தவனு? என்னிடம் ஏதாவது குட்டிச்சாத்தான் இருக்கிறதா? தங்கட்கு நடந்தது தங்கட்குத்தான் தெரிய வேண்டும். அல்லது தங்களோடுகூட இருந்தவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். நேக்கு என்னமாத்தெரியும்?

கிரு: உஷ்! சப்தம்போடாதே. மெள்ளப்பேசு. அடுத்த அறையில் தாயார் பூஜை செய்துகொண்டிருக்கிருர்கள்.

பார்த்: சரி, வாருங்கள் நாமும் கோவிலுக்குப்போவோம். இன்று நடராஜர் சன்னிதானத்தில் பெரிய வைபவம் நடக்கிறதாம்.

கிரு: வைபவம் என்ருல்என்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!

பார்த்: சுவாமி கோவிலில் நடக்கும் வைபவம் என்னவெனத் தெரியாதா தங்கட்கு? அபிஷேகம், ஆராதனைகள், இவ்வளவுதான். செட்டிநாட்டு ராஜாவுடைய கட்டளையாம் இன்று. எல்லாம் வைபவந்தான் வாரும் போவோம்.

கிரு: சதிர் கச்சேரியுண்டா?

பார்த்: அடடா! இதுகூடவா கேட்கணும். இல்லாமலா இருக்கும்?

கிரு: இந்த சிதம்பரத்துக்காரிகள் கச்சேரியை நான் பார்த்துத்தானிருக்கிறேன்.

பார்த்: என்ன சார்! சங்கடமாயிருக்கு. சப்தம் போட்டுப் பேசக்கூடாதென்றும் சொல்ரேள். சப்தம் போட்டு பேசும்படியாகவும் செய்ரேள். கும்பகோணத்திலிருந்து புதிதாய்த் தபாரான ஒரு குட்டி. சாரதா அவ பேரு; செக்கச்

செவேனு கோவப்பளம் போலே இருப்பா. அவதான் இன்றைக்கு ராஜா கட்டளைக்காக ஆடவந்திருக்கா! வாங்கோ போவோம்.

கிரு: அவஸ்யம் போகத்தான் வேண்டுமோ?

பார்த்: போனல் பல காரியங்கட்கு அநுகூலம். முதலாவது ஒரு சின்ன வாக்கிங். தென்றல் காற்று ஜில் ஜில்லென்று வீசுகிறது. கொஞ்சம் மூளையை உற்சாகப்படுத்தும். இரண்டாவது நல்ல சாஸ்த்ரோக்தமான பரத நாட்டியம். பார்த்தால் மனதை ரம்மியப்படுத்தும். மூன்றுவது பகவத் சந்நிதானத்திலே அரை நொடி நிஷ்டையிலிருந்தால் மனதை சத்கார்யத்தில் ஒரு முகப்படுத்தும். திரும்புகிற மார்க்கத்தில் நம்முடைய நித்யானுஷ்டானம் இருந்தே இருக்கு. போராதோ?

கிரு: சரி. நீ சென்று தெருவில் நில்லு. இல்லை, இல்லை நீ நேராகக் கோவிலுக்குச்சென்று முன் மண்டபத்தில் எனக்காகக் காத்திரு. நான் தாயாரிடம் சென்று விடைபெற்று வேறு உடைஅணிந்துகொண்டு நேரே வந்துவிடுகிறேன்.

பார்த்: என் நானும் தங்களோடு கோவிலுக்குச்செல்வதால் தங்கள் கௌரதைக்கு ஏதேனும் பங்கமேற்படுமோ?

கிரு: சே! சே! அப்படியொன்றுமில்லை நான் வர நாழிகையாகுமென்றே சொன்னேன். சரிநில், சீக்கிரம் வந்துவிடுகின்றேன்.

[கிருஷ்ணகாந்தன் உட்செல்லல்.]

பார்த்: [தனிமையாய்] பேர்வழி விவகாரத்தில் நன்ருய் மாட்டிகிட்டான். இந்த வருஷம் முடிவதற்குள் ஒரு லட்சம் சேர்ந்துவிடும். என்ன இப்பேர்ப்பட்ட ஜமீனதார்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தத்தானே பணம் சம்பாதித்தது? எவனே குடியானவன் அல்லும் பகலும் உழைத்து, இவர்கள் நிலத்தை உழுது, விதைத்து, களை எடுத்துக்காத்து, அறுத்து அடித்து, விற்று, முதலாக்கிக்கொண்டுவந்து கொட்டினல், இவர்கள் ஜம்மென்று தொந்தியைத்தடவிக்கொண்டு வாழ்கிருர்கள். நிலமெல்லாம் இவர்களுக்குச்சொந்தமாம்! அந் நிலத்தின்மீது பிறர்படும் பாடும் இவர்களுக்குச்சொந்தமாம்!

நிலத்தில் வரும் போகமும் இவர்களுக்குச்சொந்தமாம்! குடியானவர்களுடைய பெண்டுபிள்ளைகளும் இவர்களுக்குச் சொந்தமாம்! ஒன்றும் புரியலே. போனுர் பழுத்த மரத்திலே மாம்பழம் பறிப்பதுபோல அந்த ஏழை முருகேசன் பெண்ணைக்கெடுத்துண்டு வந்துட்டார். பூமியைக்கிரயம் எழுதி முடிப்பதுபோல அப்பெண்ணைத்தம்பேருக்கு பட்டாமுடித்து வந்துவிட்டார். ஏழையின் பெண்சாதி எல்லோருக்கும் பெண்சாதி என்று சொல்ரது இதனுலேதான். எஜமான் சொல்லே முருகேசன் மீறியிருந்தாப்போச்சு. உடனே போலீஸைச்சரிப்படுத்தி அவன்பேரில் ஏதோ ஒரு ஆட்டுக்கேசோ, மாட்டுக்கேசோ போட்டு உள்ளே தள்ளியிருப்பார். இல்லாவிட்டால் என்ன? வலுத்தவனுக்குத்தானே இது காலம். நான்காலேவிட்டு அவனை நன்ருக உதைத்து ஊரைவிட்டுத்துரத்தவும் செய்யலாம். இதெல்லாம் முருகேசனுக்குத்தெரிந்ததால்தான் எல்லாப்பாரத்தையும் கடவுள் மேல்போட்டுவிட்டு எல்லாம் தலே விதிப்படி நடக்குமென்று சொல்லிவிட்டான். இந்தமாதிரி பிரபுக்கள் பாழாப்போக வேண்டுமானுல் அவர்களுக்குச்சமமானவர்கள் எதிரியாக ஏற்படவேண்டும். அப்போதுதான் வேடிக்கை! தாசிக்கும், பிராந்தி ஷாப்புக்கும், போலீசுக்கும் போவது கொஞ்சம். நார்ட்டனுக்கும், கிராண்டுக்கும், அல்லாடிக்கும், எதிராஜுலுக்கும் பெரும்பாகம் போய்ச்சேர்ந்துவிடும். அந்த வேடிக்கையும் கொஞ்சம் பார்க்கத்தான் போரேன். ராமமூர்த்திக்கும் இவருக்கும் இனிமேல் குஸ்திதான். நேக்கு நேற்று நடந்தது தெரியும். நாளை நடக்கப்போவதும் தெரியும். போதும். அவ்வளவோடு நிறுத்திக்கொள்வோம். பேர்வழி வந்திடப் போருர்.

[கிருஷ்ணகாந்தன் வருகை]

பார்த்: பேஷ்! இப்படித்தான் கோவிலுக்குப்புறப்படணும். அப்படியே சிவப்பழம் போல இருக்கு. பழம் அதிகமாப்பழுத்து அழுகி விழாமலிருந்தா சரிதான்.

கிரு: போடா! அதிகப்பிரசங்கி! வா போவோம்.

பார்த்: சார், சார் கொஞ்சம் மரியாதை இருக்கட்டும். நான்கு பேர் முன்னிலையில் இம்மாதிரி போடா வாடா என்று சொன்னீர்களானால் என்னுடைய "ரெஸ்பெக்ட்" காற்றிலே போய்விடும்.

கிரு: [பார்த்தசாரதியின் தோளை தட்டிக்கொடுத்து] உனக்கு ரெஸ்பெக்ட் கொடுத்தால்தான் எனக்கும் ரெஸ்பெக்ட் கிடைக்குமெனத்தெரியும். வா, போவோம்.

8-வது காட்சி.

இடம்: சிதம்பரம் நடராஜப்பெருமாள் சந்நதி.
சமயம்: இரவு.

[அபிஷேக ஆராதனைகள் முடிந்தபின்னர் சதுர்கச்சேரி நடைபெறுகின்றது. அர்ச்சகர், பார்த்தசாரதி, மற்றும் பலர் இரு புறமும் வரிசையாக நிற்கின்றனர்.]

கிரு. [பார்த்தசாரதியை ஒரு புறமாக இழுத்துக்கொண்டுபோய்] அதோ அந்த "பிங்க்" புடவை கட்டிக்கொண்டிருக்கிறாளே அவள் யார்? என்னைப்பார்த்துப்பார்த்துக்கண்களை வெட்டுகிறாள். பார்த்தால் தேவடியாள் அல்ல போலத்தெரிகிறது. நான் எங்கோ பார்த்த முகம்போலவுமிருக்கிறது.

பார்த்: ஓ! அவளா! சரிதான், தாசியல்ல. தாசின்னா கழுத்திலே கருப்புமணியிருக்கும், கண்ணிலே மையிருக்கும், விரல்லே மோதிரம் ஒரு டஜன் இருக்கும். வங்கி, பொங்கி தொங்கியிருக்கும். இவ ரொம்ப நீட்டா, அப்டுடேட்டா, டீசண்டா இருக்கா. இருங்கோ படியுமா, படியாதா, பாத்துட்டு வந்துடறேன்.

[பார்த்தசாரதி பிங்க் புடவை கட்டியிருக்கும், மங்கையின் பின்புறமாகச்சென்று தனது கையிலிருந்த கை குட்டையைக்கீழே போட்டு குனிந்தெடுத்து அம் மங்கையை நோக்கி.]

பார்த்: அம்மா! இந்தக் கைகுட்டை தங்களுடையதா! தங்கள் காலடியில் கிடைந்தது.

அம்மாது [திரும்பி நோக்கி] இதுவா? என்னுடையதல்ல. அதோ அங்கு நிற்கும் கிருஷ்ணகாந்தருடையதாயிருக்கலாம். அவரிடம் கொண்டுபோய்க்கொடுங்கள்.

பார்த்: அடடா! ரொம்ப தெரிஞ்சவா போலிருக்கே! தயவு செய்து இப்படி ஒரு புறமாய் வாங்கோ. எது நம்ப எஜமானரைத் தங்கட்கு என்னமாத்தெரியும்?

அம்மாது: அவரைத்தெரியாதவாளுண்டோ?

பார்த்: தங்கள் பெயர் என்னவோ?

அம்மாது: என் பெயரா? சொல்லத்தான் வேண்டுமோ?

பார்த்: ஆமாம். பிரபுவுக்குத்தங்கள் பேரில் ....

அம்மாது: என் பேரில் பிரியமா? பணம் இருப்பவன் பார்த்ததை எல்லாம் வாங்கத்தான் நினைப்பான். ஆனல் இப்பொருள் பணத்துக்கு அகப்படாததென்று அவருக்குச்சொல்லும்.

பார்த்: சரி, பணத்துக்கு வேண்டாம். பிரியத்துக்காக இருக்கட்டுமே?

அம்மாது: நான் கீழ வீதியில் 48-வது நெம்பர் வீட்டிலிருக்கிறேன். நான் போய் அரை மணி நேரம் கழித்து உம் எஜமானரை அழைத்துக்கொண்டு வந்து சேரும். பிறகு எல்லாம் பேசிக்கொள்வோம் [போகிறுள்]

பார்த்: அம்மம்மா! பெயர் சொல்லாமற் போரேளே!

[அம்மாது முகத்தைத்திருப்பி "மீனும்பிகை என்று சொல்லிவிட்டுப்போகிறுள். பார்த்தசாரதி கிருஷ்ணகாந்தனருகிற் செல்கிறுன்.]

கிரு: என்ன பேரம் படிஞ்சுதா?

பார்த்: உம், எனக்குப்படியாத பேரம் உலகில் என்ன இருக்கு?

கிரு: உனக்கு ஏற்கனவே தெரியும் போலிருக்கு.

பார்த்: இந்த வானசாஸ்திரம் ஏற்கனவே படிக்காதிருந்தால் தெரியுமா?

கிரு: போடா! முட்டாள்! அவளை உனக்குத்தெரியும் என்று சொன்னேனேயல்லாது அவளைப்படியவைக்கும் உபாயம் உனக்குத்தெரியாதென்று நான் சொல்லவில்லையே.

பார்த்: சரி, நான போறேன்.

கிரு: அடடா! நில்! நில்! இஃதென்ன பெரிய பிசுவாயிருக்கே! அவள் பாடமா? [பார்த்தசாரதியின் கையைப்பிடிக்கிறான்]

பார்த்: ஆமாம்! அவள் பாடந்தான். விடுங்கள் நான் போகிறேன் [கையைத்திமிறிக்கொண்டு நான்கடிகள் சென்றதும் திரும்பிப்பார்த்து என பின்னே வாருங்களென்று கையால் ஜாடை செய்கிறான். கிருஷ்ணகாந்தன் சிரித்துக்கொண்டே பின் செல்லுகிறான]

9-வது காட்சி

இடம்: மீனுப்பிகை வீடு.

சமயம்: இரவு.

[மீனுபிகை, கிருஷ்ணகாந்தன், பார்த்தசாரதி மூவரும் ஒரு மேஜையைச் சுற்றிலும உட்கார்ந்து நிதானமாகக குடிததுக்கொண்டிருக்கிறார்கள்.]

பார்த்: உன்னை இதற்கு முன் நான் எங்கோ பார்த்திருக்கிறாப் போல் தெரிகிறதே.

மீனு: எங்கே? கோவிலில்தான் விரைத்து விழித்துப்பார்த்தீர்கள்.

கிரு: அதற்குள் விளையாடவேண்டாம். வேறு எங்கோ பார்த்தாப்போலிருக்கிறது. சென்னையில் இருந்திருக்கிறாயோ?

மீனு: சென்னையில் தங்கட்கு அநேகம்பேர் அறிமுகமுண்டோ?

கிரு: ஒரு தாசியின் வீட்டிற்குள் நான் நுழைந்தது இதுவே முதல் தடவை. எனக்கு யாரையுமே தெரியாது.

மீனு: என்னைப்பார்த்தால் தங்கள் கண்ணுக்கு ஒரு தாசி மாதிரி தெரிகிறதோ?

பார்த்: இல்லை, நீ கோபித்துக்கொள்ளவேண்டாம். நீ உன்னை ஒரு தாசி என்று சொல்லிக்கொள்வதில் அவமானப்பட்டால் நீ ஒரு லேடி என்பதாக நாங்கள் எண்ணிக்கொள்கிறோம்.

பார்த்: ஆம்! மோஸ்ட் அப்டுடேட் லேடி! சந்தேகமென்ன.

[கதவு தட்டும் சப்தம்.]

கிரு: [தாழ்ந்த குரலில்] அடடே! ஓ இதென்ன? யார் கதவு தட்டுவது?

மீனு: [இரகசியமாய்] ஒன்றும் அஞ்சவேண்டாம். அதோ இருவரும் அந்த அறைக்குள் போயிருங்கள். என்னைச் சாஸ்வதமாகத் தேவகோட்டை க. மு. கி. முருகப்ப செட்டியார் வைத்திருக்கிறார் தங்களுக்கு மிஞ்சி அவர் என்ன? சாக்குப்போக்கு சொல்லி அனுப்பிவிடுகிறேன்.

பார்த்: [தாழ்ந்தகுரலில்] எஜமான் வேண்டுமானால் உன் படுக்கையறைக்குள்ளிருக்கட்டும். நான் இங்குதானிருக்கேன். உனக்கு சங்கீதம், ஹார்மோனியம் கற்றுக்கொடுக்க ஒரு வாத்தியாரைச்சேர்த்திருப்பதாகச் சொல்லிவிடு.

[ஒரு ஹார்மோனியத்தை எடுத்து மேஜை மீது வைத்துப்பார்த்தசாரதி உட்கார்ந்து வாசிக்கிறான். கிருஷ்ண காந்தன் படுக்கை அறைகுள் போய் விடுகிறான். மீனம்பிகை கதவைத்திறக்கிறாள் சப் இன்ஸ்பெகடர் சொர்ணமுத்துப்பிள்ளை பிரவேசம்.]

மீனு: அடடா! தாங்களா? நான் நமது செட்டியார்தான் வந்துவிட்டாரோ என்று பயந்துபோனேன்.

சோர்- என் ஏதாவது புதிய கிராக்கிகள் உள்ளே இருக்குதோ?

மீனு: கிராக்கிகட்கு அலைவது உங்கள் தொழில். எனக்கென்ன தலைவிதியா? வாங்கோ, பேசாமல் வந்து உட்கார்ந்து ஆக வேண்டியதைப்பாருங்கள்.

சோர்: [பார்த்தசாரதியைப்பார்த்து] இவர் யார்?

மீனு: என் இவரைத்தங்கட்குத்தெரியாதோ ? என் மாமாவை யும் தெரியாதவாளுண்டோ ?

பார்த்: [வாயைப்பிளந்துகொண்டு] என்னடி! என்னை மாமா வாக்கிப்போட்டே! வாத்யாருக்கு நீ கொடுக்கும் யோக்யதை அவ்வளவுதானோ?

மீனு: பள்ளிக்கூடத்தில் மாணவர்களுக்கு சொல்லிக்கொடுப்பவ ருக்குப்பெயர் உபாத்தியாயர். ஆசிரமத்தில் உள்ளவரை குரு சுவாமி என்பார்கள். தாசி இல்லத்தில் உள்ளவர் மாமாதானே தொழில் ஒன்றாயிருப்பினும் இடவேறுபாட்டால் பெயரும் மாறுகிறது. தாங்கள் கோபிப்பானேன்?

சோர் : [சரி! அவரையே கேட்போம்] நீங்கள் யாருங்கோ சார்? எனக்குத்தெரியவில்லையே ?

பார்த்: அந்தக்கண்ணாடியைக்கழட்டிப்போட்டுப்பாருங்கோ. அப் போது நன்றாத்தெரியும்.

சோர்: அடடே. சாரதியா?

பார்த்: இல்லை மிஸ்டர் பார்த்தசாரதி என்று சொல்லுங்கள்.

சோர்: செங்கோட்டை ஜமீன்தார் கிருஷ்ணகாந்தரோடு உன்னைச் சற்றுமுன் கோவில்மண்டபத்தில் கண்டேனே! அவர்எங்கே?

பார்த்: அவர் இருக்கிற இடத்தில் தானிருப்பார்.

சோர்: (சைகை செய்து தாழ்ந்த குரலில்) எங்கே?

பார்த்: [அவர் இருக்கும் அறையை கையை நீட்டிக்காட்டுகிறான்]

சோர்: [உரத்த குரலில்]ஜமீன்தாரைக்கண்டு பேச எனக்கு அதிக ஆவல். அவாளுடைய ஸ்நேகமெல்லாம் இல்லாவிட்டால்....

[கிருஷ்ணகாந்தன் மெதுவாய் கதவைத்திறந்துகொண்டு வருகிறான். உடனே எல்லோரும் எழுந்து மரியாதை செய்கிறார்கள்,]

சோர்: குட்ணைட் சார்! தங்களைச்சந்தித்ததில் எனக்கு அதிக சந்தோஷமே. இட பேதகமாயிருப்பதுபற்றி மன்னிக்கவும்.

கிரு: எனக்கும் சந்தோஷமே. இடம் பேதகமாய் இல்லை. சாதகமாய்த்தானிருக்கிறது.

[எல்லோரும் அமருகிறார்கள். சீசா சிறிது சிறிதாகக் காலி செயயப்படுகிறது.]

சோர்: என்றால் தங்கட்கு ஏதேனும் சிறிய ஊழியம் செய்யக் கூடுமானால் கட்டளையிடத்தவறாதீர்கள்.

கிரு: நான் தங்களை அடிக்கடி சந்திக்க ஆசைப்படுகிறேன்.

சோர்: பேஷாய், அதெற்கென்ன? நமது சர்க்கில்கூடத் தங்களைக் காணவேண்டுமென்று சொன்னார். தங்கள் பங்களாவில் ஒரு டென்னிஸ் கோர்ட் போட்டுவிட்டீர்களானால் அடிக்கடி நாங்கள் வருவதற்கு சௌகர்யமாயிருக்கும்.

கிரு: சரி, அதற்கென்ன அப்படியே செய்வோம். தம்பிடம் நான் தனித்துச் சில வார்த்தைகள் பேசவேண்டும்.

[மீனாட்சிகைக்கு ஜாடை செய்ய அவள் உள்ளே போய் விடுகிறாள்.]

[பார்த்தசாரதியைப்பார்த்து] உனக்கு நடந்த சம்பவம் யாவும் தெரியுமென்றே நினைக்கிறேன்.

பார்த்: ஆம் தெரியும்.

கிரு: எப்படி அறிந்துகொண்டாய்?

பார்த்: ராமமூர்த்தியின் சமையல்காரி வள்ளியம்மாள் மூலமாகத் தெரிந்துகொண்டேன்.

கிரு: அவளுக்கு எப்படித்தெரியும்?

பார்த்: அவள் அடுத்த அறையில் இருந்தாளாம்.

கிரு: அப்படியா? என் விஷயம் ஊர் பூராவும் பரவியிருக்கும் போல் தெரிகிறதே.

பார்த்: வள்ளியம்மாளை அப்படியொன்றும் நினைக்கவேண்டாம். என்னைத்தவிர வேறு யாரிடமும் அவள் எந்த விஷயமும் பிரஸ்தாபிக்கமாட்டாள்.

சோர்: என்ன நடந்தது? ராமமூர்த்தியென்ன, பாப்பர் பேர்வழி. அந்த அழகாள் காலடியில் வீழுந்து கிடக்கிறான். அவனை அடக்குவது பெரிய கார்யமல்லவே.

கிரு: அவனை சரியான கேஸில் மாட்டிவிடவேண்டும். அப்போது தான் என் ஆத்திரம் அடங்கும்.

சோர்: இஃதென்ன பெரிய பிரமாதம்? ஆக்குவதும் அழிப்பதும் நம்கையிலிருக்கிறது,

பார்த்: ஆஹா! தடையென்ன? கலியுகத்தில் தாங்கள் தான் பிரம்மா சந்தேகமென்ன?

சோர்: என்ன சாரதி! உன் அதிகப்பிரசங்கத்தை விடமாட்டாயோ?

பார்த்: என்னை லேசாக எண்ணிக்கொள்ளவேண்டாம். அண்டாதி தேவரெல்லாம் அடங்கினார் அதற்குள்ளே. அது என்னுள் அடங்கியிருக்கிறது.

சோர்: "அது" என்றால்?

பார்த்: அது மனோ வாக்கிற்கு எட்டாதது.

சோர்: பின்னர்?

பார்த்: காயத்தால் மட்டும் அறியப்படுவது.

சோர்: அதற்கு நீ அதிபனோ?

பார்த்: சந்தேகமென்ன? இதோ ஒரு நிமிஷத்தில் நிரூபிக்கிறேன். மீனும்பா!

[மீனும்பிகை பிரவேசம்,]

பார்த்: என்னடி மீனு! இதோ இங்கிருக்கும் எங்கள் மூவரில் நீ யாருக்குள் அடங்கியிருக்கிறாய்?

மீனு: நீங்கள்தான் நான் மாமா என்றதும் கோபித்துக்கொண்டீர்களே?

பார்த்: இல்லே, கோபிப்பவர்கள் இறந்தால் நான் இழவுக்குக்கூடப் போவதில்லே. என்னே மாமா, மாமா என்று மனங்குளிர நூறுமுறை சொல்லு.

மீனு: அப்படியானல் நான் மாமாவுக்குள் தானடக்கம்.

பார்த்: சபாஷ்! என்ன இன்ஸ்பெக்டர்வாள்! உங்கள் ஜம்பம் அடிபட்டுப்போச்சா?

கிரு: பார்த்தசாரதி! விஷயம் முடிவதற்குள் வேடிக்கை ஆரம்பித்துவிட்டாயே.

பார்த்: விஷயம் தானுய் முடிகிறது. இன்ஸ்பெக்டர்வாள்! நாளே காலே சரியாய் 6 மணிக்கு காப்பி சாப்பிட்டு நம்ப எஜமான் மாளிகைக்கு வந்துடுங்கோ. அவ்வளவுதான் எல்லாம் ஒரு வாருய் முடித்துவிடலாம்.

சோர்: அதைத்தான் நானும் சொல்லவாயெடுத்தேன். சரி, நான் நாளே காலேயில் தங்களே சந்திக்கிறேன். [போகிருர்.]

பார்த்: மீனு! என்ன தாமதம் எஜமான் விஷயத்தை முடிக்கிறது தானே.

10-வது காட்சி.

இடம்: சிதம்பரம் போலீஸ் ஸ்டேஷன்.

சமயம்: சாயுங்காலம் 4½ மணி.

[சப் இன்ஸ்பெக்டர் மேஜையருகில் உட்கார்ந்து டைரி எழுதிக்கொண்டிருக்கிருர். மற்ருெருபுறம் ஒரு ரைட்டர் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருக்கிருர். மேஜையருகில் ஒரு எட்கான்ஸ்டபுள் நின்றுகொண்டிருக்கிருர். ஒரு கான்ஸ்டபுள் உருவிய கத்தியோடு நிற்கிருன்.]

[ஒரு குடியானவன் பிரவேசம்].

குடி: எஜமான்! எஜமான்! [கும்பிடுகிருன்].

சப்: யாரடா அது? கழுதை! ஏன் இப்படிக்கத்துகிருய்?

குடி: எஜமான் என் பட்டியிலே ஆடு திருட்டுப்போய்விட்டதுங்கோ.

சப்: யாரடா அப்படிச்சொன்னது?

குடி: நான்தான் எஜமான் சொல்ரனுங்கோ.

சப். என்ன சொல்ரே? வாயைப்பார்!

குடி: ஆடு திருட்டுப்போயிட்டதுங்கோ.

சப்: உனக்கெப்படியடா திருட்டுப்போனது தெரியும்?

குடி: ஆட்டை எண்ணிப்பார்த்தனுங்கோ. நாலைக்காணும்.

சப்: எப்போ எண்ணிப்பார்த்தே?

குடி: காலையிலே எஜமான். பட்டியே விட்டு ஆட்டெ வெளியிலே விடும்போது எண்ணினேன் நாலாட்டைக்காணும்.

சப்: பட்டிக்குள்ளே விடும்போது எண்ணிஞயா?

குடி: ஆம், எண்ணினேனுங்கோ.

சப்: எவ்வளவாடு இருந்தது? பொய் சொல்லாதே, ஜாக்கிரதை!

குடி: நாற்பது ஆடு, இருபது குட்டியுங்கோ.

சப்: இப்போ எவ்வளவிருக்கு?

குடி: முப்பத்தாறுடு, இருபது குட்டியுங்கோ.

சப்: யார் திருடிகிட்டுப்போனு?

குடி: தெரியாதுங்கோ. தெரிஞ்சிருந்தா.........

சப்: ஏன் தெரியாது? திருட்டுப்போகும்போது நீ என்ன செய்திட்டிருந்தே?

குடி: அசந்து தூங்கிப்போயிட்டனுங்கோ.

சப்: திருடன் வந்தபோது உன் நாய் குரைக்கவில்லையா?

குடி: நாயிருந்ததுங்கோ—இரண்டு நாயி. அதைக்கட்டி வச்சிருந்தேன். சத்தம் போட்டதுங்கோ. எழுந்திருந்தேன். அதற்குள்ளே திருடிகிட்டுப்போயிட்டானுங்கோ.

சப்: எழுந்து என்ன செய்தாய்?

குடி: பட்டியிலே ஆட்டை எண்ணிப்பார்த்தனுங்கோ. நாலு குறைச்சலாயிருந்தது.

சப்: எப்போ எண்ணிப்பார்த்தே?

குடி: எழுந்தவுடனே.

சப்: எப்போ எழுந்தே?

குடி: ஜாமத்திலே நாய் சத்தம் போட்டதும்.

சப்: முதலில் என்ன சொன்னே?

குடி: ஒன்றும் சொல்லலே.

சப்: என்னடா ஒன்றும் சொல்லலே?

குடி: என்னங்கோ—தாங்கள் கேட்கறது ஒன்னும் புரியலே.

சப்: புரியவில்லையா? இரு புரியவைக்கிறேன். [ஒரு சேவகனைப்பார்த்து] இவன் ஆடுகளை 'எப்போது எண்ணிப்பார்த்ததாக முதலில் சொன்னான்? [அவன் பதில் கூறாது விழிக்கவும் மற்றொரு சேவகனைப்பார்த்து] எய் 402! நீ சொல். அந்த மடையன் முழிப்பதைப்பார், ஆடு திருடின குறவனைப்போல்.

402: முதலில் காலையில் தூங்கி எழுந்தவுடன் எண்ணிப்பார்த்ததாகச்சொன்னான்.

குடி: எஜமான்..........

சப்: மூடு வாயை Fool பேசாதே! [402 நெ சேவகனைப்பார்த்து] மறுபடி எப்போது பார்த்ததாகச்சொன்னான்?

402: நடுஜாமத்தில் நாய் குரைத்த சப்தம்கேட்டதும் எழுந்து பார்த்ததாக.

சப்: ஆகையால் இவன் பொய்தானே பேசுகிறான்.

குடி: எஜமான்.........

சப்: கொடு அவன் தவடையிலே ஒன்று. முட்டாள் கழுதை! பொய்ப்பிராது கொடுக்கவா வந்தாய்?

குடி: இல்லை எசமான். சத்தியமாய், சாமி சாக்கியாய், நாலாடு திருட்டுப்போய்விட்டதுங்கோ.

சப்: யாரடா திருடினது? திருடினவனைப்போய் பிடித்துக் கொண்டுவா. யாரடா சென்றி (Sentry) இவனைப்பிடித்து வெளியே தள்ளு. [சேவகன் குடியானவனைப்பிடித்து வெளியே தள்ளுகிறான்].

[பார்த்தசாரதி வலது குதிங்காலில் ரத்தம் வடிய ஓடோடியும் வந்து ஸ்டேஷனில் வீழ்கிறான். உடனே சப் இன்ஸ்பெக்டர் எழுந்து அவனுக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுத்து, எழுப்பி ஒரு நாற்காலியில் உட்காரவைத்து, என்ன விஷயம் என விசாரிக்கிறார்.]

பார்த்: [பெருமூச்சுடன்] கொலை! கொலை!! பயமாயிருக்கு.

சப்: கொலையா! எங்கே? பயப்படாமல் சொல்லு.

பார்த்: [சுற்றிலும் முற்றிலும் பார்த்துவிட்டு] ராமமூர்த்தி யாரோ ஒருவனைக்கொன்றுவிட்டான்.

சப்: யார்? ராமமூர்த்தியா? எங்கே கொலை நடந்தது?

பார்த்: ஜல்லிக்குழியருகில்.

சப்: எப்போது?

பார்த்: இப்போதான், நேராய் அங்கிருந்துதான் வருகிறேன்.

சப்: ஏய் ரைட்டர்! கேஸ் டைரி எடுத்துக்கொண்டு வா!

[ரைட்டர் டைரி கொண்டுவந்து கொடுக்க சப்இன்ஸ்பெக்டர் அதில் எழுதவாரம்பிக்கிறார்.]

மிஸ்டர் பார்த்தசாரதி! உமது காலில் எப்படிக்காயம் ஏற்பட்டது?

பார்த்: என்னையும் சுட்டுவிட்டான்.

சப்: அப்படியா! சரி ஆரம்பத்திலிருந்து சவிஸ்தாரமாய்ச்சொல்லும் நான் எழுதிக்கொள்கிறேன்.

[நிதானமாய் ஒவ்வொரு வாக்கியமாய்ச் சொல்லச்சொல்ல சப்இன்ஸ்பெக்டர் எழுதிக்கொண்டிருக்கிறார்.]

பார்த்: இன்று மாலை 4-மணி சுமாருக்கு நான் ஜல்லிக்குழியருகில் உட்கார்ந்து மலபாதை செய்து கொண்டிருந்தேன். ராமமூர்த்தியும் மற்றொரு ஆளும் ஒருவனைக்கட்டிப்பிடித்து இழுத்துக்கொண்டுவந்து நான் உட்கார்ந்திருப்பதற்கு 50 அடிக்கப்பால் நின்றார்கள். நான் உட்கார்ந்தபடியே உற்றுப்பார்த்தேன். அவர்கள் பிடித்துவந்த ஆள் ரக்கப்பூணன் என்ற

கொரவன். ராமமூர்த்தியோடு வந்த மற்றொரு ஆள் அவன் வேலைக்காரரில் ஒருவனான வெள்ளையன். ராமமூர்த்தி வெள்ளையனிடம் "இச்சண்டாளனை ஒரே வெட்டாய் வெட்டு" என்று சொன்னான். உடனே வெள்ளையன் கத்தியை ஓங்கினான் ரக்கப்பூணன் திமிறிக்கொண்டு ஓடினான். ராமமூர்த்தி உடனே கைத்துப்பாக்கியால் இரண்டுமுறை சுட்டார். ரக்கப்பூணன் சுழன்றுகொண்டு கீழேவிழுந்தான். வெள்ளையன் ஓடிப்போய் கத்தியால் ஒரே வெட்டாய் வெட்டினான். பிறகு, இருவரும் புறப்பட்டுச்செல்ல வாரம்பித்தனர். நான எழுந்து "அடே! கொலை பாதகர்களா நீங்கள் நாசமாய்ப்போகமாட்டீர்களா? என்று சொன்னேன். யாரது? என்று ராமமூர்த்தி என்னைத்திரும்பிப்பார்த்ததும் துப்பாக்கியை நீட்டினான். நான் தலைகால் தெரியாமற் ஓட ஆரம்பித்தேன். ஒரு வெடி சப்தம் கேட்டது. என் வலது குதியில் குண்டும் பாய்ந்தது. ஒரே ஓட்டமாய்த்திரும்பிப்பாராமல் இங்கு வந்துவிழுந்தேன். இவ்வளவுதான் சங்கதி.

சப்: சரி, நீ கூறியவாரே இதில் எழுதியிருக்கிறேன். ஒருமுறை படிக்கிறேன் கேள், சரிதானே உன் கையெழுத்துப்போடு.

[பார்த்தசாரதி கையெழுத்துப்போடுகிறான்]

சப்: 402! இவரை ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோய் காயத்துக்கு மருந்து போட்டுக்கட்டிவிட்டு டாக்டரிடம் ஒரு சர்டிபிகேட் வாங்கிக்கொண்டுவா.

402: நல்லது எஜமான்! அப்படியே.

[பார்த்தசாரதியும் 402ம் போகின்றனர்.]

சப்: ரைடர் F. I. R. கொண்டுவா [ரைட்டர் ஒரு புஸ்தகம் கொண்டுவர அதில் எழுதுகிறார். பின்னர்] இதில் ஒரு நகல் D. S. P. க்கும், ஒன்று Dy. S. Pக்கும் ஒன்று சர்க்கிலுக்கும், ஒன்று டிஸ்டிரிக்ட் மேஜிஸ்ட்ரேட்டுக்கும் உடனே "ஸ்பெஷல் மெசன்ஜர்" மூலம் அனுப்பிவிடு. எட்கான்ஸ்டபுள்! இரண்டு கான்ஸ்டபுள்களைக்கூட்டிக்கொண்டு உடனே ஸ்பாட்டுக்கு வா, நான் முதலில் எனது மோட்டார்சைகிலில் போகிறேன்.

11-வது காட்சி.

இடம்: கிருஷ்ணகாந்தன் மாளிகை.

சமயம்: பகல்.

[கிருஷ்ணகாந்தனும் அவன் தாய் கமல வேணியும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.]

கம: அப்பா! கிருஷ்ணகாந்தா! உனக்கு அடுத்த மாதம் கல்யாணம் செய்ய நிச்சயித்திருக்கிறேன். உன் சம்மதம் என்ன?

கிரு: அம்மா! கல்யாணத்திற்கு என்ன அவசரம்? எனக்கு இவ்வளவு சீக்கிரமாகக் கல்யாணம் வேண்டாம்.

கம: கிருஷ்ணகாந்தா! நீ அவ்வாறு சொல்லுதற் சரியன்று. எனக்கோ வயதாகிவிட்டது. இன்னும் அதிக காலம் ஜீவித்திருப்பேனென்ற நிச்சயம் இல்லை. நான் சாகுமுன் ஒரு பேரனோ,பேத்தியோ என் கண்ணாரக்காணவேண்டுமென்பதே எனக்காசை. என் சொல்லைத்தட்டாதே. கல்யாணத்திற்கு வேண்டிய எற்பாடெல்லாம் செய்ய எனக்கு அனுமதிகொடு.

கிரு: பெண் எங்கே பார்த்திருக்கிறீர்கள்?

கம: என்? உனக்கு நான் யாரை மணமுடித்துவைப்பேன் என்பதை நீ இன்னமுந் தெரிந்துகொள்ளாமலா இருக்கிறாய்?

கிரு: யார் தங்கள் சகோதரர் புதல்வி சரஸ்வதியையா?

கம: ஆம், உன் மாமன் மகள் சரஸ்வதியைத்தான். சந்தேகமென்ன?

கிரு: அவளுக்கு என்னை மணந்துகொள்ள சம்மதந்தானா? நீ அவளோடு இவ்விஷயத்தைப்பற்றிப்பேசியதுண்டா?

கம: என், அவ்வாறு கேட்கிறாய்? அவளுக்கும் இஷ்டந்தான், உன் மாமனுக்கும் இஷ்டம்தான். உன் மாமிக்குத்தான் சற்று வேறுபாடான எண்ணம் இருப்பது போல் தெரிகிறது. தன் தம்பிக்கு மணமுடித்துக்கொள்ள அவள் ஆசைகொண்டிருக்கலாம். ஆனால், அது நடவாத காரியம்.

கிரு: ஏன்? அந்தத்தடிப்பயல் அங்குதானே இருந்துகொண்டிருக்கிறன்?

கம: இருந்தாலென்ன? நீ சோறு போடுவதானல் இங்கும் வந்து காத்துக்கொள்வான்.

கிரு: சரி, எல்லோருக்கும் இஷ்டமானல் எனக்கும் சம்மதமே. எனது படிப்பு இத்தோடு தொலைந்துவிட்டது.

கம: நீ படித்து உத்யோகம் செய்து யாருக்கு சம்பாதித்துப் போடப்போகிறய்? உள்ளதை காப்பாற்றினல்போதுமானது.

[பார்த்தசாரதி வருகை]

கிரு: யாரது! பார்த்தசாரதியா? என்ன காலில் பலமான கட்டுப் போட்டுக்கொண்டிருக்கிறய்?

பார்த்: தங்கட்குத்தெரியாதா? நேற்று சாயுங்காலம் ஒரு கொலை நடந்துவிட்டது. நமது ராமமூர்த்தி இருக்காரே புண்யவான் அவர் ஒரு கொரவனைக்கொலை செய்துவிட்டார். அச்சமயம் நானும் அகஸ்மாத்தாய் போய் மாட்டிகிட்டேன். என்னையும் ஒரு போடுபோட்டார். நல்லவேளையாய்க்காலில்தான்பட்டது

கிரு: அடடா! நீயேண்டா அங்குபோனய்?

பார்த்: எப்படியோ தலைவிதி இருந்தா யாரைத்தான்விட்டது? தங்கட்குத்தகவலே தெரியாதோ?

கிரு: இல்லையே! நான் சென்னையிலிருந்து இன்று காலையில்தானே வந்தேன்.

கம: அடே! பார்த்தசாரதி! நீ இங்குவராதே. ஊர் வம்பு ஒன்றையும் கொண்டுவந்து எங்கள் வீட்டில் போடாதே. உனக்கு எதாகிலும் செலவுக்கு வேண்டுமானல் வாங்கிக்கொண்டு சீக்கிரம் வெளியே போய்விடு. நல்ல விஷயம் பேசிக்கொண்டிருக்கும்போது நீ ஒரு அபசகுனம் மாதிரி இங்குவந்து தோன்றினய். அதிலும் ஒற்றைப்பார்ப்பான்..........

கிரு: அம்மா! அவனையேன் இவ்வாறெல்லாம் பேசுகிறீர்கள். அவன் பாவம் என்ன செய்தான். அவனை மற்றவர் சுட்டதும் அவன் குற்றமா? பார்த்தசாரதி! வா இப்படி.

அதோ அந்த பென்ஜின்மீது உட்காரு.

[பார்த்தசாரதி உட்கார்ந்ததும் கமலவேணி போய் விடுகிறாள்.]

என்ன? எல்லாம் ஒழுங்காய் முடிந்துவிட்டதல்லவா?

பார்த்: ஆமாம் சந்தேகமென்ன? ராமமூர்த்தியையும், வெள்ளையனையும் அரஸ்டு செய்து லாக்கப்பில் வைத்துவிட்டார்கள். பிரேதத்தை போஸ்ட்மார்ட்டம் செய்தாகிவிட்டது. ரக்கப் பூணன பெண்சாதியைக்கூட்டிவந்து மீனும்பிகை வீட்டில் விட்டிருக்கிறேன். கேஸ் முடியும்வரையில் அவள் அங்கு தானிருப்பாள்.

கிரு: உன்னிடம் பணம் எவ்வளவு பாக்கியிருக்கிறது?

பார்த்: எது பணம்? நீர் கொடுத்த பத்தாயிரத்தையும் வல்லிசாய்க் கொடுத்துவிட்டேன்.

கிரு: எண்ணுயிரம்தானே கொடுக்கச்சொன்னேன்.

பார்த்: ஆமாம், பெரிய புலிக்கு மூவாயிரம் போதவில்லை. ஐயாயிரம் அழவேண்டியிருந்தது. அப்புறம் சின்னப்புலிக்கும் அதே தொகை கொடுக்காவிட்டால் எப்படி? சிப்பந்திகளுக்கு இரண்டாயிரமாவது பட்டுவாடா செய்யவேண்டும். ரக்கப் பூணன் மனைவிக்கு ஆயிரம். மீனும்பிகைக்கும் வாக்கரிசி போடவேண்டும். பின்னர் இதர செலவுகள். ஐயாயிரம் என் கையில் கொடு. இல்லாவிட்டால் ஒன்றும் முடியாது.

கிரு: சரி, சரி, நீ கேட்பாயென்று எனக்குத்தெரியும். செக் மாற்றித்தயாராக வைத்திருக்கிறேன் பயப்படாதே.

பார்த்: என்ன? தங்கள் தாயார் என்னமோ உளறினார்களே? என்ன நல்ல காரியம் நான்வந்ததால் சகுனத்தடையாகிவிட்டது?

கிரு: எனக்குக்கல்யாணமாம்!

பார்த்: எப்போ?

கிரு: அடுத்த மாதம்.

பார்த்: பெண் யார்?

கிரு: சொல் பார்ப்போம்?

பார்த்: உங்கள் மாமன் செல்வராயர் புதல்வி சரஸ்வதி.

கிரு: உனக்கெப்படித்தெரியும்?

பார்த்: ஏன்? நான்தான் ஜோஸ்யனுயிற்றே.

கிரு: சரி, நான் கல்யாணம் செய்துகொள்வதில் உனக்குப்பூரண திருப்திதானே?

பார்த்: திருப்தியில்லாமலென்ன. நமது நட்பு மாருமலிருந்தால் சரிதான்.

கிரு: சரி, வா போவோம். உனக்கும் ஒரு கல்யாணம் முடித்து வைக்கிறேன்.

பார்த்: நேக்குக்கல்யாணம் இழவு ஒன்றும் வேண்டாம். காசுக்கு பேஜாரில்லாமலிருந்தா போதும்.

12-வது காட்சி.

இடம்: செல்வராயர் மாளிகையின் பின்புறம், பூங்காவனம்.

சமயம்: சாயுங்காலம்.

[சரஸ்வதியும், ராமமூர்த்தியின் மனைவி திலகவதியும் பேசிகொண்டிருக்கின்றனர்.]

சர: அக்கா! நீ கூறியதனைத்தும் கேட்டபின் அந்நீசனை மணப்பதைக்காட்டிலும் நான் தற்கொலை புரிந்துகொள்வதே மேலென்று எண்ணுகிறேன்.

தில: தற்கொலை புரிவானேன். அவனுச்கு நீ தகுந்த புத்தி கற்பித்தால் போதுமானது.

சர: உன் கணவர்மேல் சுமத்தப்பட்டிருக்கும் கேஸ் விசாரணை எப்போது போடப்பட்டிருக்கிறது?

தில: கீழ்க்கோர்ட்டு விசாரணை முடிந்து செசன்சுக்கு கமிட் செய்யப்பட்டிருக்கிறது. விசாரணை அடுத்த திங்கட்கிழமை.

சர: அச்சண்டாளனுக்கு என்னை மணமுடித்துக்கொடுப்பதும் அடுத்த திங்கட்கிழமையென்றே முடிவாகியிருக்கிறது. சரி, நீ செல், யாதொன்றுக்கும் கவலைப்படாமல் இரு. வினை விதைத்தோர் வினையும், தினை விதைத்தோர் தினையுமே அறுத்தெடுப்பார்கள். உன் கணவனுக்கு யாதொரு தீங்கும் ஏற்படாது. அவர் நிச்சயமாய் விடுதலை பெறுவார் என்று நம்பு. பாவம், அவருடைய தகப்பனார் உயிருடன் இருந்திருந்தால் உண்மைக்கொலையாளிகளைப்பிடிக்க முயற்சி செய்திருப்பார். இப்போது உன் நாதன் சிறையிலிருக்கும்போது உன் குடும்பத்தை கவனிக்க சரியான மனுஷாள் இல்லையல்லவா?

தில: திக்கற்றவருக்குத் தெய்வமே துணை. சென்னையிலிருந்து பாரிஸ்டர் எதிராஜை அமர்த்தியிருக்கிறோம். அவர் சிறந்த வக்கீலெனக்கேள்வி. எப்படியும் என் நாதர் விடுதலையடைவாரென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நான் அதைரியப்படவில்லை. இவ்விஷயங்களையெல்லாம் சொல்லி உன் மனதைப் புண்படுத்தியதற்காக என்னை மன்னிப்பாயாக. நான் சென்று வருகிறேன்.

[திலகவதி புறப்பட்டு வரும்போது எதிரில் கிருஷ்ணகாந்தன் வருகிறான்.]

கிரு: ஆ! திலகவதி! என் கண்ணே! உன் கணவன் விஷயம் கேள்விப்பட்டு நான் மிகவும் வருந்தினேன்.

தில: என் கண்ணே! என் மூக்கே!! என் கணவன் விஷயம் கேள்விப்பட்டு வருந்தினையா? ஆம், நீ வருந்தும் காலமும் அருகில்தானிருக்கிறது. விலகிச்செல்.

கிரு: அடடா! இஃதென்ன நாடகத்தில் நடிக்கிறதுபோலிருக்கிறதே!

50802

தில: நானு நடிக்கின்றேன்? உன் நடிப்பையும், படிப்பையும், சீக்கிரத்தில் உலகறியப்போகிறது. விலகிச்செல் அப்புறம்.

கிரு: உண்மையில் என்மீது கோபித்துப்பேசுகிருயா?

தில: செல்லடா மடையா செல். இல்லையேல்........ ...

[கிருஷ்ணகாந்தன் எட்டி அவளைக்கட்டிப்பிடித்து முத்தங்கொடுக்கிறுன். சரஸ்வதி! சரஸ்வதி! என்று கத்துகிருள். சப்தம் கேட்டதும் சரஸ்வதி ஓடி வருகிருள். வந்ததும் கிருஷ்ணகாந்தன் கரத்தைப்பிடித்து இழுத்துத்தள்ளி திலகவதியை மார்போடு அணைத்துக் கொண்டு]

சர: செங்கோட்டைத்தடியா! உன் மண்டை வரட்சியுற்றதால் இப்புரட்சியில் இறங்கினுப்போலிருக்கிறது. உனக்கு வெட்கமில்லையா?

[கிருஷ்ணகாந்தன் யாதொன்றும் பேசாது நிற்கிறுன்.]

சர: ஏன் உனக்குப்பேசவும் நாவெழவில்லையோ? இம்மாதை ஏன் வழிமறித்து வாது செய்தாய்? அவள் வீட்டில் நீ பட்ட அவமானம் போதாதோ?

கிரு: ஹா! சரஸ்வதி! நீயுமா என்னை இவ்வாறு பரிகசிக்கவேண்டும்? இவள் என்னைப்பரிகசித்து ஏசினுள். அதற்காகவே.... ...

சர: அதற்காகக்கூசாமல் அவளைப்பிடித்தீரோ? பேஷ்! உமது ஆண்மையே ஆண்மை! சுத்த வீரர்!

[திலகவதியை நோக்கி]

சகோதரி! நெஞ்சங்கலங்காது வீடு செல்வாய். இவ்வாக்கனுக்கு வேண்டிய புத்திமதிகளை நான் போதித்தனுப்புகிறேன்

[திலகவதி செல்கிருள்,]

கிரு: கண்ணே! நீயும் இவ்வாறு என்னை ஏசலாகுமோ?

சர: சீ! வெட்கமற்ற மூர்க்கா! வேசிப்பிரியா! விநாச மதியா! கண்ணென்றும் மூக்கென்றும் என்னை அழையாதே போ.

கிரு: சரஸ்வதி! நீயோ என்னை இவ்வாறு கடிவது? அடுத்த திங்கட்கிழமை நமது திருமணம் நிச்சயிக்கப்பட்டிருப்பதை நீ யறியாயா?

சர: திருமணமா? திருமணம்! சுற்றமறியா நாய்கட்கும் திருமண முண்டோ?

கிரு: சரஸ்வதி! என் பிரியே! என்னையேன் இவ்வாறு தூஷித்து ஏளனம் செய்கிறாய்? நான் உனக்கு என்ன அபராதம் செய்தேன்?

சர: [சற்று யோசித்து] அபராதமா? உன்னால் முடியுமானால் எனக்குக்கோடி அபராதத்தை செய். நான் அனைத்தையும் சகித்துக்கொள்கிறேன். ஆனால் என் வீடு தேடிவந்த ஒரு மாசற்ற பெண்ணை என் கண்முன் நீ கற்பழிக்க முயன்றனை. காதகன்! அதைக்கண்ணாரக்கண்டபின் நானுன்னை மணக்கவா?

கிரு: சரஸ்வதி! என்னைக்கோபியாதே? அவள் கற்பையழிக்க நான் கனவிலும் கருதவில்லை. அவளே என்னைக்கண்டதும் கட்டிக்தழுவினாள். நீ தீர விசாரியாது என்னை ஏசுதல் நீதியாகுமா?

சர: ஓஹோ! உம்மைக்கண்டதும் அவள் கட்டி ஆலிங்கனம் செய்தாள். அக்காட்சியை நான் கண்டு களிப்புறவே என்னையும் அழைத்தாள்! பேஷ்! உமது கற்பனை வெகு நன்றாய் இருக்கிறது. கம்பர்தான் கற்பனையில் வல்லவர் என்றிருந்தேன். அவரைத்தோற்பிக்க நீர் அவதரித்துள்ளீர்போலும்.

கிரு: [சற்றுதிடங்கொண்டவனாய்]கண்ணே! கற்பனையாதுமில்லை. உண்மையே சொன்னேன். நமது விவாகத்தைத்தடைப்படுத்தவே அவள் அவ்வாறு சூழ்ச்சி செய்துள்ளனள்.

சர: நம்மைப்பிரித்து அவள் அடையும் இலாபம் யாதோ?

கிரு: பொறாமை தவிரித்து வேறொன்றுமில்லை.

சா: பொய், பொய் முற்றிலும் பொய். உமது வார்த்தையைநான் நம்பமாட்டேன். அவள் ஏதோ பரிகசித்ததாகவும், அதற்காக அவளைக்கட்டியணைத்ததாகவும் சற்று முன்புதானே என்னிடம் கூறினீர். அதற்குள் எவ்வளவு சாமார்த்தியமாக மறைக்கப் பார்க்கிறீர்? அவளே உம்மை அணையவலிய வந்திருந்தபோதி லும் அதற்கு நீர் எவ்வாறு உடன்படலாம்? பிறர் பெண்டீர் தமக்குத்தாயும், தங்கையுமென்ற உணர்ச்சி தம்முள் புதிதாய் எப்படி ஏற்படமுடியும்? பாரம்பர்யமாய் பிறர் மனையை நாய்போல் நாடித்திரியும் வழக்கத்துக்கு செங்கோட்டைக் குடும்பம் பெயர் பெற்றதல்லவா? சடகோபய்யங்காரின் முதல் தாரம் கிணற்றில் வீழ்ந்து மடிவதற்கு உன் தந்தை காரணமாக இருந்தார். சென்னையில் பாபம்! அந்த இளங் கைம்பெண்! உபாத்தியாயர் மகளை உன் சிறிய தந்தை கற் பழித்துக் கருப்படுத்தித் தெருவில் ஓட்டி வைத்தார். நீர் திலகவதியின் இல்லம் புகுந்து அவளைக் கற்பழிக்க முயன்றீர் ராமமூர்த்தியால் நன்றாக உதையும் பட்டீர். உமது செல்வச் செருக்குக்கருக்கப்பட்டு நீர் சீரழியும் நாள் நெருங்கிவிட்டது. செல்லும் என் முன் நில்லாது. [செல்ல எத்தனிக்கிறாள்.]

கிரு: சாஸ்வதி! சாஸ்வதி!! அச்சண்டாளி ஏதேதோ சொல்லி உன் நெஞ்சில் நஞ்சை ஊட்டிவிட்டாள்.

சா: [திரும்பி நின்று] என் நெஞ்சில் நஞ்சொன்றுமில்லை. உமது உடலிலும் மனதிலும் நஞ்சேறித்தோய்ந்து உறைந்து போயுள் ளது. கொஞ்சமேனும் லஜ்ஜையின்றிக் குச்சுக்காரிகள் மனை புகுந்து அவர்களது நச்சுப்பொய்கையில் மூழ்கி முழுக்காடி உமது உடலனைத்தும் விஷமேறியுள்ளது. உம்மை மணக்கும் நாரி நானல்ல. நாணமற்ற பதரே! நில்லாமற் செல்லும். [முகத்தைத்திருப்பிக்கொள்கிறாள்.]

கிரு: சாஸ்வதி! நீ கூறுவது முற்றிலும் அபத்தம். நான் தீய வழி சென்றறியேன். சத்தியம். சத்தியம். நீ என்னை நம்பு வாயாக.

சர: காம விகாரங்கொண்டு கண்ணிழந்து பஞ்சமா பாதகங்களையும் நெஞ்சழுத்தத்தோடு செய்துவரும் உமக்கு சத்தியமும் ஒரு கேடா? மூர்க்கா! என் முன்னின்று என் கோபத்தை மூட்டாதே. அகன்றுபோ.

கிரு: ஹா! இதுவும் என் தலைவிதியா? ஈசா! ஈசா!

சர: உனக்கோர் ஈசனும் உண்டோ? ஈசனையும் நாசம் செய்விக்கும் நீசனே! செல் என்முனைநிற்காதே. இல்லையேல்உன்னை.... [பாய்ந்து கொன்று விடுபவள்போல் பயங்கரமான தோற்றத்துடன நிற்கிறாள்].

கிரு: சரஸ்வதி! நீ என்னைச்சோதிக்கின்றனையோ?

சர: சீ! துஷ்டா! பேசாதே! உன் மனமே உன்னைச்சோதிக்கும். உன் முன்னின்று பேசுவதும் மாபாவம் [செல்கிறாள். நான் கடி சென்றதும் "இவன் என்ன செய்கிறான் கவனிப்போம்" என்று மனதிற் கருதி அருகிலுள்ள ஒரு புதருள் மறைந்து கொள்கிறாள். கிருஷ்ணகாந்தன் அவள் சென்றதையும், பின்னர் மறைந்ததையும் கவனியாதவனாய்ச்சற்று நேரம் ஆழ்ந்து சிந்தித்திருந்து, பிறகு தலை நிமிர்ந்து பார்க்கிறான் சரஸ்வதியைக்காணாது தன்னுள்]

கிரு: ஹா! உன்னை விட்டேனா பார் [இரண்டடிமுன் சென்று பின்னரும் யோசித்து] அவளைப்பேசி யாது பயன்? நான் கெட்டேன், கெட்டேன். நான் பாதகன், பதிதன், சண்டாளன். அவள் கூறியதனைத்தும் உண்மையே அற்ப சுகத்தை எண்ணி அநேகம் பெண்களைக்கெடுத்தேன். சென்னையில் நான் நுழையாத தாசிகள் வீடு ஒன்றேனுமில்லை சதா சர்வ காலமும் சரஸ்வதி கூறியவாறு நச்சுப்பொய்கையில் நீந்திக்குளித்தேன். மேக நோயால் இன்று அவதிப்படுகிறேன். வைத்யர் வீடு சென்று சிகிச்சை செய்யவும் மனோ திடமில்லாத கோழையாயினேன். விளம்பரத்தில் கண்ட மருந்துகளையெல்லாம் வரவழைத்துண்டு உடல் நலங் கெட்டேன். பிறரிடம் மனம் விட்டுச்சொல்லவும் அசக்தனாயினேன். ஹா! சரஸ்வதி பாம்புபோல் சீறினாள்! அவள் சீறியதில் குற்றமுமில்லை. அவள் என்னை இன்று மணப்பாளாயின்

என் உடலிலுள்ள நோய் அவளையும் பற்றும். அவள் வயிற்றிற் பிறக்கும் சிசுக்களையும் பற்றும். சுக்கில சுரோணிதத்தில் மேக நோய்க்கிருமிகள் தோன்றுவதாலேயே உலகில் குருடரும், செவிடரும், இதர அங்க ஈனர்களும், ரோகிகளும் பிறக்கின்றனர். மக்கள் இதையறியாது வீணே ஈசனையும். விதியையும் நோகின்றனர். ஐயோ, நான் செய்த கொடுமைகளையெல்லாம் நினைக்கும்போது என்னுடல் நடுங்குகின்றதே. எனது திரேகமெங்கும் இன்று தடிப்பும் எரிச்சலுமாய் இருக்கிறது. ஆ! நான் எவ்வளவு பாதகம் செய்தேன். என்மீது அன்பும் ஆதரவுமுள்ள சடகோபரின் மனைவி கோதைநாயகியின் கற்பையழித்து அவளைப் பதி துரோகம் செய்வித்தேன். கள்ளங் கபடமற்ற முருகேசன் மகள் பார்வதியைக்கெடுத்தேன். யாதொரு பழி பாவமுமறியாத ராமமூர்த்தியை இன்று கொலைபாதகனுக்கினேன். மாசற்ற அவன் மனைவி மனம்பதற அவளைக்கட்டித்தழுவித் துன்புறுத்தினேன். திக்கற்ற ஒரு ஏழையை நயவஞ்சக மாய்க்கூட்டிவந்து கொலையும் புரிந்தேன். [தனக்கு நேரே உற்றுப்பார்க்கிறான்] ஹா! யாரது? ரக்கப்பூணனு? என்னைப் பழி வாங்க வந்தனையா? ஹா! வேண்டாம், வேண்டாம். [கீழே மூர்ச்சித்து விழுகிறான். சரஸ்வதி மறைவிலிருந்து தோன்றி]

சர: அனைத்தும் கேட்டறிந்தேன். சண்டாளன் நிரபராதிகளைத் தண்டனைக்கும் அவதிக்கும் உள்ளாக்கிய கசடன். வஞ்சமற்ற பெண்களை வஞ்சித்து கற்பழித்த வஞ்சகன். உடலும், மனதும், அறிவும், அனைத்தும் நஞ்சேறிய விஷப்பாம்பினுங் கொடியவன். இவனையா என் வாழ்க்கைத்துணைவனுக நான் எற்கவிருந்தேன். பெண்களின் கற்பை அழிக்கவெனவேபேய் போல் தோன்றிய இவனை இதோ [இடுப்பிலிருந்து கத்தியை உருவி] இக்கட்கத்தால் குத்திக்கொல்லட்டுமா? ஒரு கொடிய விஷ ஜந்துவை நசுக்குவதுபோல் இவனை நசுக்கிப் பொசுக்கட்டுமா? இவனைக்கொல்வதால் பாவமில்லை. புனிதமேயுண்டு. சே! இந்நீசன் என் மாசற்ற கரங்களால் இறத்தல் தகாது. என்னுல் கொல்லப்படுவதற்கும் இவன் அருகதை

யற்றவன். இவனைப்பிடித்துள்ள நோயே இவனைக்கொல்லட்டும். அங்கமெலாம் அழுகிப் புழுத்து இவன் சாகட்டும். இவன்மீது மோதிய இக்காற்றும் என்மீது படலாகாது. நாம் இவ்விடத்தைவிட்டு வீடு செல்வோம். [விரைந்து செல்கிருள்]

[பார்த்தசாரதி உல்லாசமாகப்பாடிக்கொண்டு வருகிருன்]

பார்த்: [குனிந்துபார்த்து] யாரது? செங்கோட்டை ஜமீன்தாரா? பிரபு! பிரபு! [தட்டியெழுப்புகிருன். கிருஷ்ணகாந்தன் கண் விழித்து எழுந்து உட்காருகிருன்] பேஷ்! உறங்குவதற்கு நல்ல இடம் பார்த்தீர்கள். சரஸ்வதி தேவியின் சிங்காரப் பூங்காவனமல்லவா இது?

கிரு: சீ! அச்சண்டாளியின் பெயரை என் முன் உரைக்காதே. அவள் தேவியா? தேவடியாள்.

பார்த்: சந்தேகமென்ன? சரஸ்வதி மகாவிஷ்ணுவிற்கு அடியாள் தானே?

கிரு: சாரதி! விகடமும் கேளிக்கையும் என்னிடம் வேண்டாம். நீ எப்படி இங்கு வந்தாய்?

பார்த்: தங்களைத்தேடாத இடமெல்லாம் தேடினேன் எங்கும் காணவில்லை. கடைசியில் இங்கு சென்றிருப்பதாகக்கேட்டு ஓடிவந்தேன். காதற்கிளத்தியை காணவந்த இடத்தில் இவ்வளவு சோகம் ஏற்படுவானேன்.

கிரு: காதலா? காதல்! காதலினும் சாதலே பெரிது. இன்று முதல் என்னோடு இவ்விஷயமாகப்பேசாதே.

பார்த்: ஏதேது? தங்கட்கு எப்போதிருந்து ஞானம் இவ்வாறு முற்றிப்போயிற்று?

கிரு: என்னோடு ஒன்றும் பேசாதே.

பார்த்: யாரால் தங்கட்கு என்ன குறை ஏற்பட்டது? சொல்லுங்கள். ஒரு நொடியில் ஹதம் செய்துவிடுகிறேன். ஏன்? பிரபு! ஒன்றும் பேசாது மௌனம் சாதிக்கிறீர். உலகத்தில்

மானத்தைவிட மிஞ்சியது பிறிதொன்றுமில்லை. கற்றாண் பெரும்பாரந்தாங்கின் பிளர்ந்திருவதல்லால் தளர்ந்து வளை யுமோ? தாங்கள் மனந்தளர்ந்து இவ்வாறு வாடுதல் காண என் மனம் சகிக்கவில்லை. உங்களுடைய யோக்யதைக்கும் அந்தஸ்திற்கும் தங்களால் ஆகாத கார்யமும் ஒன்றுண்டோ?

கிரு: சாரதி! என்னைத்தொந்திரவு செய்யாதே. இவ்வுலகில் நான் பெற்ற சுகம் போதும். நான் காஷாயமுடுத்தித் துறவி யாகப்போகிறேன்.

பார்த்: இந்த இருபத்தைந்தாவது வயதிலா? அந்தச்சுகத்தைஅநு பவிக்கத்தங்கட்கு இன்னும் வயதாகவில்லை. அதிலும் சுகம் துக்கம் அனைத்துமுண்டு. சந்யாசி ஆவதென்றால் லேசான கார்யமா? அதற்கும் ஒரு மடம் வேண்டும். பக்த கோடிகள் வேண்டும். காலாலிட்ட வேலையைக் கையால் செய்வதற்கு பல சிஷ்யர்கள் வேண்டும். அங்கும் உருத்திராக்ஷமணிந்த மங்கையர் பலர் தம்மைச்சூழ்ந்து நிற்கவேண்டும். இன்று தாங்கள் பூண்டிருப்பது லௌகீக சந்நியாசம். தாங்கள் அடையவிரும்புவது வைதீக சந்நியாசம். இரண்டுக்கும் பெயரிலும் வேஷத்திலும் பேதமேயொழிய கார்யத்தில் பிரமாதமாக யாதொரு பேதமுமில்லையே.

கிரு: சாரதி! நீ எதையும் எவ்வளவு லேசாகப் பேசுகிறாய்? உனக் குக்கவலை யென்பது ஒரு சிறிது மில்லையே?

பார்த்: தாங்கள் உயிரோடிருக்கும்வரையில் எனக்கென்ன கவலை வரப்போகிறது? [ஒரு புஷ்பச்செடியைச் சுட்டிக்காட்டி] அதோ பாருங்கள் அக்கறுவண்டு! ரீங்காரம் செய்துகொண்டு ஒவ்வொரு மலர் மீதும் வீற்றிருந்து காதற்கதைகள் பேசிக் கள்ளுண்பதை! நாம் என்ன அக்கறுவண்டிலும் கேவல மானவர்களா? பூங்காவனத்தில் எண்ணிறந்த புஷ்பச்செடி கள் இருப்பதுபோல இப்பூவுலகில் எவ்வளவோ கோடானு கோடி கறுவிழிகொண்ட வஞ்சிக்கொடிகள் இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரையும் நாடிக்கூடி அதரபானம் செய்து

ஆனந்தித்து வாழ்வதற்கல்லாது இந்த ஜென்மம் எடுத்த நோக்கம்தான் என்னவோ? எண்ணித்துணி கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பதிழுக்கு என்றபடி நாம் ஒரு காரியத்தில் பிரவேசித்தபின் அதைப்பற்றி எண்ணினால் அதனால் இழுக்கே ஏற்படும். எழுந்து வாருங்கள் செல்வோம்.

கிரு: [மெள்ள எழுந்து] அத்திலகவதி என்னை இங்கும் அவமதித்தாள்.

பாரத்: அப்படியா? ம்ம். அச்சிருக்கிக்கு அவ்வளவாகிவிட்டதா? அவளை உங்கள் காலடியில் கொண்டுவந்து நான் வீழ்த்தாவிட்டால் என் பெயர் பார்த்தசாரதியல்ல. நீங்கள் கவலையொழித்து வாருங்கள் போவோம்.

கிரு: சரஸ்வதியும் அவளோடு சேர்ந்து ஒத்துதினாள்.

பார்த்: சே! அவள் பாவம் சிறு பெண். அவள் என்ன பாரம் தூரம் தெரிந்தவள். கலைத்தால் கல்லும் கரையுமென்பார்கள். அத்திலகவதியை அடக்கிவிட்டால், சரஸ்வதி தானாய் ஒடுங்கி விடுகிறாள். வாருங்கள் நேரமாகிறது.

கிரு: எங்கே செல்வது? எனக்கொன்றும் தெரியவில்லை. பித்துப் பிடித்தவன்போலிருக்கிறேன்.

பார்த்: ஈஸ்வரனுக்கே பித்தன் என்றுதான் பெயர். பித்தில்லாமலா அவர் தன் தலையில் கங்கையைச்சுமந்துகொண்டிருக்கிறார்? மலபாரிலிருந்து ஒரு ஒன்னுந்தரமான குட்டி வந்திருக்கிறாள். எல்லாம் பேசி ஏற்பாடு செய்துவிட்டு வந்திருக்கிறேன். வாருங்கள் விரைவில். [இருவரும் வந்தவழியே திரும்புகின்றனர்]

13-வது காட்சி.

இடம்: சிதம்பரம் செசன்ஸ் கோர்ட்டு.

சமயம்: முற்பகல்.

[நீதிபதி நடுநாயகமாக வீற்றிருக்கிறார். அவருக்கு எதிர்ப்புறம் ஒரு குமாஸ்தா. குமாஸ்தாவுக்கு எதிர்ப்புறம் ஒரு பெரியமேஜை. மேஜையின் வலதுபுறம் பப்ளிக்பிராசிகயூட்டரும் அவருக்குதவியாக போலீஸ்பிராசிக்யூட்டிங் இன்ஸ்பெக்டரும், இடதுபுறம பாரிஸ்டர் எதிராஜுலும் அவருக்குதவியாக மற்றொரு வக்கீலும் உட்கார்ந்திருக்கின்றனர். கைதிக்கூண்டில் ராமமூர்த்தியும் வெள்ளையனும் நிற்கின்றனர். அருகில் சேகவர் இருவர் நிற்கிறார்கள்.]

ஜட்: பிராசிக்யூஷன் தரப்பார் தங்கள் கேஸை ஆரம்பிக்கலாம்.

எதி: கனம் ஜட்ஜ் அவர்களே! இவ்வழக்கில் முதல் குற்றவாளியாக இருப்பவர் ஒரு பெரிய மிராசுதார். மிகவும் கண்யமுள்ளவர். அவர் உட்காருவதற்கு ஒரு ஆசனமளிக்குமாறு வேண்டுகிறேன்.

சர். வக்: கோர்ட்டாரவர்கள் இக்கோரிக்கையைக் கவனிக்கமாட்டார்கள் என்றே எண்ணுகிறேன். இந்நாட்டின் சட்டம் ஏழை பணக்காரர் எல்லோருக்கும் ஒரேவிதமானது. பாரபட்சம் காட்டமுடியாது. ஆசனம் அளிப்பதாயிருந்தால் இரண்டு எதிரிகட்கும் அளிக்கட்டும். எனக்கு ஆட்சேபனையில்லை.

எதி: இச்சமத்துவ உணர்ச்சியை என் நண்பர் எல்லா விஷயத்திலும் காட்டுகிறார் என்றே நம்புகிறேன்.

ஜட்: [புன்முறுவலுடன்] முதல் குற்றவாளிக்கு ஒரு ஆசனமளிக்க நான் அனுமதிக்கிறேன். அவர் தூங்காது விழித்திருக்கவேண்டும். [ராமமூர்த்திக்கு ஒரு நாற்காலி கொடுக்கப்படுகிறது.]

சர். வக்: கனம் பொருந்திய ஜட்ஜ் அவர்களே! அறிவிற்சிறந்த ஜூரர்களே! இன்று நம்முன் விசாரணைக்கு வந்திருக்கும்படியான வழக்கு யாதொரு சிக்கலுமின்றி மிக்கச்சுலபமாக

தெரிந்துகொள்ளக்கூடியது. ரக்கப்பூணன் என்ற குறவனை முதல் எதிரியின் தூண்டுதலின்பேரில் இரண்டாவது எதிரி வஞ்சகமாய் அழைத்துவந்தான். இரண்டு எதிரிகளும் சேர்ந்து அவனைக்கொலை செய்துவிட்டார்கள். இச்சம்பவத்தை நேரிற்கண்டு அலறி ஓடிய பார்த்தசாரதி என்பவனை முதல் எதிரி தன் கைத்துப்பாக்கியால் சுட்டார். தெய்வாதீனமாய்க்குண்டு அவருடைய வலது குதிங்காலில் படவே அவர் பிழைத்துக்கொண்டார். எனது கூற்றை மெய்ப்பிக்க சாட்சிகளை விசாரணை செய்கிறேன் [குமாஸ்தாவிடம்] முதல் சாட்சி பார்த்தசாரதி அய்யங்காரைக்கூப்பிடுங்கள்.

குமா: [சேவகனிடம்] பார்த்தசாரதி அய்யங்கார்.

சேவ: பார்த்தசாரதி அய்யங்கார்! பார்த்தசாரதி அய்யங்கார்!! பார்த்தசாரதி அய்யங்கார்!!!

[பார்த்தசாரதி அய்யங்கார் சாட்சிக்கூண்டில் ஏறி நின்றவுடன்].

குமா: சர்வ வல்லமையுள்ள தெய்வத்தின் முன்பாக நான் சத்தியமாய்ச்சொல்கிறேன்- என்பதாகச்சொல்லும்.

பார்த்: சர்வ வல்லமையுள்ள தெய்வத்தின் முன்பாக நான் சொல்வதெல்லாம் சத்தியம்.

சர். வக்: உமது பெயர் என்ன?

பார்த்: பார்த்தசாரதி அய்யங்கார்.

[ஜட்ஜ் ஒரு கடிதத்தில் எழுதிக்கொள்ளவாரம்பிக்கிறார்]

சர். வக்: சென்ற மாதம் 6-ம் தேதி என்ன நடந்தது?

பார்த்: நமது டவுனுக்கு அப்பாலுள்ள கும்பகோணம் செல்லும் பாதையருகேயுள்ள ஜல்லிக்குழியில் மாலை நான்கு மணி சுமாருக்கு நான் மலபாதை செய்துகொண்டிருந்தேன். அச்சமயம் இதோ உட்கார்ந்திருக்கும் ராமமூர்த்தியும், அவர் பக்கத்தில் நிற்கும் வெள்ளையனும் ரக்கப்பூணன் என்பவனை பிடித்துக்கட்டி இழுத்துக்கொண்டுவந்தார்கள். நான் உட்

கார்ந்திருந்தது இவர்களுக்குத்தெரியவில்லை. எனக்கு இருபது கெஜத்துக்கு அப்பால் வந்து நின்றதும் ராமமூர்த்தி "வெள்ளையா! இவனை ஒரே வெட்டாய் வெட்டு" என்றார். வெள்ளையன் கத்தியை ஓங்கினன். ரக்கப்பூணன் திமிறிக்கொண்டு ஓட்டமெடுத்தான். உடனே ராமமூர்த்தி தன் கைத் துப்பாக்கியை எடுத்து ரக்கப்பூணனைப்பார்த்து இரண்டுமுறை சுட்டார். அவன் கீழே விழுந்தான். வெள்ளையன் ஓடிப்போய் அவன் கழுத்தை வெட்டினன். நான் ஐயையோ கொலைபாதகம் என்று கத்தினேன். ராமமூர்த்தி துப்பாக்கியை என் பக்கம் நீட்டினர். நான் ஓட்டமெடுத்தேன். ஒரு வெடி சப்தம் கேட்டது. எனது வலது குதிங்காலில் ஒரு குண்டு பாய்ந்தாப்போல் தெரிந்தது. நான் நிற்கவுமில்லை திரும்பிப்பார்க்கவுமில்லை. ஒரே ஓட்டமாய்ப் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடி வந்தேன். சப் இன்ஸ்பெக்டர் சொர்ணமுத்துப் பிள்ளை இருந்தார். நான் சொன்னதை எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு ஒரு சேவகனுடன் என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினர்.

சர். வக்: போலீஸ் ஸ்டேசனில் நீர் கொடுத்த வாக்குமூலம் இது தானா?

பார்த்: [கடிதத்தை வாங்கிப்பார்த்துவிட்டு] ஆம், இதுதான். [வக்கீல் உட்கார்ந்து கொள்கிறார்].

எதி: உமக்கு என்ன தொழில்?

பார்த்: யாதொரு தொழிலுமில்லை.

எதி: எவ்வாறு ஜீவிதம் செய்கிறீர்.

பார்த்: தங்களைப்போன்ற பெரியவாள் தயவால்.

எதி: ராமமூர்த்தியின் தயவு உமக்கு கிடைப்பதில் ஏதேனும் சங்கடம் ஏற்பட்டதா?

பார்த்: அவர் தயவை நான் நாடியதுமில்லை. அவர் மறுத்தது மில்லை.

எதி: ரக்கப்பூணன் ஓடும்போது ராமமூர்த்தி அவனுக்குப்பின்புறமிருந்துதானே சுட்டார்?

பார்த்: ஆம், அப்படித்தானே சொன்னேன்.

எதி: அப்படியானால் குண்டு ரக்கப்பூணனுடைய முதுகில்தானே பாய்ந்திருக்கவேண்டும்?

பார்த்: அதெப்படி சொல்லமுடியும்?

எதி: நீர் பார்க்கவில்லையா?

பார்த்: ஆம், பார்த்தேன். அவன் ஓடினான், இவர் சுட்டார், அவன் வீழ்ந்தான். குண்டு எங்கு பட்டதோ எனக்குத் தெரியாது. நான் அருகிற் சென்று பார்க்கவில்லை.

எதி: ஒருவன் ஓடும்போது அவன் பின்புறமாகவிருந்து மற்றொருவன் சுட்டால் குண்டு முதுகில்தானே பாயும்?

பார்த்: முதுகிலும் பாயலாம், கையிலும் பாயலாம், காலிலும் பாயலாம், தலையிலும் பாயலாம், ஆகாசத்திலும் பாயலாம். எல்லாம் அவர் வைக்கும் குறியைப்பொருத்தது.

எதி: பேஷ்! உமது அறிவை மெச்சினேன். ஆனால் குண்டு மார்பில் பாய்ந்திருக்கமுடியாதே?

பார்த்: ஏன், அவன் திருகீட்டு வீழ்ந்தால் மார்பிலும் பாயலாம்.

எதி: குண்டு பாய்ந்தபின்தானே அவன் விழுந்தான். அப்போது மார்பில் பட்டிருக்கமுடியாதே?

பார்த்: என்னமோ சார் என் மூளைக்கு அவ்வளவுதூரம் ஒன்றும் எட்டலே.

எதி: ஜல்லிக்குழிக்கும் கும்பகோணம் செல்லும் வண்டிப்பாதைக்கும் எவ்வளவு தூரமிருக்கும்?

பார்த்: ஒரு பர்லாங்கு தூரமிருக்கலாம்.

எதி: ஜல்லிக்குழியில் நடைபெறும் சம்பவம் ரஸ்தாவில் நின்று பார்ப்பவர்க்குத்தெரியாதா?

பார்த்: தெரியாது. நடுவில் ஒரு பெரும்பாறை மறைத்துக்கொண்டிருக்கிறது. மேலும் ஜல்லி எடுத்தெடுத்து எங்கும் ஒரே குழியாயிருக்கிறது.

எதி: சரி! ஜல்லிக்குழிக்கும் போலீஸ் ஸ்டேசனுக்கும் எவ்வளவு தூரம்?

பார்த்: குறுக்குப்பாதையில் சென்றால் ஒரு மைல்.

எதி: நீர் எந்தப்பாதையில் போலீஸ் ஸ்டேஷனுக்குப்போனீர்?

பார்த்: குறுக்குப்பாதையில்.

எதி: ஓட்டமாய்ச்சென்றீரா? சாவதானமாய் நடந்தா?

பார்த்: தலைகால் தெரியாமல் ஓடினேன்.

எதி: வழியில் ஏன் ஓடுகிறாய் என்று யாரும் கேட்கவில்லையா?

பார்த்: யார் யாரோ கேட்டார்கள். சிலர் நின்று பார்த்தார்கள். நான் வாயைத்திறவாது ஓடினேன்.

எதி: செங்கோட்டை ஜமீன் கிருஷ்ணகாந்தர் உமக்கு ரொம்பவும் வேண்டியவரா?

சர். வக்: [எழுந்து] இந்தக்கேள்விக்கும் இந்தக்கேசிற்கும் சம்பந்தமில்லையாதலால் நான் ஆட்சேபிக்கிறேன் [உட்காருகிறார்]

ஜட்ஜ்: I do not see any reason why I should disallow the question. (சாட்சியைப்பார்த்து நீர் அக்கேள்விக்குப் பதில் சொல்லும்)

பார்த்: எல்லோரும் எனக்கு வேண்டியவர்தான்.

எதி: கிருஷ்ணகாந்தரை ராமமூர்த்தி ஒருநாள் உதைத்தது உமக்குத்தெரியுமல்லவா?

பார்த்: எனக்குத்தெரியாது.

[பாரிஸ்டர் எதிராஜ் உட்கார்ந்த பின்னர் குமாஸ்தா சொர்ணமுத்துப்பிள்ளையைகூப்பிடும்படி கட்டளையிடுகிறார்.

சேவகன் மும்முறை கூப்பிட்டதும் அவர் சாட்சிக் கூண்டில் வந்து நிற்கிறார். வழக்கப்படி பிரமாணம் வாங்கப்படுகிறது பார்த்தசாரதி ஜட்ஜூ எழுதிய தனது சாட்சியத்தின் கீழ் கையெழுத்துப்போட்டு விட்டு கோர்ட்டில் ஒருபுறமாகக்கீழே உட்காருகிறான்]

சர். வக்: உமது பெயரென்ன?

சோர்: சொர்ணமுத்துப்பிள்ளை,

சர். வக்: உமக்கு என்ன உத்யோகம்.

சோர்: போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்.

சர். வக்: எங்கு வேலை பார்க்கிறீர்?

சோர்: சிதம்பரம் போலீஸ் ஸ்டேசனில்.

சர். வக்: கடந்த மாதம் 6-ம் தேதி மாலை 4-30 மணி சுமாருக்கு பார்த்தசாரதி என்பவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தாரா?

சோர்: ஆம், வந்தார்.

சர் வக்: ரக்கப்பூணன் என்பவனை ராமமூர்த்தியும் வெள்ளையனும் கொலை செய்ததாகவும், அவருடைய வலது குதிங்காலில் ராமமூர்த்தி தன் கைத்துப்பாக்கியால் சுட்டதாகவும் உம்மிடம் வாக்குமூலம் கொடுத்தாரா?

சோர்: ஆம்.

சர்: வக்: [ஒரு கடிதத்தைக்காட்டி] அவ்வாக்கு மூலம் இது தானே?

சோர்: [பார்த்துவிட்டு] ஆம்.

சர். வக்: கொலை நடந்த ஜல்லிக்குழிக்கு உடனே சென்றீரா?

சோர்: ஆம், சென்றேன்.

சர். வக்: உம்மோடு யார் வந்தது?

சோர்: எட்கான்ஸ்டபுள் சங்கரன் நாயரும், இரண்டு கான்ஸ்டபுள்களும்.

சர். வக்: சென்ற இடத்தில் என்ன கண்டீர்?

சோர்: ரக்கப்பூணன் என்ற குறவன் தலை வேருகவும், உடல் வேருகவும் துண்டிக்கப்பட்டுக்கிடந்தான்.

சர். வக்: அவனை எப்படி அடையாளங்கண்டுபிடித்தீர்?

சோர்: அவனை எனக்குப்பல வருடங்களாகத்தெரியும். கேடி லிஸ்டில் தாக்கல் செய்யப்பட்டவன்.

சர். வக்: அவன் சிறை சென்றிருக்கிருனு?

சோர்: பன்முறை சென்றிருக்கிருன். கடைசியாக அதோ நிற்கும் ராமமூர்த்தியின் பசுவொன்றைத்திருடியதற்காகச்சிறை சென்று, இரண்டு மாதங்களுக்கு முன்புதான் விடுதலையடைந்தான்.

[சர்க்கார் வக்கீல உட்கார்ந்துகொள்ளுகிருர்].

எதி: கொலையுண்ட பிரேதத்தைச்சுற்றிலும் இரத்தம் தோய்ந்திருந்ததா?

சோர்: ஆம், தோய்ந்திருந்தது.

எதி: அதற்கு அத்தாட்சியாகக்கோர்ட்டில் எதையேனும் ஆஜர் செய்திருக்கிறீரா?

சோர்: இல்லை.

எதி: சவத்தின்மீதிருந்த ஆடைகளில் ரத்தம் தோய்ந்திருந்ததா?

சோர்: ஆம், அவற்றை ஆஜர் செய்திருக்கிறேன்.

எதி: நீர் சென்றபோது ஆடைகளில் தோய்ந்திருந்த ரத்தம் ஈரமாக இருந்ததா? அல்லது நன்ருகக்காய்ந்திருந்ததா?

சோர்: [சற்று யோசித்து] நான் அதைக்கவனிக்கவில்லை.

எதி: இவ்விரண்டு குற்றவாளிகளையும் நீர்தானே கைது செய்தீர்?

சோர்: ஆம்.

எதி: எங்கு? எப்போது?

சோர்: சென்ற மாதம் 6-ந்தேதி இரவு 8-மணிக்கு ராமமூர்த்தியின் வீட்டில்.

எதி: நீர் சென்றபோது ராமமூர்த்தி என்ன செய்துகொண்டிருந்தார்?

சோர்: சாப்பிட்டுக்கொண்டிருந்தார். வெள்ளையன் சாதம் பரிமாறிக்கொண்டிருந்தான்.

எதி: உம்மைக்கண்டதும் இவ்விரு எதிரிகளும் ஓட்டமெடுத்தார்களா?

சோர்: ஓடமுடியாதபடி வீட்டைச்சுற்றிலும் காவல் வைத்திருந்தேன்.

எதி: கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொன்னால் போதுமானது. ஓடினார்களா? ஓட எத்தனம் செய்தார்களா?

சோர்: இல்லை.

எதி: இவர்கள் வீட்டை சோதனையிட்டீரா?

சோர்: ஆம்.

எதி: ரக்கப்பூணைச்சுட்ட துப்பாக்கியாவது, அவனை வெட்டிய கத்தியாவது கிடைத்ததா?

சோர்: இல்லை.

[பாரிஸ்டர் எத்திராஜ் உட்காருகிறார். சொர்ணமுத்துப் பிள்ளை தனது வாக்குமூலத்தில் கையெழுத்துப் போட்ட பின் ஒரு புறம் உட்கார்ந்துகொள்கிறார். பின்னர் டாக்டர் குருசாமி அழைக்கப்பட்டு முறையே சத்தியம் செய்கிறார்].

சர். வக்: தங்கள் பெயரென்ன?

குரு: டாக்டர் குருசாமி.

சர். வக்: சிதம்பரம் சர்க்கார் வைத்ய சாலையில் தாங்கள் தலைமை டாக்டரா?

சர். வக்: சென்ற மாதம் 6-ந்தேதி மாலை 6-மணி சுமாருக்கு பார்த்தசாரதி என்ற ஒருவரின் வலது குதிங்காலில் ஏற்பட்டிருந்த காயத்தைத்தாங்கள் பரிசோதனை செய்தீர்களா?

குரு: ஆம்.

சர். வக்: அக்காயம் கைத்துப்பாக்கியால் சுடப்பட்டதால் ஏற்பட்டதுதானே?

குரு: ஆம்.

சர். வக்: தாங்கள் அளித்த அத்தாட்சி பத்திரம் இதுதானே?

குரு: [பார்த்துவிட்டு] ஆம்.

சர். வக்: அதே தினத்தில் இரவு எட்டு மணி சுமாருக்கு ஒரு பிரேதம் பரிசோதனைக்காகக்கொண்டுவரப்பட்டதா?

குரு: ஆம்.

சர். வக்: அது என்ன நிலைமையிலிருந்தது?

குரு: தலை வேறாகத்துண்டிக்கப்பட்டிருந்தது. மார்பில் இரண்டு குண்டடிகள் பட்டிருந்தன.

சர். வக்: அப்பிரேதத்தின் வயது எவ்வளவிருக்கலாம்.

குரு: சுமார் நாற்பதிருக்கலாம்.

சர். வக்: தாங்கள் அளித்த பிரேத பரிசோதனைப்பத்திரம் இது தானே?

குரு: ஆம்.

[சர்க்கார் வக்கீல் அமருகிறார்].

எதி: தாங்கள் பிரேதத்தைப்பரிசோதிக்கும்போது இரவு எட்டு மணி என்றல்லவா சொன்னீர்கள்?

குரு: ஆம்.

எதி: பிரேதத்தினின்று உயிர் பிரிந்து எவ்வளவு நாழிகை அல்லது நாட்களுக்கப்பால் அது தங்களிடம்கொண்டுவரப்பட்டதாகத் தாங்கள் கூற முடியுமா?

குரு: கொலையுண்டு குறைந்தது இருபது மணி நேரம் சென்றிருக்கலாம்.

எதி: எப்படி அவ்விதம் சொல்லுகிறீர்கள்?

குரு: உடம்பெல்லாம் விரைத்துப்போய் நாற்றமெடுக்கும் தருவாயிலிருந்தது.

எதி: துப்பாக்கியால் சுட்ட பின்னர் கழுத்து சேதிக்கப்பட்டிருக்குமா?

குரு: ஆம், முதலில் கழுத்தை வெட்டியிருந்தால் இரண்டாவது துப்பாக்கியால் சுடவேண்டிய அவஸ்யமில்லை.

எதி: ரொம்பவும் சரி. ஆனால் தாங்கள் சொல்வதை நிரூபிக்க வேறு ஏதேனும் அத்தாட்சிகள் உண்டோ?

குரு: ஆம், முதலில் கழுத்து துண்டிக்கப்பட்டிருந்தால் உடலிலுள்ள இரத்தமெல்லாம் வெளியே வடிந்து போயிருக்கும். ஆனால் ஈரலில் இரத்தம் அளவுக்கதிகமாகத்தோய்ந்திருப்பதை கண்டேன். எனவே அவன் இறந்து வெகு நேரம் சென்ற பின்னரே கழுத்து சேதிக்கப்பட்டிருக்கவேண்டும்.

எதி: துப்பாக்கி குண்டுகள் உடலில் ஊடுருவிச்சென்றிருந்தனவா?

குரு: இல்லை, அவை உடலில் சரிந்திருந்தன.

எதி: அதைக்கொண்டு என்ன அனுமானிக்கமுடியும்?

குரு: அம்மனிதன் அயர்ந்து படுத்துறங்கும்போது ஒருவன் எட்ட நின்று சுட்டிருக்கவேண்டும்.

எதி: அவனது உடலில் ஜீரணமாகாத உணவுப்பொருட்கள் ஏதேனுமிருந்ததா?

குரு: ஆம். அவன் வயிறு நிறையச்சோறும் ஆட்டிறைச்சியும் சாப்பிட்டபடியே இருந்தன.

எதி: எனவே அவன் சாப்பிட்ட சில நிமிஷங்களுக்குள் கொல்லப்பட்டிருக்கவேண்டுமல்லவா?

குரு: ஆம், அரை மணி நேரத்திற்குள் அவன் இறந்திருக்க வேண்டும்.

எதி: அவன் போதை வஸ்துக்கள் ஏதேனும் உட்கொண்டிருந்த தாக அத்தாட்சிகள் உண்டா?

குரு: ஆம், அளவுக்குமீறிச்சாராயம் குடித்திருந்தான்.

எதி: பார்த்தசாரதியின் குதிங்காலில் குண்டடிபட்டிருந்ததல்லவா? அக்காயத்தின் நிலையிலிருந்து குண்டு எந்தத்திசையிலிருந்து பாய்ந்திருக்கவேண்டுமென்று நிதானிக்கிறீர்கள்?

குரு: குண்டு மேலிருந்து கீழ் நோக்கிச்சென்றிருந்தது. பார்த்தசாரதி தன்னைத்தானே நின்ற நிலையில் சுட்டிருக்கவேண்டுமென்றே சந்தேகிக்கவேண்டியிருக்கிறது.

[பாரிஸ்டர் எதிராஜ் உட்காருகிறார்].

சர். வக்: கொலை செய்யப்பட்டு 20 மணி நேரத்திற்குப்பின்பே சவம் தங்களிடம் பரிசோதனைக்குக்கொண்டுவரப்பட்டதாகத் தாங்கள் சொன்னது ஒரு உத்தேசம்தானே?

குரு: ஆம், உத்தேசந்தான். அவ்விதம் உத்தேசிக்கப்பல பிரமாணங்களிருந்தன.

சர். வக்: அவன் சாப்பிட்ட அரைமணி நேரத்துக்கெல்லாம் கொல்லப்பட்டிருப்பான் என்றீர்களே, ஒரு சமயம் அவன் நெடு நேரத்துக்குமுன்பே சாப்பிட்டிருந்து, அவை ஜீரணமாகாமல் இருந்தாலும் இருந்திருக்கலாமல்லவா?

குரு: ஜீரண சக்தி குறைவாக இருந்தால் அப்படியுமிருக்கலாம்.

[சர்க்கார் வக்கீல் உட்காருகிறார். டாக்டர் குருசாமி தமது வாக்குமூலத்தில் கையெழுத்திடுகிறார், நாச்சாள் என்றவள் அடுத்த சாட்சியாக முறைப்படி விசாரிக்கப் படுகிறாள்].

சர். வக்: உன் பெயரென்ன?

நாச்: நாச்சாளுங்கோ.

சர். வக்: கொலையுண்ட ரக்கப்பூணன் உன் புருஷனா?

நாச்: ஆமாங்கோ, ம்ம்.

சர். வக்: இதோ என்னைப்பார். கைதிக்கூண்டில் நிற்கும் இரண்டு பேரையும் தெரியுமா?

[இந்தச்சந்தர்ப்பத்தில் ஜட்ஜு, சர்க்கார் வக்கீல் பாரிஸ்டர் எதிராஜ் எல்லோரும் ஏககாலத்தில் கைதிக்கூண்டைப்பார்க்கிறார்கள். ராமமூர்த்தி உட்கார்ந்தபடியே அயர்ந்து நித்திரை செய்கிறார்].

ஜட்ஜ்: Look here! The prisoner is abusing the privilage I offered him.

எதி: கனம் ஜட்ஜ் அவர்களே! நானும் அதைத்தெரிவிக்கவே எழுந்து நின்றேன். எனது கட்சிக்காரருக்கு ஒருவித மயக்கம் ஏற்பட்டு அவர் இப்போதுதான் தன் கண்களை மூடினார். தயவு செய்து அவருக்கு ஒரு சோடா கொடுக்கும்படி உத்திரவு செய்யவேண்டுமாய்க்கோருகிறேன்.

ஜட்ஜ்: Is that so? Peon! Get a soda from my chamber, quick.

[சேவகன் ஓடிச்சென்று ஒருசோடா கொணர்ந்து திறந்து ராமமூர்த்தியிடம் கொடுக்கிறான். அவர் அதைப் பருகிய பின்னர் கண்களை நன்றாயத்துடைத்துக் கொண்டு உட்காருகிறார்],

சர். வக்: சரி, நான் கேட்டதற்குப் பதில் சொல்லு.

நாச்: தெரியுஞ்சாமி. உட்கார்ந்துகிட்டு இருப்பவரு ராமமூர்த்தி எஜமானுங்கோ, நிக்கிறவர் வெள்ளையனுங்கோ. அவங்கோ வீட்டிலே வேலைக்கிருக்கிறான்.

சர். வக்: வெள்ளையன் உன் வீட்டுக்கு வந்திருந்தானா?

நாச்: ஆமாங்கோ. ஒரு மாசமிருக்கும் சனிக்கிழமை உச்சி நேரம் என் புருஷன் சாப்பிட்டுக்கிட்டிருந்தான் ராமமூர்த்தி எசமான் அழைச்சிட்டு வரச்சொன்னாங்கனு சொல்லி அழைச்சிட்டுப்போனான். போன புருஷன் திரும்பலீங்கோ [முகத்தில் துணியை மூடிக்கொண்டு அழுகிறாள்].

[சர்க்கார் வக்கீல் உட்காருகிறார்].

எதி: உன் புருஷன் வீட்டை விட்டுப் புறப்படுமுன் பழைய சாதம் சாப்பிட்டானா? அல்லது இரண்டாம் வேளையாகச் சுடுசாதமா?

நாச்: சாமி! அன்றைக்கு வெடியாலிருந்து எங்கேயோ சுத்தி அலைஞ்சிட்டு அப்போதான் வந்தானுங்கோ. கம்மஞ்சோறு கரைச்சுக்குடிச்சிட்டுப்போனானுங்கோ.

எதி: அன்றைக்கவன் சாராயம் குடித்திருந்தானா?

நாச்: சோத்துக்கே வழியக்காணோம். சாராயத்துக்கு எங்கே போறானுங்கோ?

எதி: சிதம்பரத்திலிருந்து உன் வீடு எவ்வளவு தூரம்?

நாச்: நாலஞ்சு மைல் போகனுஞ்சாமி. பகவதிபாளையமுங்கோ.

எதி: செங்கோட்டை ஜமீன்தாருடைய தேக்கடித் தோட்டம் உன் ஊருக்குப்பக்கத்தில்தானிருக்கிறதா?

நாச்: ஆமாங்கோ. அதைத்தாண்டித்தானுங்கோ எங்கோ ஊருக்குப்போகணும்.

[பாரிஸ்டர் எதிராஜ் உட்காருகிறார். நாச்சாள் தன் வாக்கு மூலத்தில் கைரேகை போட்டுவிட்டு வெளியே போகிறாள்].

சர். வக்: [எழுந்து] பிராசிக்யூஷன் சாட்சிகள் இனி இல்லை. [உட்காருகிறார்]

ஜட்ஜ்: [குற்றவாளிகளைப்பார்த்து] நீங்கள் குற்றவாளிகளா? அல்லவா? என்ன சொல்லுகிறீர்கள்?

ராம: நான் குற்றவாளி அல்ல.

வேள்: நானும் குற்றவாளி அல்ல.

ஜட்ஜ்: [பாரிஸ்டர் எதிராஜைப்பார்த்து] Are you going to examine any witnesses on your side?

எதி: அதற்கு அவஸ்யமில்லை என்றே எண்ணுகிறேன்.

ஜட்ஜ்: Well, the prosecution may argue their case.

சர்: வக்: கனம் கோர்ட்டாரவர்களே! அறிவிற்சிறந்த ஜூரர்களே! அதிக நேரம் பேசித்தங்கட்கு சிரமம் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் எனக்குக்கிடையாது. நான் ஆரம்பத்தில் செப்பிய வாறே வெள்ளையன் ரக்கப்பூணனை சென்ற மாதம் 6-ந்தேதி முற்பகல் அவனுடைய வீட்டுக்குச்சென்று ராமமூர்த்தி அழைப்பதாகக்கூறி அழைத்து வந்தானென நாச்சாளுடைய சாட்சியத்திலிருந்து அறிந்திருப்பீர்கள். போனவன் திரும்பி வரவில்லை என்பதாக அவள் சொன்னாள். அவன் அழைத்துச்செல்லப்பட்ட மாலையே ஜல்லிக் குழியருகில் வெள்ளையனும் ராமமூர்த்தியும் சென்றதை நேரிற் கண்டதாக பார்த்தசாரதி சாட்சியம் கூறியிருக்கிறான். பகவதிபாளையத்திலிருந்து வரும் வழியில் ரக்கப்பூணனுக்குச் சாராயமும் ஆட்டிறைச்சியும் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். அவன் நன்றாய்க்குடித்த வெறியினால் தான் கொலைக்களம் செல்வதையும் அறியாமல் இவர்கள் பின்னே வந்திருக்கிறான். போதையுள்ள ஒருவனைக்கட்டிப்பிடித்துச்செல்வதை வழியில் யாரும்கண்டு அதிசயித்திருக்கமாட்டார்கள். ஆட்சேபித்துமிருக்கமாட்டார்கள். குண்டடி மார்பில் பட்டிருந்ததில் யாதொரு அதிசயமுமில்லை. துப்பாக்கி வெடிச் சப்தம் கேட்டதும் ரக்கப்பூணன் திரும்பிப்பார்த்திருக்கலாம். அப்போது குண்டு அவன் மார்பில் தாக்காது முதுகிற்பட்டிருக்க நியாயமில்லை. பார்த்தசாரதி அய்யங்கார் தனது காலைத்தானே சுட்டுக்கொண்டு இவ்விரு எதிரிகள் மீதும் அபாண்டமான பழியைச்சுமத்த யாதொரு காரணமுமில்லை. இவர்களிடம் அவருக்குப்பகைமையுண்டென நிரூபிக்கப்படவுமில்லை. கொலை செய்யப்பட்ட நான்கு மணிக்குப்பின்னர் பிரேதம் பரிசோதனைகருக்கொண்டுபோகப்பட்டது. டாக்டர் பத்துமணி நேரத்துக்கப்பால் கொண்டுவரப்பட்டதென்று சொன்னது அவருடைய உத்தேசமே அன்றி வேறல்ல. பகவதிபாளையத்திலிருந்து பகல் பன்னிரண்டு மணி சுமாருக்குப் புறப்பட்டு, இடையில் எங்கோ தங்கி நன்றாகக்குடித்தும் சாப்பிட்டும்விட்டு, மாலை நான்கு மணிக்கு ஜல்லிகுழிக்கு வந்திருக்கிறார்கள். டாக்டர் சாட்சியத்திலிருந்து கொலையுண்

டவன் ஆட்டிறைச்சி சாப்பிட்டிருந்ததாகவும் தெரியவரு கிறது. சாராயத்தில் ஒரு துண்டு மாமிசத்தைப்போட்டால் அம்மாமிசம் இறுகிக்கெட்டியாய்விடும் என்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள். எனவே அவன் சாப்பிட்டவை ஜீரண மாகாதிருந்ததில் யாதொரு அதிசயமுமில்லை. ரக்கப்பூணனை ராமமூர்த்தி கொலை செய்வதற்குப்போதிய காரணங்களு மிருக்கின்றன. அவனுடைய எதார்த்தமான பெயர் மறைவு பட்டு வெகுகாலமாகிறது. அவனை எல்லோரும் இறக்கைப் பூனை என்பதாக அழைத்துவந்தார்கள். பூனை ஒரு வீட்டி னுள் எப்படி சந்தடி செய்யாமல் நுழைந்து எலிகளைப்பிடிக் குமோ, அதே மாதிரி அவன் வெகு பக்குவமாய் பட்டி தொட்டிகளிற் புகுந்து ஆடுமாடுகளைத்திருடிப் பிழைப்பது வழக்கம். யாராவது அவனைத் தேடிப்பிடிக்கச் சென்றால் இறக்கை முளைத்தவன்போல் கள்ளி, முள், காடு, மலைகளைத் தாண்டிப்பறந்து ஒளிந்துவிடுவான். இதுபற்றியே அவனை இறக்கைப்பூனை என்பதாக அழைத்துவந்தார்கள். அது நாளடைவில் ரக்கப்பூணன் என்பதாக மருவி வழங்கலாயிற்று. போலீஸில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு கேடி. கடைசிமுறை யாக ராமமூர்த்தியின் பசுவைத்திருடியதற்காக சிறைபட்ட தாக சப் இன்ஸ்பெக்டர் சாட்சியம் கொடுத்திருக்கிறார். ரக்கப்பூணனால் குடி ஜனங்கட்கும், ராமமூர்த்திக்கும் அதிக உபத்ரவம் இருந்ததென்பதில் சந்தேகமில்லை. அக்கள்வனை இவ்விருவரும் கொலை செய்ததால் குடி ஜனங்கள் பீதியொ ழிந்து நிம்மதியோடு வாழ்வார்கள் என்பது உண்மையே யாயினும், இவர்கள் சட்டப்படி கொலைக்குற்றம் புரிந்தவர் களாகிறபடியால், தாங்கள் நியாயமான தீர்ப்பு வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையோடு என் வார்த்தையை இத்துடன் முடித் துக்கொள்கிறேன். [ஆசனத்தில் அமருகிறார்.]

எதி: கனம் பொருந்திய ஜட்ஜ் அவர்களே! கண்ணியமிகுந்த ஜூரர்களே! ரக்கப்பூணன் கொல்லப்பட்டான் என்பதிலும், பார்த்தசாரதியின் காலில் குண்டடிபட்டிருந்ததென்பதிலும் எத்தகைய சந்தேகமும் இல்லை. ஆனால் யார் கொன்றது, எப்போது கொலை நடந்தது, யார் சுட்டார்கள்என்பதில்தான்

பெருத்த சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. சுட்டதையும் நேரிற் பார்த்ததாகச்சொல்லும் சாட்சி பார்த்தசாரதி ஒருவர்தான். வெள்ளையன், தன் புருஷனை பகவதிபாளையத்திலிருந்து பகல் பன்னிரெண்டு மணிக்கு அழைத்துவந்ததாக நாச்சாள் சாட்சியம் கூறினாள். கொலை செய்யப்பட்டதாகப்பிரஸ்தாபிக்கப் பட்ட ஜல்லிக்குழி அங்கிருந்து நான்கு மைல் தூரத்தில் இருக்கிறது. வழியில் அடர்ந்த காடுகளும், புதர்களும் இருக்கின்றன. ராமமூர்த்தியும், வெள்ளையனும் வழியிலுள்ள மறைவான இடமொன்றில் கொலை செய்யாது, வழி நெடுக எல்லோரையும் ஏமாற்றி சிதம்பரத்துக்கருகில் கூட்டிப்போய் கொலை செய்யத்துணிந்தார்கள் என்பது நம்பத்தகுந்ததாய் இல்லை. ரக்கப்பூணன் திமிறிக்கொண்டு ஓடினான் என்றும், ராமமூர்த்தி பின்புறமிருந்து சுட்டானென்றும் கூறப்பட்டது. ஒரு கொலைஞனது கையினின்றும் தன் உயிருக்குத்தப்பி ஓடும் ஒருவன் "ஐயோ, அப்பா" என்று கத்தியிருப்பான். சம்பவம் நடந்ததாகக்கூறிய இடத்துக்கும் வண்டிப்பாதைக்கும் கூப்பிடு தூரத்துக்கு மேல் இல்லை. ரக்கப்பூணன் அங்கு போட்ட சப்தமும், ராமமூர்த்தி மும்முறை சுட்டதால் ஏற்பட்ட சப்தமும் பலர் காதில் பட்டிருக்கும். உடனே அந்த இடத்தில் பெருங்கும்பலும் கூடியிருக்கும். மற்றும் காலில் குண்டடிபட்டு போலீஸ் ஸ்டேசனுக்கு விரைந்தோடும் பார்த்தசாரதியைப் பலர் வழிமறித்து யாது விபரம் எனக் கேட்டிருப்பார்கள். அவனும் கொலை நடந்த விபரத்தைச் சொல்லியிருப்பான். ரக்கப்பூணனை ராமமூர்த்தியும் வெள்ளையனும் கட்டி இழுத்து வந்ததாக சாட்சி கூறப்பட்டது. மாலை நான்கு மணிக்கு இக்காட்சியை யாரும் பார்க்காது இருந்திருக்கமுடியாது. உண்மையில் இத்தகைய சம்பவம் நடந்திருந்தால், பல சாட்சிகள் மூலமாக நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கவேண்டும். ஒருவன் ஓடும்போது அவனைப்பின்புறமிருந்து மற்றொருவன் சுட்டால், மார்பில் காயம் படவேண்டிய நியாயம் இல்லை. எனவே பார்த்தசாரதி தன் கற்பனையில் தோற்றுப்போய்விட்டார். துப்பாக்கியின் சப்தம் கேட்டதும் ரக்கப்பூணன் தன்மார்பைத்திருப்பிக்காட்டியிருப்பான் என்று எனது நண்பர் சமாதானம் கூறினார். அது எவ்வளவு

அசட்டுத்தனமான வாதம் என்பதை நான் கூறவும் வேண்டுமோ? முதல் சாட்சியின் வாக்குமூலப்படி 6-ந்தேதி மாலை 4-மணிக்குக் கொலை நடந்ததாகக்கூறப்படுகிறது. டாக்டர் குருசாமியின் சாட்சியத்திலிருந்து கொலை 5-ந்தேதி இரவே நடைபெற்றிருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. இதன்படி பார்த்தால் சனிக்கிழமை உச்சிப்பொழுதில் வெள்ளையன் ரக்கப்பூணனை அழைத்துச்சென்றான் என்று நாச்சாள் கூறிய சாட்சியமும் பொய்யெனவே கொள்ளவேண்டியிருக்கிறது. ரக்கப்பூணனுக்கும் ராமமூர்த்திக்கும் பகைமை இருந்ததாக நிரூபிக்கப்படவுமில்லை. ராமமூர்த்தியினிடம் மந்தை மந்தையாக மாடுகள் இருக்கின்றன. அதில் ஒரு மாடு களவு போனதற்காக அவர் ஒருவன் உயிரைப்போக்கத்துணிந்திருக்கவுமாட்டார். அதுவும் பிராசிக்யூஸன் கேசை ஜோடித்துள்ளமாதிரி அவ்வளவு முட்டாள்தனமாக எத்தனித்திருக்கவுமாட்டார். தன் வறுமையின் கொடுமையின் காரணமாக ஒரு பசுவை ரக்கப்பூணன் திருடியதால் அவன் இரண்டு வருஷகாலம் தன் மனைவி மக்களைப்பிரிந்து சிறையில் கடுந்துயரம் பட்டிருந்தான். மேற்கொண்டு அதே குற்றத்துக்காக ராமமூர்த்தி அவனைப்பட்டப்பகலில் பலியிட எண்ணியிருப்பார் என்று யார்தான் கருதுவார்கள்? ராமமூர்த்தியின் பகைவர்கள் யாரோ பரம ஏழையொருவனைக் கொலை செய்து அப்பழியை அவர்மீது சுமத்தி, இந்த அவதிக்குள்ளாக்கிவிட்டுத்திரை மறைவில் நின்று இன்று சிரித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனைக்குள்ளானால் நான் பரம சந்தோஷமடைவேன். இவ்விரு நிரபராதிகளைத்தாங்கள் தவக்கமன்னியில் விடுதலை செய்வீர்கள் என்று நம்பிக்கையோடு எனதாசனத்தில் அமருகிறேன். [உட்காருகிறார்.]

ஜட்ஜ்: ஜூரர்களே! இப்பொழுது உங்கள் முன்னிலையில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களையும், இரண்டு தரப்பு வாதங்களையும் நன்கு கேட்டிருப்பீர்கள். கொலை செய்யப்பட்டதை நேரிற்கண்டதாக ஒரே ஒரு சாட்சியம் கூறப்பட்டது. அந்த சாட்சியத்தியற்கும் டாக்டர் குருசாமி கூறிய சாட்சியத்திற்கும் கடுமையான வேற்றுமை இருக்கிறது. முதல் சாட்சியை நம்புவதானால் எதிரிகள் இருவரும் இ. பி. கோ.

302-வது செக்ஷன்படி குற்றவாளி ஆகிறார்கள். டாக்டர் சாட்சியத்தை நம்புவதானால் 6-ந்தேதி மாலை 4-மணிக்கு கொலை நடைபெறவில்லை என்றேற்படுகிறது. மற்றும் முதல் சாட்சி கூறியது உண்மையாயிருப்பின், குண்டுகள் உடலின் பின் பாகத்தில் பாய்ந்திருக்கவேண்டும். அனைத்தையும் தீர யோசித்து உங்கள் மேலான அபிப்பிராயத்தைக்கூறும்படியாக வேண்டுகிறேன்.

[ஜூரர்கள் எழுந்து உள்ளே செல்கிறார்கள். சில நிமிஷம் கழித்துத திரும்புகிறார்கள்].

ஜூ. தலை: [எழுந்து நின்று] இவ்விரு எதிரிகளும் யாதொரு குற்றமும் புரியவில்லையென்று நாங்கள் ஏகமனதாக அபிப்பிராயப்படுகிறோம். [உட்காருகிறார்]

ஜட்ஜ்: ராமமூர்த்தி! வெள்ளையன்! ஜூரர்கள் ஏகமனதாக நீங்களிருவரும் யாதொரு குற்றமும் புரியவில்லையென்று கூறிவிட்டார்கள். அவர்கள் கூறியதை நான் ஒப்புக்கொண்டு உங்கள் இருவரையும் விடுதலை செய்கிறேன். போலீசாருடைய இன்வஸ்டிகேஷன் திருப்திகரமாய் இல்லை. உண்மையான குற்றவாளிகளைக்கண்டுபிடிக்க அவர்கள் சிரத்தை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

14-வது காட்சி.

இடம்: மீனும்பிகை வீடு.

சமயம்: இரவு.

[மீனும்பிகை, கிருஷ்ணகாந்தன், பார்த்தசாரதி மூவரும பேசிககொண்டிருக்கின்றனர்].

கிரு: ஏண்டா! முட்டாப்பயலே! அந்த வக்கீல் உனக்கு என்ன வேலையென்று கேட்டானே, நீ ஏதாவதுதொரு வேலை சொல்லித்தொலைத்திருக்கிறதுதானே?

பார்த்: இல்லாத வேலையை எப்படி சிருஷ்டிப்பது?

[கதவு தட்டும் சப்தம் கேட்கிறது. கிருஷ்ணகாந்தனும் பார்த்தசாரதியும் மிரள மிரள விழிக்கிறார்கள். மீனும்பிகை கதவருகிற்சென்று "யாரது?" என்று கேட்கிறாள். "யார் வருவார்கள் என்று நினைத்துக்கொண்டாய்? திற கதவை" என்று அதட்டும் குரலோசை கேட்கிறது. உடனே மீனும்பிகை இருவருக்கும் கையால் ஜாடை செய்கிறாள். கிருஷ்ணகாந்தனும் பார்த்தசாரதியும் பரபரப்பாய்க் கட்டில் அடியில் நுழைந்து பதுங்கிக் கொள்கிறார்கள். மீனும்பிகை கதவைத்திறந்ததும் தேவகோட்டை க. மு. கி முருகப்ப செட்டியார் உள்ளே நுழைகிறார்].

செட்: என்! [மீனும்பிகை முழுந்தாளிட்டுப்பணிகிறாள்] யார் குரலோசை கேட்டதே? [கட்டிலின்மீது உட்காருகிறார்]

மீனு: [எழுந்து நின்று] யாருமில்லே. அந்த செவிடியை வைத்துக்கொண்டு யாரால் மாரடிக்க முடியும்? அடி! லட்சுமி! லட்சுமி!!

[லட்சுமி வருகிறாள்].

லட்: யாரது? செட்டியாரையாவா? வாஙகோ! வாங்கோ! ஏது ரொம்ப நாளா போயிருந்திட்டேங்கோ? பாவம் மீனு செட்டியார் காகிதம்கூடப்போடலயேன்னு அங்கலாச்சிட்டிருந்தா.

மீனு: சரி, சரி, போ. தட்டில் வெற்றிலே பாக்கு எடுத்துவா?

லட்: என்ன சாப்பாடா? நீ நிமிஷத்துக்கு நூறு தபா கூப்பிட்டா சாப்பாடு எப்படி ஆகும்?

மீனு: சாப்பாடு அல்லடி. வெற்றிலே [கையால் ஜாடை செய்கிறாள்].

லட்: வெற்றிலேயா? என் நீயே உன் கையால் கொண்டுவந்து கொடேன். சரிதான், சரிதான, தெரிந்தது. கோபித்துக் கொள்ளாதே [போகிறாள்].

செட்: என் எட்ட நிற்கிறாய்? நான் இரண்டு மாதமாய் வரவில்லே யென்று கோபமா? வா, இங்கே.

மீனு: ஐயோ, தங்கள் மீது நான் கோபிக்கமுடியுமா? எப்போதாவது கோபித்ததுதான் உண்டா? தங்களைக்காணும் என்று வருத்தமே யொழியக் கோபம் ஏது?

செட்: அப்படியானால், வா, வந்து உட்காருகிறதுதானே?

மீனு: இதுகூடவா தங்களால் தெரிந்துகொள்ளமுடியலே?

செட்: வீட்டிற்கு தூரமா?

மீனு: ஆம்.

செட்: ஏதாவது தடை ஏற்படுமென்று அப்போதே நினைத்தேன். வழியில் பூனை குறுக்கே சென்றது. [எழுந்து] சரி நான் போய் வருகிறேன்.

மீனு: ஐயையோ. நான் வீட்டிற்குத்தூரமா இருந்தா உங்களுக்கென்ன? இவ்வளவு நாள் கழித்து வந்ததும் போகப்புறப்பட்டுவிட்டேளே. என்மீது பிரியம் இவ்வளவுதானுக்கும் ..

செட்: சீ! அசடே! அழாதே. கொளும்பிலிருந்து நேராய் இப்பொழுதுதான் போட் மெயிலில் வருகிறேன். இன்னும் கடைக்குக்கூடப்போகவில்லை. நாளைக்கெல்லாம் வேலையிருக்கும். மறு நாள் வருகிறேன்.

[லட்சுமி வெற்றிலைத்தட்டோடு வருகிருள். செட்டியார் நிற்பதைக்கண்டதும்]

லட்: அப்போதே எனக்குத்தெரியுமே. நான் வெற்றிலைத்தட்டு கொண்டுவந்தால், செட்டியார் அதைத்தொடவேமாட்டார். சரி, புறப்பட்டுவிட்டாப்போலிருக்கிறது. போகறவாளே தடை செய்யப்படாது. அப சகுனம் ஆகிவிடும்.

செட்: புன்னகையுடன் லட்சுமியின் தோளைத்தட்டிக்கொடுத்து] அப்படியொன்றும் எண்ணுதே. ஜோலி அதிகம் நாளை வருகிறேன்.

[செட்டியார் சென்றபின் மீனு சிறிது நேரம் கதவருகில் நின்றிருந்து, அவர் தலை மறைந்த பின் கதவடைத்து விட்டுத்திரும்புகிருள். கிருஷ்ணகாந்தனும் பார்த்தசாரதியும், மெள்ள வெளியில் வருகிருர்கள். லட்சுமி சிரிக்கிருள்].

மீனு: [கோபத்தோடு] என்னடி சிரிக்கிறே? என் பிழைப்பு உனக்கு சிரிப்பா இருக்கோ?

லட்: ஏன்? சிரிக்காமல் அழுவா சொல்றே? அந்த செட்டியை இனிமேல் வரவேண்டாமென்று சொல்லி அனுப்புறது தானே?

பார்த்: அவ சிரிச்சா சிரிக்கட்டும். ஒன்றும் குடி முழுகிப் போகலே. ஆனால் இனிமேல் இந்தமாதிரி சங்கடத்தில் நம்மை மாட்டிவைக்காதே. [லட்சுமி போகிருள்].

மீனு: நான் அவன் வருவானென்று ஜோஸ்யமா பார்த்தேன்? அவன் வராமல் தடுக்க எஜமான் தான் ஒரு யோசனை சொல்லவேண்டும்.

பார்த்: என்ன? எஜமான் சொல்லுங்களேன்.

கிரு: எல்லாம் எனக்கு அவஸ்தையாகவே இருக்கிறது.

பார்த்: அவஸ்தை ஒன்றும் வேண்டாம். அந்த செட்டிப்பயல் நாளை இரவுதான் இங்கே படுக்கைக்கு வருவான். நாம் மூன்று பேரும் நாளைக்காலமே புறப்பட்டு புதுச்சேரி போய் விடுவோம். அவன் வந்து வீட்டைப்பார்த்துவிட்டு, சரி கை மாறிப்போச்சு என்று முடிவு செய்துகொள்வான். அவ்வளவுதான்.

மீனு: ஆம், பிரபு! இது நல்ல யோசனை. ஆறு மாதத்துக்குப் பாண்டிச்சேரியிலேயே இருந்துவிடுவோம்.

கிரு: இவன் மண்டையில் எல்லா சமயத்திலும் நல்ல யோசனை வருவதில்லையே. அந்தச்செட்டி வந்தவுடன் உன்னை உள்ளே அனுப்பிவிட்டு, கதவைத்திறந்து, மீனும்பிகை இங்கு குடியில்லை. வேறு வீட்டுக்குப்போய்விட்டாள் என்று சொல்லியிருந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்?

பார்த்: ஆஹா! இந்தப் பின்யோசனை தங்கட்குச் சடார் என்று முன்னமே வந்திருக்கக்கூடாதா? அடடா?

கிரு: உன்னால் இன்று கேசும் கெட்டது. ஏதாவதொரு வேலை சொல்லித்தொலைச்சிருந்தால் உன் சாட்சியத்திற்கு ஒரு கௌரவம் ஏற்பட்டிருக்கும்.

பார்த்: நீங்கதான்-சொல்லுங்களேன்-எனக்கேதாவதொரு ஜோலி. இனிமேல் ஜாக்கிரதையாய் இருந்துகொள்கிறேன்.

கிரு: ஏன், ஒரு சங்கீத வித்வான் என்று சொல்லித்தொலையேன்.

பார்த்: சங்கீதம் படி என்ன விலை என்று கேட்டால்?

மீனு: ஏன், நீங்கதான் அட்டாணு ராகம் பாடுவேளே!

பார்த்: எட்டணு ராகம்! ஆமாம், இரண்டு கிராம் எட்டணுதான்.

கிரு: அந்தப்பாழாப்போன டாக்டர் குருசாமியைச்சரிப்படுத்தாது போனேன். அவர் எனக்கு எவ்வளவோ வேண்டியவர். ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் போதும்.

மீனு: நடந்ததைப் பேசுவானேன்? இனிமேல் நடக்கிறதைப் பேசுங்கோ.

பார்த்: அப்படிச்சொல்லு. அப்படிச்சொல்லு. நீதான் பிரபுவுக்கு ஏற்ற பத்னி.

கிரு: மீனு! வா என்னருகில். நான் உன்னையே சகலத்துக்கும் நம்பியிருக்கிறேன். நம்பலாமா?

மீனு: என்ன தீடீரென்று இப்படிச் சொல்கிறீர்கள்? நான் தங்கட்கு என்றும் அடிமை என்பதாகவே எண்ணிக்கொள்ளுங்கள்.

கிரு: அந்த திலகவதியை எப்படியாவது கிளப்பவேண்டும். அது உன்னால்தான் முடியும்.

மீனு: வழி சொல்லுங்கோ. கார்யத்தை முடித்துவிடுகிறேன்.

கிரு: நேராய்த் திலகவதியிடம் போ. செல்வராயர் புதல்வி சரஸ்வதி அனுப்பியதாகச்சொல். ராமமூர்த்தி விடுதலை அடைந்

ததுபற்றிச் சரஸ்வதி சந்தோஷப்படுவதாயும், நடராஜருக்கு அதன் பொருட்டு அபிஷேக ஆராதனைகள் நடத்துவதாயும், அவளை நேரே கோவிலுக்கு அழைத்து வரச்சொல்லி உன்னை அனுப்பியதாயும் சொல்லு. அவள் உன்னோடு வருவாள். ஒரு டாக்ஸியை அனுப்புகிறேன் அதிலேற்றிக்கொண்டு நேராக இங்கு வந்துவிடு.

மீனு: டாக்ஸியில் என் வீடுவரையில் கூட்டிவருவது சுலபந்தான். காரிலிருந்து வீட்டிற்குள் எப்படி அழைத்துவருவது?

கிரு: இதுகூடவா தெரியாது? வீட்டண்டை டாக்ஸி நின்றதும், "இதோ ஒரு நொடி தாமதியுங்கள், என் தாயாரையும் அழைத்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டு இறங்கு. இரண்டடி நட, பின்னரும் காரருகிற்சென்று "என் நீங்களும் இறங்கினுலென்ன? எங்கள் வீட்டை நீங்கள் பார்க்கலாகாதோ?" என்று விநயமாய்ச் சொல்லு, வந்துவிடுகிருள்.

மீனு: நீயார்? எவர்? என்று கேட்டால்.

கிரு: அதற்கொரு யுக்தி தெரியாதா உனக்கு? சரஸ்வதியோடு பள்ளியில் படித்தவள், நெருங்கிய ஸ்நேகம். என் பெயர் லலிதா என்றேதாவது சொல்லேன்.

மீனு: அவளோடு யாராவது புறப்பட்டு வந்தால்?

கிரு: வந்தாலென்ன? எங்காவது கொண்டுபோய் இறக்கிவிட்டால் போகிறது. என்ன யோசிக்கிருய்?

மீனு: ஒன்றுமில்லை. அவள் வந்தபின் என் கதி என்னுவது?

கிரு: என்னுவதா? என் இப்படி பயப்படுகிருய்?

மீனு: பயமொன்றுமில்லை. இதிலென்ன பயம்? அவள் மீது தங்கட்கு மோகமேற்பட்டுவிட்டால்?

கிரு: மோகமுமில்லை. தாகமுமில்லை. வேகமாய் சென்றழைத்து வா. அவ்வேசியை உனக்கு அடிமையாக்குகிறேன்.

பார்த்: அதுகூட வேண்டாம். அவள் வந்ததும் இரண்டு அடி அடித்து அனுப்பிவிடுவோம். பிரபுக்கு ஆசை அவ்வளவு தானே.

கிரு: என் கண்ணே! போய் வா. [மீனும்பிகையை முத்தமிட்டு தட்டிக்கொடுத்து அனுப்புகிருன். அவள் சென்றபின்] அச்சிறுக்கியை ஒரு முறையேனும் கூடிக்குலாவி அவள் அகங்காரத்தை அடக்கி அவளை விரட்டி விட்டால் போதும். அவள் மகா பத்தினி போலும், உத்தமி போலும் பாசாங்கு செய்து என்னை அவமதித்ததோடு நில்லாமல் சரஸ்வதியை யும் எனக்கு எதிராகக் கிளப்பிவிட்டிருக்கிருள். இன்று எனக்கு நடைபெற்றிருக்கவேண்டிய கல்யாணத்தையும் தடைப்படுத்திஞள். அவளை நான் லேசில் விடப்போவதில்லை.

பார்த்: [பிராந்தி புட்டியும், டம்ளரும் மேஜைமீது கொண்டுவந்து வைத்து] கொஞ்சம் ஸ்டீம் ஏற்றிக்கொள்ளுங்கோ. அப்போ தான் அவ வந்தா சரியாய் இருக்கும் [இருவரும் குடிக்கி ருர்கள்].

கிரு: [குடித்துக்கொண்டே] குடிப்பதில் உள்ள சுகம் வேறெதி லும் இல்லை. என்ன சொல்கிருய்?

பார்த்: அப்படியில்லாமலா உமார்காயம் அவ்வளவுன்னதமான கவி பாடியிருக்கிருர்?

கிரு: எங்கே அவர் கவிதையில் இரண்டடி சொல் பார்ப்போம்.

பார்த்: இந்த சமயத்தில் வேண்டாம்.

கிரு: இப் பிராந்தி நரம்புகளில் புகுந்து எவ்வளவு உற்சாகத்தைக் கொடுக்கிறது பார்த்தனையா?

பார்த்: சந்தேகமென்ன? இந்த பிராந்தி உள்ளே போனதும் மனதிலுள்ள பிராந்தி வெளியிலே கிளம்பும்.

கிரு: ஆனல் கொஞ்சம் நிதானமாகவே குடிப்பதுதான் நல்லது.

பார்த்: அதைத்தானே டெம்பரன்ஸ் கமிட்டியாரும் சொல்ரா.

சிரு: ஒவாராய் போனாலும் அதிலும் ஒரு சுக்ம் இருக்கிறது.

பார்த்: ஆஹா! அப்போது எழு லோகமும் ஒன்ருய்த்தெரியும்.

[வெளியில் கார் சப்தம் கேட்கிறது நிர்சப்தமாய் எழுந்து மறைவாக நிற்கின்றனர். மீனும்பிகையும். திலகவதியும் உள்ளே பிரவேசிக்கின்றனர். பார்த்த சாரதி சரேலெனப்பாய்ந்து கதவைத்தாளிடுகிருன்].

தில: [திடுக்கிட்டு] ஆஹா! வஞ்சகி! பெண்ணுருக்கொண்ட பேயே! என்னை இப்பாதகனிடம் சேர்க்கவா இவ்வஞ்சனை செய்து அழைத்து வந்தாய்? உன்னை விட்டேனு பார். [ஓடிப்போய் மீனும்பிகையின் கழுத்தைப்பிடித்து நெறிக்கிருள். அவள் அலறிக்கீழே வீழ்கிருள். கிருஷ்ணகாந்தன் திலகவதியின் இரு காங்களையும் பற்றிப் பின்புறமாக மடக்கிக் கட்டுகிருன். பார்த்தசாரதி அவள் வாயில் ஒரு கைக்குட்டை வைத்துத்திணிக்கிருன்]

கிரு: [ரிவால்வாரை நீட்டிக்கொண்டு] உன் துணிச்சலை நிறுத்தாயாகில் ஒரே வெடியில் மாய்த்துவிடுவேன் [மீனுவைத்தாங்கி எடுத்து சோபாவில் சாயவைத்து, முகத்தில் தண்ணீர் தெளித்து சாந்தப்படுத்துகிருன்].

மீனு: அப்பா! கண்கள் பிதுங்கிவிட்டன, உயிர் போயிற்றென்றே நினைத்தேன். இக்கொடிய அரக்கியை என் அழைத்துவாச்சொன்னீர்கள்? பாருங்கள் அவள் முகத்தை. பெரும் பிடாரி!

கிரு: கண்ணே! மீனு! கலங்காதே. இனி அவள் ஏதேனும் சீறினுல் தகுந்தபடி சிட்சிக்கிறேன். சாரதி! அந்த அறையைத் திற. அவள் கால்களையும் சேர்த்துக்கட்டி அவ்வறைக்குள் தள்ளு. அன்ன ஆகாரமின்றி அவள் அங்கே கிடந்து சாகட்டும்.

[சுவற்றிலுள்ள ஒரு பொத்தானை பார்த்தசாரதி அழுத்துகிருன். ஒரு பெரிய படம் போன்ற கதவு தானே திறந்துகொள்கிறது. உள்ளே ஒரு அறை காணப்படுகிறது. திலகவதியை அதனுள் தள்ளி கதவை முன்போல் மூடிவிடுகின்றனர்].

கிரு: [மீனும்பிகையை இறுகத்தழுவி] மாதரசே! நீ இன்று என் பொருட்டு எடுத்துக்கொண்ட சிரமத்துக்காக என்ன கை மாறு செய்யப்போகிறேன்? உன்னை நான் என்றும் கை விடேன். சத்தியம், நீயே என்னுருயிர்க்காதலி. இன்று முதல் செங்கோட்டையின் ஜமீன்தாரணி நீயே ஆவாய். என்னை நாடிவரும் மங்கையர் அனைவரையும் உனக்கே அடிமையாக்குவேன்.

மீனு: இன்னும் மங்கையர் மோகம் தங்களை விடவில்லையா?

கிரு: ஒரு வார்த்தைக்காகச் சொன்னேன். உன்னையன்றி வேறு எம்மாதையும் இனி இச்சிக்கமாட்டேன். சத்தியம், நம்பு. பார்த்தசாரதி! நான் உடனே என் பங்களாவிற்குப்போக வேண்டும். ராமமூர்த்தி என்னையே சந்தேகித்துத்தேடுவான். நான் வீட்டில் இருந்தால் சந்தேகம் தோன்றுது. நீ சர்வ ஜாக்கிரதையோடு இங்கேயே இரு.

மீனு: என்னை தனிமையாக விட்டுவிட்டா போகிறீர்கள்?

கிரு: இல்லை, கவலைப்படாதே. அதிகாலையில் இங்கு வருகிறேன். நாளை நாம் புதுச்சேரிக்குப் புறப்பட்டுச் செல்வோம். [மற்றொரு முறை மீனும்பிகைக்கு முத்தம் கொடுத்துவிட்டுச் செல்கிறான்].

பார்த். இன்றைக்கு எனக்கும் ஒரு "சான்ஸ்". என்ன சொல்ரே? [மீனும்பிகையை கட்டி அணைத்து தழுவுகிறான்].

15-வது காட்சி.

இடம்: சரஸ்வதியின் மாளிகை.

சமயம்: அதிகாலை.

[சரஸ்வதி ஏதோ புத்தகம் வாசித்துக்கொண்டிருக்கையில் ராமமூர்த்தி வருகிறார். அவள் எழுந்து ஓடி பின் சென்று]

சர: யாரது? அத்தானா? வாருங்கள், வாருங்கள். அம்மாவும், நானும் தங்களை இன்று வந்து காணலாம் என்றிருந்தோம். தாங்களே வந்ததுபற்றி மிகவும் சந்தோஷம். தங்கட்கு ஏற்பட்ட விபத்தைக்கேட்டு நாங்கள் அனைவரும் வருந்தினோம். ஈசனருளால் அனைத்தும் சூரியனைக்கண்ட பனி போல் விலகியது. அக்காள் திலகவதியையும் கூட்டிக் கொண்டு வந்திருந்தால் ஆகாதா?

ராம: .என்ன? ஹா—ஹா—ஹா! [மூர்ச்சித்துக்கீழே வீழ்கிறான்.]

சர: [திடுக்கிட்டு] அம்மா! அம்மா!! ஓடிவா. ஐயோ! இஃதென்ன? திலகவதிக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டதோ? [சரஸ்வதி யின் தாயார் பிரவேசம்]. அம்மா! அத்தான் ராமமூர்த்தி வந்ததும் மூர்ச்சித்து வீழ்ந்தார். இதோ [மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்த ஜலத்தை எடுத்துக்கொடுத்து] அவர் முகத்தில் தண்ணீர் தெளித்து எழுந்திருக்கச் செய்யுங்கள்.

தாயார்: [ஜலத்தைக்கையில் வாங்கிக்கீழே உட்கார்ந்து ராமமூர்த் தியின் முகத்தில் தெளித்து உபசாரம் செய்துகொண்டே] இவர் எப்போது இங்கு வந்தார்? நான் பின்கட்டில் இருந் தேன். [ராமமூர்த்தி கண் விழித்து மெள்ள எழுந்து உட் காருகிறான்.] அப்பா! என் மூர்ச்சித்து வீழ்ந்தாய்? சிறையில் இருந்ததால் மிகவும் பலஹீனமானாய்போலும். அதைரியப் படாதே.

ராம: என்-கண்மணி-திலகம்-இங்கு-வரவில்லையா?

தாயார்: இல்லையே! அவளுக்கு ஆள் அனுப்பி வரவழைக்கட்டுமா?

ராம: ஹா! திலகம்! திலகம்! நீ எங்கு சென்றனை?

தாயார்: ஏன் அவள் உன் வீட்டில் இல்லையா?

ராம: ஹா! அவள் சென்ற இரவு இங்கு வரவில்லையா?

தில. அவள் தாயும்: [ஏக காலத்தில்] இல்லையே!

ராம: ஹா! ஹா! [பின்னரும் மூர்ச்சித்துக்கீழே சாய்கிறான்].

தாயார்: சரஸ்வதி, இஃதென்ன கொடுமை! உன் தந்தையும் வீட்டில் இல்லாத சமயத்தில் இதென்ன துயரம்? நமக்கு ஏற்கனவே ஏற்பட்டுள்ள துயரம் போதாதா? இவர் எப்போது வந்தார்? என்ன நடந்தது?

சர: அவர் வந்து ஐந்து நிமிஷம் கூட ஆகவில்லை. வந்தார், உட்காருங்கள் என்றேன். திலகவதியை அழைத்துவரக் கூடாதா என்றேன். நின்றபடியே ஹா, ஹா என்று அலறிக் கீழே வீழ்ந்தார். உடனே தங்களைக்கூப்பிட்டேன். [ஒரு விசிறியைக்கொணர்ந்து தருகிறாள்].

தாயார்: [விசிறிய வண்ணம்] அப்பா! ராமு! எழுந்திரு. நடந்ததை விபரமாகச்சொல். ஒன்றுங்கூறாமல் நீ இவ்வாறிருந்தால் நாங்கள் என்ன செய்யக்கூடும்.

ராம: [எழுந்து உட்கார்ந்து] ஹா! திலகம்! நான் மோசம் போனேன். என் மதியீனத்தை என்னென்று சொல்வேன்?

தாயார்: என்ன நடந்தது? ஆத்திரப்படாமல் சொல்லு.

ராம: கடந்த இரவு என் நண்பர் பலருடன் முற்றத்தில் பேசிக் கொண்டிருந்தேன். திலகம் என்னை அழைத்தாள். உள்ளே சென்றேன். சரஸ்வதி தன்னை அழைப்பதாகவும், கோவிலுக்குச்செல்ல மோட்டார் வந்துள்ளதாகவும் தெரிவித்தாள். துணைக்கு யாரையேனும் அழைத்துப்போ எனறேன். சரஸ்வதியின் தோழி வந்திருப்பதாய்ச் சொன்னாள். போய் வா என்று விடைகொடுத்தனுப்பினேன். மோசம் போனேன். மோசம் போனேன். என் செய்வேன்?

திலக: ஹா! இஃதென்ன மோசம்! நான் யாரையும் அனுப்பவில்லையே! சென்றவள் திரும்பிவரவில்லையா?

ராம: இல்லை, இல்லை. கடந்த இரவு நானும் வீட்டில் இல்லை. நண்பர் ஒருவர் வீட்டிற்கு விருந்துக்குச்சென்றேன். வெகு நேரம் பேசிக்கொண்டிருந்ததால் களைத்துப்போய் அங்கேயே உறங்கிவிட்டுக் காலையில்தான் வீடு திரும்பினேன். திலகத்தோடு நானும் இங்கே தங்கிவிட்டதாக என் தாயார் எண்ணிக் கொண்டாளாம். தலையில் இடி விழுந்தது போலாயிற்று.

ஓடோடியும் இங்கு வந்தேன். திலகம் எங்கேயென்று சரஸ்வதி என்னைக்கேட்டாள். என் புத்தி கலங்கிவிட்டது. வேர் அறுந்த மரம்போல் சாய்ந்தேன். இனி நான் என் செய்வேன். என் திலகத்திற்கு என்ன கதி ஏற்பட்டதோ. ஈசா! ஈசா!! என்னை இப்படியும் சோதிக்கலாகுமா?

சர: [கோபத்தோடு] அத்தான்! அறிந்தேன். அறிந்தேன். இவ்வினைத்தும் அக்காதகன் கிருஷ்ணகாந்தன் .... ஹா! சண்டாளன், மூர்க்கன், பதிதன், துரோகியின் செயல். அவனைப்பழி வாங்காது நான் விடப்போவதில்லை. தாங்கள் அஞ்சவேண்டாம். திலகவதிக்கு யாதொரு தீங்கும் ஏற்பட்டிராது. அவள் கற்புக்கணிகலன். வைரம் போன்ற நெட்சுடையவள். மாசற்ற மனதுடையவள். இன்று சூரியன் அஸ்தமனமாகுமுன் அவளை நான் உம்மிடம் சேர்ப்பதுறுதி. இது சத்தியம். தாங்கள் நேரே வீடு செல்லுங்கள். யாரிடமும் ஒன்றும் கூறுதீர்கள். அவன் சூழ்ச்சியை நான் சூழ்ச்சி செய்து வெல்கிறேன்.

ராம: சரஸ்வதி! உன் வார்த்தைகள் எனக்குப் புத்துயிர் அளித்தன. திலகத்தை நீயே தேடிப்பிடித்து ரட்சிக்கவேண்டும். என் குடும்பத்தின் கௌரவம் பாழாகாமற் நீயே அருள் புரியவேண்டும். திலகத்திற்கு ஏதேனும் மானபங்கமோ, ஆபத்தோ ஏற்பட்டிருப்பின் நான் உயிர் வாழ மாட்டேன். நிச்சயம், நிச்சயம். [எழுந்து தள்ளாடிச் செல்கிறுன்].

சர: அத்தான்! அத்தான்! ஒரு வார்த்தை [ராமமூர்த்தி நிற்கிறுன்] தாங்கள் நடந்ததை விபரமாக எழுதிப்போலீசாருக்குத் தகவல் அனுப்புங்கள்.

ராம: [சற்று யோசித்து] சரி. அவ்வாறே செய்கிறேன். நீ என்ன செய்வதாக உத்தேசம்?

சர: அவ்வஞ்சகனை உடனே அழைத்து, அவன்மீது பிரியங் கொண்டவள்போல் நடித்து, உண்மையை அறிந்துவிடுகிறேன்.

ராமு: சரி, அவ்வாறே செய். ஜாக்கிரதை! நீயும் அவனிடம் மோசம் போகவேண்டம். [போகிறான்].

சர: [தன் தாயாரைப்பார்த்து] அம்மா! தாங்கள் மறைவாகப் பின் கட்டில் இருங்கள். நான் அவனை இங்கு வரவழைத்துப்பேசவேண்டும். நமது சமயற்காரனை இங்கனுப்புங்கள். [தாயார் போகிறாள்].

சர: [தனிமையாக] நான் விரைவில் ஒரு கடிதம் எழுதிவிடுகிறேன்.
[கடிதம் எழுதிய பின் அதை ஒருமுறை வாசிக்கிறாள்].

எனதாருயிர் காதலருக்கு!

அடியாள் வணக்கம். அச்சண்டாளியின் வார்த்தையை மெய்யென நம்பித் தங்களைப் பலவாறாக நான் நிந்தித்துப் பேசினேன். என்னைத்தாங்கள் மன்னிக்கும்படியாய் பிரார்த்திக்கிறேன். தங்களை நேரிற் கண்டு பேசும் வரை என் மனம் சாந்தியடையாது. கிருபை கூர்ந்து உடனே வரக் கோருகிறேன்.

தங்கள் பிரியமுள்ள,

சரஸ்வதி.

[கடிதத்தை மடித்து உறையிலிட்டு விலாசம் எழுதி ஒட்டுகிறாள். சமையற்காரன் வருகிறான்]. தாமோதரா! நீ இக்கடிதத்தை உடனே கிருஷ்ணகாந்தரிடம் சேர்ப்பிக்கவேண்டும் அவர் இவ்வளவு சீக்கிரம் கண் விழித்திருக்கமாட்டார். இதை நேரே அவர் கையிற்கொடுத்து, "சரஸ்வதி அழுதுகொண்டிருக்கிறாள். உங்களை உடனே கையோடு அழைத்துவரச் சொன்னார்கள்" என்று சொல்லு. [சமையற்காரன் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு செல்கிறான். அவன் சென்ற பின் சரஸ்வதி தனிமையாக] அச்சண்டாளன் வீட்டில்தானிருக்க வேண்டும். திலகவதியை எங்கே ஒளித்து வைத்திருப்பானோ தெரியவில்லை. ஹா! ஈசனே! என் நேசமுள்ள திலகத்திற்கு யாதொரு தீங்கும் ஏற்படாவண்ணம் நீயே ரட்சிக்க வேண்டும். [ஒரு நாற்காலியில் அமருகிறாள்.]

[கிருஷ்ணகாந்தன் வருகிறான். சரஸ்வதி எழுந்து அவன் முன் சென்று முழந்தாளிட்டுப்பணிகிறாள்.]

கிரு: நான் கனவு காண்கிறேனா?

சர: என்னை மன்னித்தருளவேண்டும். நான் பாதகி. தங்களுக்குப்பெருந்துரோகம் செய்தேன். தங்களைப்பலவாறு ஏசினேன்; விவாகத்தையும் தடைப்படுத்தினேன். என் தந்தை மனச்சோர்வுற்று யாது சொல்வதெனத் தோன்றாதவராயக் கொடைக்கானல் சென்றுவிட்டார். தாங்கள் என்னை மன்னித்ததாக ஒரு வார்த்தை கூறாவிடில் நான் உயிர் வாழமாட்டேன்.

கிரு: [தன்னிரு கரங்களாலும் சரஸ்வதியைத்தூக்கி நிறுத்தி] உன்னை மன்னித்தேன். என்னை நீ மணம் செய்துகொள்வாயா?

[சரஸ்வதி மௌனமாக நிற்கிறாள்.]

கிரு: ஏன்! மௌனம் சாதிக்கிறாய்? கடலில் மழை சொரிந்தது போல் அன்று பிரசங்கமாரிகள் பொழிந்தனையே இன்றேன் உன் நா எழவில்லை?

சர: என்னைத்தாங்கள் மன்னிக்கவேண்டும்.

கிரு: மன்னித்தேன், மன்னித்தேன், மன்னித்தேன். இன்னும் எவ்வளவு முறை சொல்லவேண்டும்?

சர: மனதில் யாதொரு வருத்தமும் இருக்கக்கூடாது.

கிரு: இல்லை, வருத்தம் யாதொன்றுமில்லை. என்னைக்கண்ணெடுத்துப்பார்.

சர: [சற்றே நிமிர்ந்து] அன்று நான் கூறியதனைத்தையும் தாங்கள் மறந்துவிடவேண்டும்.

கிரு: அதை அன்றே மறந்துவிட்டேன். எனக்கு ஒன்றும் ஞாபகத்

தில் இல்லை. உன் தந்தைக்கு உடனே தந்திகொடு. நமது கல்யாணம் இவ்வாரமே நடைபெறவேண்டும்.

சர: நல்லது. அவ்வாசனத்தில் அமருங்கள் [கிருஷ்ண காந்தன் உட்காருகிறான்] தாங்கள் ஒழுங்காக நடப்பதாயிருந்தால்.....

கிரு: நான் என்ன ஒழுங்கு தவறி நடந்தேன்?

சர: உலகில் யாரும் செய்யாததொன்றையும் தாங்கள் செய்துவிடவில்லை. எவ்வளவோ பேர் தெரிந்தும் தெரியாமலும் தீயவழி செல்கின்றனர். தாங்கள் இயற்கையாகவே நல்லவர் என்பது எனக்குத்தெரியும். ஏதோ சவகாச தோஷத்தால் தீய வழி சென்றுவிட்டீர்கள். இனிமேலாவது ஒழுங்காய் இருந்தால் போதும்.

கிரு: நீ மனதில் எதையோ எண்ணிக்கொண்டு பேசுகிறாய். உள்ளதைச்சொல்.

சர: என்னைத்தாங்கள் மணப்பதாயிருந்தால்............

கிரு: மணப்பதாயிருந்தால் என்ன செய்யவேண்டும் சொல்.

சர: சொல்லட்டுமா?

கிரு: சொல், தாராளமாய்ச்சொல்.

சர: கோபிக்கமாட்டீர்களே?

கிரு: இல்லை, கோபிக்கமாட்டேன்.

சர: தாங்கள் என்னைத்தவிர யாரையும்...............

கிரு: உன்னைத்தவிர யாரையும் விவாகம் செய்துகொள்வதில்லை இதில் ஏன் உனக்குச்சந்தேகம்?

சர: விவாகம் செய்யாவிட்டாலும்....சும்மாகூட....யாரையும்........

கிரு: சும்மாவுமில்லை-நிஜமாகவுமில்லை. உன்னைத்தவிர வேறு யாரையும் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை.

சர: சத்தியமாய்?

கிரு: ஆம், சத்தியமாகவே சொல்கிறேன்.

சர: இம்மாதிரி எத்தனைபேரிடம் சத்தியம் செய்திருக்கிறீர்கள்?

கிரு: இல்லை-யாரிடமுமில்லை. உன்னிடமே முதல் தடவையாகச் செய்கிறேன்.

சர: இரண்டாந்தடவையாக யாரிடம் செய்வீர்கள்?

கிரு: இல்லை, ஒரு முறைக்குமேல் மறுமுறை செய்யமாட்டேன் இது சத்தியம்.

சர: நிச்சயமாகவா?

கிரு: நிச்சயம்.

சர: அப்படியானால் ....

கிரு: அப்படியானால் என்ன சொல்லு. என்னைக்கல்யாணம் செய்து கொள்வாய் அல்லவா?

சர: அவளை நீங்கள் துரத்திவிடவேண்டும்.

கிரு: அவளை என்றால்? எவளை?

சர: அவளைத்தான்.

கிரு: வீணாக விளையாடாதே.

சர: சரி, ஆனால் போங்கள். நான் உங்களைக்கல்யாணம் செய்து கொள்ளமாட்டேன். [போகிறாள்]

கிரு; [எழுந்து ஓடிப்போய் அவள் கரத்தைப்பற்றி] கண்ணே! கோபியாதே. சொல்வதை விபரமாகச்சொல்.

சர: [அவன் முகத்தை உற்றுப்பார்த்து] திலகவதியை உடனே அவள் கணவனிடத்தில் ஒப்புவித்து விடுங்கள்.

கிரு; ஹா! மோசக்காரி! இதை அறியவா என்னை இங்கு வரவழைத்தாய்?

சர: அறிவதற்காகவல்ல. ஏற்கனவே அறிந்ததனுல்தானே சொல்லுகிறேன். தாங்கள் அவளையும் வைத்துக்கொண்டு என்னையும் எப்படி மணப்பது? நீங்கள்தான் நியாயத்தைச்சொல்லுங்களேன்.

[கிருஷ்ணகாந்தன் ஒன்றும் பேசாது நிற்கிருன்]

சர: ஏன் வாய் திறவாமல் நிற்கிறீர்கள்? அவளை விடமனமில்லையோ!

கிரு: திலகவதியை நான் கூட்டிச்சென்றதாக உன்னிடம் யார் சொன்னது?

சர: அதெல்லாம் எதற்கு? என்னைத்தாங்கள் மணப்பதானுல் ஊரில் உள்ளவர்கள் தங்கள்மீது யாதொரு பழிபாவமும் சொல்லாமல் இருக்கவேண்டும். ஆதலால் அவளை எவ்வளவு ரகசியமாய் அழைத்துச்சென்றீர்களோ அதே போல் உடனே அனுப்பிவிடுங்கள்.

கிரு: அவளை அனுப்பிவிட்டால் என்னை மணமுடித்துக்கொள்வாயா?

சர: அவளை அனுப்பினுல் மட்டும் போதாது. மற்றும் தாங்கள் உறவாடிக்கொண்டிருக்கும் தாசிவேசிகளையும் துறந்துவிட வேண்டும்.

கிரு: அப்புறம்?

சர: அப்புறமென்ன-அவ்வளவுதான்.

கிரு: சரி, உன் வார்த்தையை நான் நம்புகிறேன். திலகவதியை நான் ஒன்றும் செய்யவில்லை. கிழரத வீதியில் தாசி மீனும்பிகை வீட்டில் அடைத்துவைத்திருக்கிறேன். பழிக்குப் பழி வாங்கவேண்டுமென்றே அவ்வாறு செய்தேன். இதோ சென்று அவளைத் தூக்திவிடுகிறேன்.

சர: [பெருமூச்சுடன்] நல்லது வேகமாகப்போய் வாருங்கள்.

கிரு: வந்ததும் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்வாயா?

சர: ஆஹா! சந்தேகமென்ன? முறைப்படி முருகேசன் மகள் பார்வதியைத் தங்கட்கே மணமுடித்து வைக்கிறேன்.

கிரு: [திடுக்கிட்டு] அடி காதகி! எல்லா உளவும் அறிந்து என்னைப் பரிகசிக்கிறாய்?

சர: காதகி நானல்ல. ரக்கப்பூணனை நான் சாராயத்தைக் கொடுத்துக் கொல்லவில்லை.

கிரு: ஹா! நீ என்னைக்கொல்கிறாய். கொல்கிறாய்- நீ என்னை மணந்தது போதும்- போதும். நான் செல்கிறேன்.

சர: சரி, செல்லும். திலகவதிக்கு ஏதேனும் தீங்கு ஏற்படும் பட்சத்தில் நீர் சர்வ நாசம் அடைவீர் என்பதுமட்டும் ஞாபகமிருக்கட்டும்.

[கிருஷ்ணகாந்தன் பேசாது செல்கிறான். அவன் சென்றதும் சரஸ்வதி பரபரப்பாய் ஒரு கடிதமெழுதுகிறாள்]

சர: தாமோதரா! தாமோதரா!!

[தாமோதரன் வருகிறான்].

இதோ, இக்கடிதத்தை வேகமாய் எடுத்துச்சென்று சர்க்கில் இன்ஸ்பெக்டரிடம் கொடுக்கவேண்டும். வழியில் எங்கும் நிற்கக்கூடாது. ஒரே ஓட்டமாய் ஓடவேண்டும்-தெரியுமா?

தாமோ: நல்லது அம்மணி! தாங்கள் அவ்வளவு தூரம் சொல்ல வேண்டுமா? [ஓடுகிறான்].

சர: [தனித்து] ஒழிந்தான் காதகன். அவனை நல்வழிப்படுத்துவது எங்ஙனம் என்றால் ஆகும்? செல்வத் திமிர்கொண்டு சதா பெண்களை வேட்டையாடுவதே தன் தொழிலாகக் கொண்டுள்ள இவனை தண்டியாதுவிடுதற் சரியன்று. அன்று பூங்காவனத்தில் எவ்வளவோ பச்சாத்தாபப்பட்டவன் போலவும், மனந்திரும்பியவன்போலவும் ஏதேதோ பிதற்றினான். பின்னர் இன்று திலகத்தை வஞ்சித்து, வேசி வீட்டில் அடைத்துவைத்திருக்கிறான். துரோகி ஒழிந்தான். ஒழியட்டும். இத்தகைய துஷ்டர்கள் நாடோறும் மலிவுற நமது சமூக நிலை இடந்தந்தவண்ணமாய் இருக்கிறது! தீய வழி

செல்வோரிடமே திரண்ட செல்வமும் சார்கிறது. நற்குண நற்செய்கையாளர் பசியாலும், பிணியாலும், செப்பறிய துயர்பட்டு வாழ்கின்றனர். உழைப்போருக்கு இந்நாட்டில் உணவில்லை. உழுத்தவர்க்கோ ஒரு குறைவுமில்லை. ஒருவன் எவ்வளவு அயோக்யனாய் இருந்தபோதிலும் அவனிடம் பணம் இருந்தால் போதும். சகலரும் அவனையே வாழ்த்துகின்றனர். போற்றிச்சேவை புரிகின்றனர். இன்று உலகத்தை ஆள்வது பணந்தான். சந்தேகமில்லை. பணமுள்ளவனுக்கு எல்லாமுண்டு. அவன் எதையும் செய்யலாம். ஏழைகள் பெண்ணை அபகரிக்கலாம். ஏக சக்ராதிபதியாயும் வாழலாம். அவன் சாம்ராஜ்யங்களையும் தோற்றுவிக்கலாம். அழிக்கலாம். மக்களை வாட்டலாம், வதைக்கலாம், வீழ்த்தலாம். ஆஹா! பணத்தின் மகிமையே மகிமை! பணமில்லாதவன் பிறரால் தாழ்த்தி மிதிக்கப்பட்டு நீசனாய் வாழவேண்டும். இந்நிலை என்று மாறுமோ-நானறியேன். ஏழைகள் துயர் என்றொழியுமோ-யாரறிவார்? சத்தியம், தர்மம், சமத்துவம், அன்பு, மெய்க்காதல் இவை உலகில் என்று செழித்தோங்குமோ-நானறியேன். வஞ்சகம், பொய்மை, தன்னலம், சூது, வறுமை, துன்பம் உலகினின்று என்றொழியுமோ-யாரறிவார்? பேதாபேதங்கள், உயர்வு தாழ்வுகள் உள்ளவரை உலகம் சீர் பெறுதல் முடியாது. அதற்கு மாறாக நாடோறும் பஞ்சமா பாதகங்கள் மலியும், சன்மார்க்க நெறிகள் மலியும், கிருஷ்ண காந்தர்கள் கோடிக்கணக்கில் தோன்றித்தோன்றி அட்டூழியம் புரிவர். இதை என்னால் எப்படி தடுக்கமுடியும்?

16-வது காட்சி.

இடம்: மீனாம்பிகை வீடு.

சமயம்: காலை.

[மீனாம்பிகையும், பார்த்தசாரதியும் ஒரே சோபாவில் வீற்றிருக்கின்றனர்].

மீனு: எங்கே, நமது ஜமீன்தார் இன்னும் வரவில்லையே? அந்த அரக்கி என்ன ஆனுளோ தெரியவில்லை. அவள் அருகில் செல்ல எனக்குப்பயமாயிருக்கிறது. அம்மாடி நேற்று என்னை என்ன பிடிபிடித்தாள்!

பார்த்: அவள் இருந்தாலென்ன-தொலைந்தாலென்ன? நாம் புதுச் சேரிக்குப்புறப்பட்டுப்போய்விடுவோம்.

மீனு: இவளுக்கு ஏதாவது ஒரு வழி செய்துவிட்டுத்தான் போக வேண்டும். எனக்கென்னமோ பயமாய் இருக்கிறது. இரவெல்லாம் நான் தூங்கவேயில்லை. அவளை அவிழ்த்துத்துரத்தி விடுவதுதான் நல்லது. போலீசார் வந்துவிட்டால்........?

பார்த்: யாரடி வரப்போரா? நம்ம சொர்ணமுத்துதானே!

மீனு: சொர்ணம், வர்ணம் எல்லாம் அவர்கள் கையில் அகப் பட்டா மாறிப்போய்விடும். நீங்கோ சீக்கிரம்போய் ஜமீன் தாரை அழைத்து வாருங்கோ.

பார்த்: சரி, அழைச்சிண்டு வரேன். நீ இதைப்பெரிதாய் வியா பகம் செய்யாமலிரு [சென்று கதவைத்திறந்ததும் முருகப்ப செட்டியார் உள்ளே நுழைகிருர். இருவரும் ஒருவர் மீதொருவர் மோதிக்கொள்கிருர்கள்].

முரு: சரிதான்-நான் கேள்விப்பட்டது சரியாய் முடிந்தது. யாரடா நீ? உனக்கு இங்கென்ன வேலை?

பார்த்: அதே கேள்வியைத்தான் நானும் கேட்கிறேன்.

முரு: என்னையா கேள்வி கேட்கிருய்? [எட்டி ஒரு உதை கொடுக் கிருர்].

[பார்த்தசாரதி கீழே வீழ்ந்து, எழுந்து ஓடிப்போய் ரகசிய அறையைத்திறந்து அதனுள் நுழைந்துகொள் கிருன்].

மீனு: உங்களுக்கென்ன இவ்வளவு ஆத்திரம்? அவர் யார் என்று கூட விசாரியாமல் இப்படி உதைத்தீரே!

முரு: ஓஹோ! யாரென்று விசாரிக்கவேண்டுமா? யாரடி அவன்? இங்கேன் வந்தான்?

மீனு: போதும், உங்கள் அடி வரிசையெல்லாம் கொஞ்சம் நிறுத்துங்கள். என் வீட்டிற்கு யாரும் வருவா. உங்களுக்கு இஷ்டமில்லையானுல் மரியாதையாய் வெளியே போகலாம்.

முரு: [பெருமூச்சு விடுகிருர்] நான் போவதா? வருஷம் ஐயாயிரம் கொட்டிக்கொடுத்துவிட்டு. நாயே! பேயே! உன்னைக் கொன்று பிணமாக்கிவிட்டுப் போகிறேன். [தலை முடியைப் பிடித்து இழுத்துக்குத்துகிருர். இச்சமயம் கிருஷ்ணகாந்தன் உள்ளே பிரவேசிக்கிருர். இருவரும் கை கலந்து கொள்கின்றனர். மீனும்பிகை பயந்து ஒரு மூலையில் சென்று நிற்கிருள். முடிவில் இருவரும் விலகி எட்ட நின்று தத்தம் கைகளில் ரிவால்வாரை எடுத்துக்கொள்கின்றனர்].

கிரு: உன்னை இதோ சுட்டு வீழ்த்திவிடுவேன். மரியாதையாய் வெளியில் போய்விடு.

முரு: சுட்டா சுடு. இருப்பதைவிட இறப்பதே மேல்.

கிரு: ஆஹா! அப்படியா? இதோ பார் [சுடுகிருன். செட்டியாரும் ஏக காலத்தில் சுடுகிருர். இருவரும் மார்பில் குண்டடிபட்டுக்கீழே வீழ்கின்றனர். சர்க்கில் இன்ஸ்பெக்டரும், நாலைந்து போலீஸ் சேகவர்களும் உள்ளே நுழைகின்றனர்].

சர்க்: பேஷ்! உத்தம க்ஷத்திரிய வீரர்கள். [குனிந்து இருவரையும் பார்த்துவிட்டு] போர்முனையில் இறந்தார்கள். தாசி வேசி இல்லம் நாடுவோர் கதியும், பிறர் மனை இச்சிப்பார் கதியும் இறுதியில் இவ்வாறே முடியும். அரசாங்கத்தின் சட்டத்தினின்று இவர்கள் தப்பினுலும், இயற்கையின் சட்டதிலிருந்து இவர்கள் தப்பமுடியாது. இவர் செங்கோட்டை மைனர். இவர் யார்? நாட்டுக்கோட்டை செட்டியார். ஆஹா! கழுத்தில் பாருங்கள் உருத்திராக்ஷம்! சிவப்பழங்கள்! வைப்பது வட்டிக்கடை, கட்டுவது கோவில், கிடப்பது வேசியின் காலடியில். ஒன்றிற்கொன்று எவ்வளவு பொருத்தம். [மீனுவைப் பார்த்து] யாரடி அங்கே? வா இப்படி. திலகவதி எங்கே? உடனே சொல்.

மீனு: [நடு நடுங்கிக்கைகளைப் பிசைந்துகொண்டு] எனக்குத்-தெரி-யாது.

சர்: தெரியாதா? இதோ தெரியவைக்கிறேன். [ஓங்கி கன்னத்தில் ஒரு அறை வைக்கிறார்].

மீனு: இதோ! இதோ!! காட்டிவிடுகிறேன். என்னை அடிக்காதீர்கள். இரகசிய அறையைத் திறந்துவிடுகிறாள்].

சர்: [பெரும் வியப்புடன்] உள்ளே நுழைந்து இலகவதியின் கட்டுகளையெல்லாம் அவிழ்த்து வெளியே அழைத்துவந்து ஒரு சோபாவில் உட்காரவைக்கிறார். பார்த்தசாரதி மெள்ள வெளியே எட்டிப்பார்க்கிறான். நாலைந்து சேவகர்களைக் கண்டதும் பயந்து உள்ளே மறைந்துகொள்கிறான்]. டேய்! 402. அவனைப்பிடித்து வெளியே இழுத்துவா.

[சேவகன் பார்த்தசாரதியை நெட்டித்தள்ளிக்கொண்டு வருகிறான்].

சர்க்: [மீனும்பிகையை சுட்டிக்காட்டி] இவளையும், இவனையும் ஸ்டேசனுக்கு அழைத்துச்சென்று லாக்கப் செய்யுங்கள். பத்திரம். [மற்றிரு சேகவர்களைப்பார்த்து] நீங்கள் இருவரும் இங்கு ஜாக்கிரதையாகக் காவல்புரிந்துகொண்டிருங்கள். [இலகவதியைச்சுட்டிக்காட்டி] நான் இந்த அம்மாளை அழைத்துச் செல்கிறேன். [பின்னர் சற்று நிதானித்து] இல்லை. 402! நீ உடனே சென்று இந்த அம்மாளுடைய கணவர் ராமமூர்த்தியை அழைத்து வா. [சேவகன் செல்கிறான். பார்த்தசாரதியைப்பார்த்து] ஓய்! பிராமணோத்தமரே! உமது குலமென்ன? நீர் செய்யும் தொழிலென்ன?

பார்த்: எல்லாம் சமூகத்துக்குத் தெரிந்ததுதானே! கலியின் கொடுமை வேறென்ன?

சர்: கலியின் கொடுமையா? அயோக்யப்பயலே இரு உன் பல்லை உடைக்கிறேன்.

பார்த்: நாலைந்து பல் ஏற்கனவே பொய்ப் பல்லாத்தான் இருக்கு.

சர்: மூடு வாயை.

பார்த்: தெரியாதவர்போல் பேசுரேளே!

சர்: சீ, கழுதை!

பார்த்: வையுங்கோ, வேண்டியவரையிலும் வையுங்கோ. உங்க வாயால் வருகிற வெசவெல்லாம் நேக்கு ஆசீர்வாதம்.

சர்: நீ உள்ளே என்ன செய்துகொண்டிருந்தாய்?

பார்த்: அந்தப்பாபி செட்டிப்பயல் என்னை எட்டி உதைத்தான். விழுந்தடித்து உள்ளே போய் நுழைந்துகொண்டேன்.

[ராமமூர்த்தியும், சேவகனும் பிரவேசிக்கின்றனர். ராமமூர்த்தியைக்கண்டதும் திலகவதி எழுந்துநிற்கிருள். இருவரும் ஆலிங்கனம் செய்துகொள்கின்றனர்].

17-வது காட்சி.

இடம்: கிருஷ்ணகாந்தன் மாளிகை.

சமயம்: பகல்.

[கிருஷ்ணகாந்தனின் தாயார் கமலவேணி தனிமையாக வீற்றிருக்கிருள்].

கம: [வானத்தை நோக்கி] கிருஷ்ணகாந்தா! கிருஷ்ணகாந்தா!! எனதாருயிர் செல்வமே! அருந்தவப்புதல்வா! அன்னையாகிய என்னை நீ இவ்வாறு அலறவிட்டுச்சென்றது அழகாகுமா? சகல சம்பத்தும் படைத்து சகமனைத்தும் கட்டியாளத்தக்க குடும்பத்தில் ஜனித்து, சண்டாளர்கள் கூட்டுறவில் கலந்து, இன்று சகலரும் பரிகசிக்க வேசி இல்லத்தில் வீழ்ந்து மடிந்தனையே! இதற்கா உன்னை பத்து மாதம் சுமந்து, நொந்து பெற்றெடுத்துப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தேன். உன்னால் செங்கோட்டை அரண்மனை சீருஞ் சிறப்புடன் செழித்தோங்குமென்று நினைத்தனனே! அட பர்லகா! உனக்கு

முன் நான் இறந்திருக்கலாகாதா? பேய்போல் தண்டியாய் இப்பெரிய மாளிகையில் நான் எப்படி வாழ்வேன்? ஆறு மாத காலமாய் அன்ன ஆகாரம் நித்திரையின்றி உன்னையே எண்ணி எண்ணிக்கண்ணீர் வடித்தவண்ணமாய் இருக்கிறேனே. ஈசா! கைலைவாசா! பணத்திலே பிறந்து, பணத்திலே தவழ்ந்து, பணத்திலே வாழ்ந்திருந்த என்னை இன்று நீ பரதேசி ஆக்கலாமா?

[சரஸ்வதியும், பார்வதியும் அவள் மகனும் பிரவேசித்து நமஸ்கரிக்கின்றனர்],

சர: மாமி! இஃதென்ன கோலம்! அத்தான் இறந்து ஆறுமாத காலமாகியும் தங்கள் துயரம் இன்னும் ஆராது, பித்துப்பிடித்தவர்போல் நித்தமும் பிதற்றிப் புலம்புதல் சரியாமோ? ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தீர் என்றபடி தாங்கள் வீணில் அழுதழுது நோவதால் யாது பயன்?

கம: பெற்ற மனம் பித்து-பிள்ளை மனங்கல்லென்பார். ஒரே ஒரு மகன், உயிருக்குயிராய் இருந்தான். கோவிலுக்குப் போவதாயிருந்தாலும்-அம்மா போய் வரட்டுமா-என்று பணிவுடன் கேட்டுச்செல்வான். அப்படிப்பட்ட உத்தமனைச் சண்டாளர்கள் கெடுத்துக் கொலை புரிந்தனரே. நான் என் செய்வேன்?

சர: மாமி! இது தங்கட்டு அழகல்ல. இறந்தவர் எல்லோரையும் நினைத்து நினைத்து அழுவதென்றால் நாம் ஆயிரம் வருஷம் ஜீவித்திருந்தாலும் போதாது. நான் தங்கட்கு எவ்வளவு முறை ஆறுதல் சொல்லுவது?

கம: சரஸ்வதி! உள்ளே நிறைந்து புழுங்கும் துயரத்தை நான் எவ்வாறு சகிப்பேன்? என் மனதை எவ்வளவு திடப்படுத்தியும் என் துக்கம் தணியவில்லையே.

சர: இதோ! தங்கள் துயரைப்போக்குவதற்காகவே இவர்களை அழைத்துவந்திருக்கிறேன்.

கம: [சற்றே விழித்துப்பார்த்து] யாரிது?

சர: முருகேசன் மகள் பார்வதி. அப்பையன் அவள் மகன்-காளிதாசன்.

கம: ஹா! பாவாயி! உன்னை நான் கண்டு பலவருஷங்களாயின. உன் விஷயம் அனைத்தும் சரஸ்வதி கூறக்கேட்டறிந்தேன். உன்னையுமா அத்துஷ்டன் கெடுத்தான்? இதுவா உனக்குப் பிறந்த குழந்தை? ஹா! உலகப்பழியை நானெவ்வாறு சகிப்பேன்?

சர: மாமி! தாங்கள் புலம்புதல் சரியன்று. பழிப்பும் இல்லை-பாவமும் இல்லை. பார்வதியும் அவள் மகனும் இன்று தொட்டு இங்கே வசிக்கட்டும். தர்ம நியாயப்படி அவள் அத்தானுக்கு வாழ்க்கைப்பட்ட மனைவி. அக்குழந்தை காளிதாஸன் இச்செங்கோட்டை மாளிகைக்கு உரிமையாளன்.

கம: நீ அடிக்கடி இவ்வாறே என்னிடம் கூறிக்கொண்டிருக்கிறாய். இன்று இவர்கள் இருவரையும் இங்கு அழைத்தும் வந்துவிட்டாய். நீ கூறுகிறபடியே உலகனைத்தும் கூறுமா?

சர: ஏன் கூறார்கள்? அறிவுள்ளோர் கூறுவார். எண்ணிலா அருந்தவத்தோன் கௌசிக மாமுனிவர் மேனகையைக்கூடி சகுந்தலா பிறக்கவில்லையா? பின்னர், அவள் துஷ்யந்த மன்னனைக் காந்தர்வ மண முடித்து வாழவில்லையா? வேதத்தை வகுத்த வியாசனே பராசருக்கும் சத்யவதிக்கும் பிறந்தவர்தானே? மற்றும் அகஸ்தியர், அஜமுகி, அனுமான், மதங்கன், கர்சன் முதலிய எண்ணற்றோர் காந்தர்வ விவாகத்தால் ஜனித்தவர்களன்றோ. வள்ளியைத் தினைப்புனத்தில் முருகன் கொண்டதுபோல் உமது மைந்தன் பார்வதியை மணந்துகொண்டுள்ளார். தாங்கள் கலங்குதல் முறையல்ல.

கம: சரஸ்வதி! பண்டைக்காலத்தில் நடைபெற்றதாகக்கூறும் கதைகளை நாம் ஆதாரமாகக்கொள்ளலாகுமோ?

சர: ஏன் கொள்ளலாகாது? புராண இதிகாசங்களையெல்லாம் தாங்கள் குப்பையோடு குப்பையாய் ஒதுக்கித்தள்ளிவிட்ட "சுயமரியாதைக்காரர்" போல் பேசுவது சரியாகுமோ?

கம: என் கண்ணே! வழக்கமல்லவோ பிரதானம்.

சர: வழக்கமென்பது வானிலிருந்து தாவிக்குதிக்ததல்லவே? நாமாக அநுஷ்டித்து வருவதுதானே.

கம: ஆம்: நாம் செய்யுங்காரியங்கள் நடைமுறைக்கு ஒத்ததாய் இருக்கவேண்டுமல்லவா?

சர: அத்தை! நான் சொல்வது சொத்தை நெறியல்ல. உத்தமியாகிய உன் நெஞ்சொடு பேசு. என்னெடு பேசாதே. இப்பெண்ணையும் இவன் ஈன்றெடுத்த மகவையும் நீ புறக்கணிப்பையேல் உன் மகனிழைத்த பழி பாவங்களனைத்தும் உன் தலையிற் சாரும். பெற்ருேர் செய்தவினை மக்களைச்சாருமென்பர். ஆனல் இப்போது காலம் தலைகீழாக மாறிவிட்டது. உனது மகன் உனக்கு முன்னரே சென்றுவிட்டதால் அவர் வினையை நீயே ஏற்கவேண்டும். இவர்களை அன்புடன் ஏற்று நீ உபசரிக்கத்தவறுவாயாகில் உலகம் உன்னை ஏசும். உன் நெஞ்சே உன்னைச்சுடும். உன் வாழ்வில் அந்தகாரம் சூழ்ந்து உன்னை அவதியுறச் செய்தான் உன் மகன். இப்புனிதையும், அவள் குழந்தையும் அவ்வந்தகாரத்தைப்போக்கும் ஜோதியாகப்-பெருஞ்ஜோதியாக-இங்கு தோன்றி நிற்கின்றனர். இவர்களை நீ ஏற்க மறுப்பது உனக்கே நாசத்தை விளைவிக்கும். நீ சாகும்போது மனே நிம்மதியற்றுப்பிதற்றுவாய். இது சத்தியம்.

பாவாயி: அம்மணி! தங்கட்குக் குற்றேவல் புரிந்து வாழவே நானிங்கு வந்தேன். உங்கள் சொத்தும் சுகமும் எனக்கு வேண்டாம். என்னைத்தாங்கள் கைவிடுதல் நியாயமன்று. என் முகத்தைப் பாராவிடினும், இச்சிசுவின் முகத்தையாவது பாருங்கள்.

கம: [எழுந்து காளிதாசனை வாரியணைத்து முத்தமிட்டு] கண்மணி! பாவாயி! கலங்கவேண்டாம். நீ மகா உத்தமி! பரிசுத்த மனமுடையவள். சரஸ்வதி கூறுதிருந்தால் நான் உன் நிலையை அறிந்திருக்கமுடியாது. அறிவற்ற தன்மையில் நான் கூறியதொன்றையும் பொருட்படுத்தாதே. உன்னை ஒரு தேவதை போன்றே மதித்து நடத்துவேன். சரஸ்வதி! அவ்வேசி மீனுளின் கதி என்னவாயிற்று.

மாமி! அவளை ஏசாதீர்கள். நான்கு வருஷம் தண்டனை விதிக்கப்பட்டு அவள் வேலூர் பெண்கள் சிறைக்கு அனுப்பப்பட்டாள். . அவளும் ஓர் மாசற்ற மங்கை என்பதை அறிய அதிசயமுறுவீர்கள். தங்கள் கொழுந்தன் கனக ராஜர் சென்னையில் வாசித்துக்கொண்டிருக்கும்போது ஒரு உபாத்தியாயர் வீட்டில் தாமதித்திருந்தார். அந்த உபாத்தியாயரின் ஏக புதல்வி அவள். சின்னஞ்சிறு வயதில் மண முடிக்கப்பட்டுப்புருஷனை இழந்து இளம் விதவையாகித் தாய் வீட்டில் வசித்திருந்தாள் அவளைக்கெடுத்து, வீட்டைவிட்டுக்கிளப்பி ஒரு வேசியாக்கிய பாவம் கனகராஜரைச் சார்ந்ததாகும். கடைசியில் தங்கள் மைந்தன் சொற்கேட்டு அவள் இக்கதிக்கு உள்ளானாள். ஜன்ம தண்டனை விதிக்கப்பெற்ற பார்த்தசாரதியின் நிலைக்கும் நான் வருந்துகிறேன். அவனும் பாவம் நல்ல குடும்பத்தில் பிறந்தவன். வறுமையின் கொடுமையால் அவன் வழிதவறி நடக்கவேண்டியதாயிற்று.

சரஸ்வதி! எல்லாம் நமது மதியீனத்தால் விளைவதே. சந்தேகமில்லை. நீயாவது காலா காலத்தில் மணமுடித்துக் கொண்டு சந்தோஷமாய் வாழ்வாயாக.

மாமி! விவாகத்தை நான் வெறுக்கவில்லை. இல்லற வாழ்க்கையை மேற்கொள்ளாதவர் அலைகொண்ட சமுத்திரத்திற் சிக்குண்டு கரைகாணாது தவிக்கும் கப்பலுக்கு ஒப்பாவார்கள். என் மனதுக்கேற்ற வரன் கிடைப்பானாயின் நான் சாதி குலத்தையும் பொருட்படுத்தாது மணமுடித்து வாழ முழுச் சம்மதமுள்ளவளாயுள்ளேன். ஆயினும், இன்னும் சிறிது காலத்துக்கு நான் விவாகத்தைப்பற்றி யோசிக்கவே தயாராயில்லை. நமது நாடு இருக்கும் நிலைமையை எண்ணுந்தோறும் என் மனம் சோர்வடைகின்றது. நமது நாட்டின் பரிதாப நிலைக்கு அத்தான் கிருஷ்ணகாந்தர் எய்திய முடிவே ஒரு சான்றாகும். திடகாத்திரமும், மனோவலிமையும், அறிவு வளர்ச்சியும் மிகுந்த நமது முன்னோர்களின் சந்ததியில் உதித்த நம் நாட்டவர் இன்று ஆண்மையும், வீரமும், வலிவும் அறவே இழந்து கோழைகளாய், அடிமைகளாய், உணர்ச்சியற்ற

சவங்களாய் வாழும் நிலையில் எனக்கு விவாகமும் ஒரு கேடா? உண்மைக் காதலையும், பரஸ்பர அன்பையும் பொருட்படுத்தாது, பணத்தையும், பதவியையும் யாசித்து கிழவர்களுக்குச் சிறு பெண்களைக் கட்டிக்கொடுத்தலும், பக்குவமடையாத சிறுமிகளைக்கட்டிக்கொடுத்து அவர்கள் தம் புருஷனை இழந்து, இளம் விதவைகளாகி வாலிபர் மத்தியில் வாழ்ந்து துன்புறுதலும், ஆண்டவன் பேரால் பெண்களுக்குப் பொட்டுக்கட்டிப் பலருக்குப் பெண்டிராக்கி அவர்கள் மேகரோகக் களஞ்சியமாய் வாழ்ந்து வருதலும், மதுக்கும், மடுவுக்கும் உள்ள பேதம் போன்ற ஏழை பணக்கார நிலைமையும், பொல்லாத சாதி மதக்கொடுமையும் இவையனைத்தும் ஒழிந்தாலொழிய மக்கள் சன்மார்க்க நெறி கொண்டு வாழ்ந்தியலாது. இந்நாட்டில் விபசாரத்தையும் அதற்கான் செய்யும் நெறி முறைகளையும் ஒழித்து, மக்களும் சமத்துவ, சகோதரத்துவ, அன்புநெறி தாண்டவமாட செய்வதில் என்னாலான சிறிய தொண்டை என்றும்செய்வதாக கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறேன்.

கம: சரஸ்வதி! உன் பொருந்தேற்ற நல்லறிவு படைத்தாய் என் செல்வமே! நீ ஓர் தேவ கன்னிகை என்னால் ஆசீர்வாதமாக உனக்கு நல்லாசி கூறுகிறேன்.

[சரஸ்வதி முழந்தாளிட்டுப்பணிகிறாள், கமலமேகம் தன் இடது கையில் காளிகாளனைத் தாங்கியவனாய் தனது வலது கரத்தை சரஸ்வதியின் தலைமேலுயர்த்தி ஆசீர்வதிக்கிறான். பார்வதி தலைகுனிந்து மௌனமாக நிற்கிறாள். திரை வீழ்கிறது.]

முடிவு.

சாரதா அச்சுக்கூடம், திருப்பூர்.